உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# தாராபுரதலப்புராணம்

இஃது

தாராபுரம் தாலூகா வீமராயர் அக்கிராரங்

கருப்ப பண்டிதர் குமாரரும்

நேடிவ்-டாக்டரும்

சுப்பிரமணியசுவாமி

பிரதிட்டைசெய்தவருமாகிய

## வேலாயுதபண்டிதரவர்களால்

இயற்றியது.

திரிசிரபுரம் எஸ். பீ. ஜீ. காலேஜ

மாஜித் தமிழ்ப்பண்டிதர் சோடசத்வய அவதானம

தி. அ. சோ. இராமலிங்கம்பிள்ளை

அவர்களால் பரிசோதித்து

சென்னை:

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரால்

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

பராபவ௵ மேடரவி.

1906.

உ

# சிவமயம்.

# சாத்துகவிகள்

குமரலிங்கம் குமுணபுரிவாசி

ம-ள-ள-ஸ்ரீ,

**கோ. வி. தி. இராமானுசவையரவர்கள்**

இயற்றிய

**நேரிசையாசிரியப்பா.**

திகழ்மணிகொழிக்குந் தெண்டிரைபுடைசூழ்
மகிதலமதனில் மதிப்புருவளப்பம்
பெருகும்விராடப் பெருமானாண்ட
வருளும்புகழூ மணியுநன்னகர்
பொன்னுநன்மணியும் பொலிவுறுமேடை
துன்னுஞ்சதுமறைத் துகளறுமோதை
கடலெனத்துலங்குங் கலையாவணங்கள்
அடலுறுமகிப ரடிதொழுமோதை
தனவைசியருந் தாழ்குலத்தவருந்
தினமறஞ்செயச்செயுந் திண்பறையோதையு
மகலாச்சேனைக ளணிவீதிகளும்
பகலாயொளிதரும் பன்மணிக்குவியல்
தடமெலாமிடையுந் தனிநனித்தெருக்களும்
வடிவெலாமுருக்கொடு வாய்ந்தபேரரண்
சூழ்தாராபுரத் தொன்னகர்தன்னி
லேழ்கடல்வட்டத் தெங்கணுமதிப்ப
விப்பிரரெவரும் விரும்பித்தொழுங்குரு
சுப்பிரமணிய ஸ்வாமிபதிட்டைசெய்
தியாவருங்களிப்புற் றிகபரசுகம்பெற
மேவருங்கவிவலர் வியந்துரையோற்றக்

கலப்புறுத்தமிழாற் கணிதாராபுரத்
தலப்புராணத்தைச் சமைத்தனனம்மா
முத்தமிழ்ப்புலமையன் மூதுணர்கலைமையன்
சத்தியநிலைமையன் றருமநற்றலைமையன்
நற்றவமுடையா னற்குணமுடையான்
சொற்றவரடையான் சுகமழவிடையான்
பத்திமிக்குடையான் பாவலர்க்குடையான்
சித்திபெற்றுடையான் சீர்மனமுடையான்
பெருப்பணச்சேடனும் பேசறும்புகழ்சேர்
கருப்பணன்றவப்பயன்கதிக்கவந்தோன்
கற்கக்கசடறக் கற்பவைகற்றபி
னிற்கவதற்குத் தகவெனுநீதியான்
மாலாயுதவும் வலக்கைசேர்
வேலாயுதனெனு மிருங்கவிவலனே.

---

உடுமேலைப்பேட்டைத்தாலூகா
குமரலிங்கம் மிராசுதார் ம-ா-ா-ஸ்ரீ,
## நாகப்பகவுண்டரவர்கள்
இயற்றிய
### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீராறுமுகவனிருபாதாரவிந்தமதைச்சிந்திப்போனற்
பேராருங்கவிவலவன்வேலாயுதப்பெயரோன்பிறங்குகொன்றைத்
தாராருமுமைகொழுநன்றண்ணருள்கொண்டுய்யும்வகை தரணியோர்க்கு
காராரும்பொழிற்றாராபுரத்தலத்தின்புராணமதைக்கழறினனே. [க்

---

வீராச்சிமங்கலம் பாரம்பரிய வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ,
இலக்கணக்கவிராயர்
## கந்தசாமிபிள்ளையவர்கள்
இயற்றிய
### அறுசீர்க்கழிநெடிலடி ஆசியவிருத்தம்.

தருவஞ்சினிமூழுமோசனனத்தைக்கொடுக்குமென்றித்தரணிதன்னிற்
கருவஞ்சியிகபரத்தைக்கடக்கவெலாயுதனுங்கவிதைவல்லோன்
பருவஞ்சிறிழற்குருகுமூதுஇருப்பக்கவரிபள்ளிகொண்டும்பண்ணைத்
திருவஞ்சியெனுந்தாராபுரதலமான்மியமொன்றைச்செப்பினனால்.

பழனித் தாலூகா ஆயபுரி ம-ள-ள-ஸ்ரீ,

## தொப்பபிள்ளையவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நலகலைவேதாகமங்களிதுவெனவேனாவலர்கள்போற்றநாளு
மிலகலைகடாவுகடற்புடவியிற்றூராபுரசீரிசைப்புராண
முலகலையாதிருந்துமுத்திபெறுவதனுக்குண்மைநூலிதுவென்றோதப
பலகலைகடெளிவுறுவேலாயுதபண்டிதனன்பாற்பன்னினனே.

---

திரிசிரபுரம் எஸ். பீ. ஜீ. காலேஜ் மாஜித்தமிழ்ப்பண்டிதர்

சோடசத்வய அவதானம் ம-ள-ள-ஸ்ரீ,

## தி. அ. சோ. இராமலிங்கம்பிள்ளையவர்கள்

இயற்றிய

### நிலமண்டில ஆசிரியப்பா.

காரார்சோலைசூழ் தாராநகரெனும்
வஞ்சிவனத்திடை விஞ்சொளியருள்செறி
மகத்துவமேவிய வகத்தியன்கண்ட
அகத்தியநாதன் சகக்குயிரென்ன
முன்னுளோர்வடசொலிற் பன்னியவஃதை
யேற்றுடனுய்ந்துநல் லேற்றமேமிக்குறத்
தமிழ்ப்பாற்படுத்தித் தமிழ்ப்பாவாக்கிக்
கற்றோர்புகழ்ந்திடச் சொற்றனன்றூய
வண்ணல்கருப்பணக் கண்ணியபுண்ணியன்
செய்தவமெலாங்குழீஇத் துய்யபாலக
னுகவேவந்தோன் மாகநாட்டிந்திரன்
எஞ்சிடக்கண்ட வஞ்சகச்சூரனைச்
சாடிப்பொடித்த நீடியவைவேற்
செய்யனமைவுற மெய்பொலியன்பாற்
றளியெழிலாய்ப்புரிந் தொளிர்பிரதிட்டை
செய்துமுக்காலமுஞ் செய்திடப்பூசை
யாதிசைவவேதி யனைநிறீஇச்
சிற்சிலவிழாவினைப் பற்பலநாளும்
நடத்திப்பணித்திடு திடத்தன்குடமுனி
யாயுள்வேதத்தே யுளமுறைகளைக்
கண்டுகைவந்த பண்டிதவலவ

னியலிசைநாடகத் தியல்புடன்கிடந்த
நாலாகலையுணர் வேலாயுதனெனு
நாவலனிந்த நாவலந்தீவினர்
நன்றுநன்றென்றே நவிற்றியேத்திடவே.

---

திரிசிரபுரம் சோடசத்வய அவதானம்
ம-ா-ா-ஸ்ரீ, தி. அ. சோ. இராமலிங்கம்பிள்ளையவர்கள் குமாரர்
**ந. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்**
இயற்றிய
**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

பொன்னிசைபுரிசைவஞ்சிமாநகரிற்பொருந்தகத்தீசர்மான்மியத்தைத்
தென்னிசைத்தமிழாற்சொற்றனனன்குசீரியநாவலருவக்குங்
கொன்னிசையாயுள்வேதமுங்கற்றோன்கோதில்வேலாயுதக்கவிஞன்
மன்னிசைச்சனனக்கடற்கொருவங்கமாமெனயாவருங்கொளவே.

---

திரிசிரபுரம் எஸ். பீ. ஜீ. காலேஜ தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய
ம-ா-ா-ஸ்ரீ, மு. அ. க. அமிர்தம்பிள்ளையவர்கள் குமாரர்
**விருதுபட்டிச்சத்திரியவித்தியாசாலைத்தமிழ்ப்பண்டிதர்**
ம - ா - ா - ஸ்ரீ,
**அ. சுந்தரநாதம்பிள்ளையவர்களியற்றிய**
**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

துதித்தவர்க்கன்புகெய்யகத்தீசர்தோமறுமான்மியக்கடலைக்
கதித்தமந்தரநாத்தாம்பவாவறிவேகசடறுநல்வினையாளாய்
மதித்தணிதமிழ்யாப்பமரியாய்த்தந்தான்மண்ணகப்புலவர்களுண்டு
திதித்தபல்பொருள்களைவைக்குமேலென்னச்செப்பவேலாயுதமாலே.

---

தாராபுரம் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ம - ா - ா - ஸ்ரீ,
**ஊ. ஜே. சக்கரபாணி ஆசாரவர்களியற்றிய**
**ஆசிரியவிருத்தம்.**

சேலாயுதத்திலடுகாலாயுதற்குமடல்சிறிதாய்கினைக்குமரவோன்
சீர்மேவுவேதங்கவாந்துறைசெய்சோமுகற்செற்றுமாமறைகடந்த
மாலாயுதங்கணிறைசாலாயுதத்திலிடுமணிகடமமுட்டையெனவே
மடவன்னமடைகாக்குமஞ்செய்சூழ்வஞ்சிநகர்மான்மியம்வழங்கினனும்
சூலாயுதக்கெதிர்மன்காலாயுதத்தினுயிர்சுழலாதிருக்கும்வகையே
சுரர்கண்டுபேணிநிதமுறைதண்டபாணிதரிசுடரண்டமண்டயாத்தோன்
காலாயுதக்கொடிகொள்சூலாயுதன்மகன்கையாயுதப்பெயரினோன்
காசினியிலாசுமுதனூற்கவிவலோரெலாங்கருதுபுகழமிகுநேரே.

# சாற்றுகவிகள்.

தாராபுரம் இஸ்கூல் ஹெட்மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ,

## கு. ராகவேந்திரராவ் அவர்களியற்றிய

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீருறுமறுகாலினநறவருந்திச்செழுமலர்குடைந்திசைபயிலும்
வாருறுசோலைத்தாரைநன்னகரின்மன்னகத்தீசுரன்புராண
மேருறப்புனைந்தான்கருப்பணநம்பியெழிற்சுதனுஇவந்துற்றே
பார்புகழ்தருவேலாயுதனெனும்பேர்படைத்தநாவலர்சிகாமணியே.

---

தாராபுரம் ம-ா-ா-ஸ்ரீ, தாசரிநாயுடு அவர்கள் குமாரரும்

மிராசுதாரருந் திருக்கோவலூர் ஸ்ரீமான் எம்பெருமானார்

ஜீயர் திருவடி சம்பந்தரும்

ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாததூளியுமான ம-ா-ா-ஸ்ரீ,

## இராமச்சந்திரநாயுடு அவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சீர்பெறுமுருகன்றிருவடிமலரைத்தினந்தியானஞ்செயுந்தீர
னேர்பெறுந்தாராபுரத்திலச்செவ்வேளெழிற்றளிமண்டபமதில்கள்
கார்முகிறவழப்பொருட்சிலவிட்டுக்கட்டியக்கடவுளைப்பதிட்டை
பார்தனிலியற்றியாவரும்புகழ்வேலாயுதபண்டிதகவிஞன்.

### கொச்சகம்.

பேராருந் தாரா புரப்புரா ணம்பிறங்கத்
தேராரும் பாவச் செனனக் கடல்கடந்தே
காரார் களப்பெருமான் கழனீழ லிற்கலப்ப
வேரார் தருகருணை யெய்த வியற்றினனே.

---

உடுமலைப்பேட்டைத்தாலூகா பூவிளைமாநகரம்

விஸ்வநாதப்புலவர் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ,

## முத்துச்சாமிப்புலவரவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

கிரவுஞ்சக்கிரிதடிந்தவறுமுகற்காய்த்தளியியற்றிக்கிருபைசான்றப்
பரவசத்தாற்புலவரகத்திருளகற்றும்விளக்கனசொற்பனுவலாக
விரைசெறிந்தமலர்த்தடஞ்சூழ்வஞ்சிநகர்மான்மியத்தைவிரித்துச்சொற்றுப்
பொருவிலச்சிற்பொறித்துவேலாயுதனுங்குரிசின்மிகப்புகழ்பெற்றானே.

---

# சாற்றுகவிகள்.

தாராபுரம் தமிழ்ப்பண்டிதர்
ஜே. சக்ரபாணி ஆசார் அவர்கள் மாணாக்கர்

## ஜே. கோவிந்தசாமி ஆசாரியவர்களியற்றிய

**எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

திருமருவுங் கழனிதிகழ் சோலை சூழ்ந்த
 திகழ்கொங்கு நாடதனிற் சிறப்புற் றோங்கும்
குருமலைவி பெயர்நகரின் மான்மி யத்தைக்
 கூறினனாற் குகன்கரா யுதத்தி னாமன்
பொருணயமுஞ் சொன்னயமுங் கண்டு நாணிப்
 பொதியமலை தமிழ்முனியுங் குறுக லானான்
பருமணிசேர் படமுடைய சேட னோடிப்
 பாதலத்திற் றெரியாது பதுங்கி னானே.

---

தாராபுரம் ம-௱-௱-ஸ்ரீ, காவேட்டிநாயுடு அவர்கள் குமாரரும்
சாவ்காரருமான

## நாராயணசுவாமி நாயுடு அவர்களியற்றிய

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

சீர்பெறுகழனிசோலைசூழ்திருத்தாராபுரத்திற்சிறப்புற்ற
பேர்பெறுபாலசுப்பிரமணியப்பிரதிட்டைசெய்துபெட்புடனே
யேர்பெறுமந்தத்தலத்தினாண்புராணமியற்றினனெண்டிசையெட்டிச்
சார்பெரும்புகழ்சேர்தருமுயர்வேலாயுதனெனுந்தக்கநாவலனே.

---

தாராபுரம் ம-௱-௱-ஸ்ரீ,

## மூத்தையத்தேவரவர்களியற்றிய

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

பார்புகழுந்தாராபுரச்சரிதமதைத்தமிழ்ப்பாவிற்பகர்வான்றூய
சீர்தவழுநெடுஞ்சடிலச்சிவனீன்றகுமாரனடிநிலவுநெஞ்ச
னோர்பொலியுந்தென்சொல்லிலக்கணவார்கலியையயின்றெழுந்துகொங்க
சீர்திகழும்பொழிற்சங்கப்பயிரைவேலாயுதமால்செழிப்பித்தன்றே. [ன்

---

கொழிஞ்சிவாடி ம-௱-௱-ஸ்ரீ,

## மு. தில்லையப்பபிள்ளை அவர்களியற்றிய

**ஆசிரியவிருத்தம்.**

கதிர்வேற்கணானனமினங்கமலமெனவெணிக்களிகொடுறுநுதலுசியைக்
 கடியம்புசண்பகம்மெனவஞ்சியேசெலுங்கயலளிகண்மூளரிகுவியு
மதிபோற்றுமடவார்களோடேத்தடங்காவயற்புடைகொள்வஞ்சிநகரம்
 வளரும்வேலாயுதப்பண்டிதச்சிம்மம்வகுத்ததலமான்மியங்கேட

டதியாச்சரியத்தின்மாலறி துயில்செய்தானயனிதாரணர்த்தம்மென்றன
னண்டர்நாதன்றேவர்பாடலில்வெறுப்புடையனுகினனகத்தீசுரத்
துதிமிக்கதாராபுரப்புராணப்பெருமைசொல்லவல்லமையிலாமற்
றுலங்குநாவாயிரன்பார்புக்கிடிற்புகழ்சொல்லவென்னுலாகுமோ.

---

கொழிஞ்சிவாடி திருமலைபிள்ளை குமாரர் ம-ா-ா-ஸ்ரீ,

## தில்லையப்பபிள்ளை அவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வாசமுறு மலர்த்துடவை சூழாநின்ற
வளத்தாரா புரமதனில் வாழ்வு மேவும்
பூசுர ரொலாம்வியக்கத் தலப்புராணம்
புகன்றவே லாயுதனும் புலவற்கீயப்
பாசவலை யெறியமனை யுதைத்து வீழ்த்த
பசுபதியும் பொற்கிரியைப் பரிவாய்ப் பார்த்தான்
வாசவனுங் கற்பகத்தை மகிழ்ந்து பார்த்தான்
மாவுரகன் மணிசுமந்து வழிபார்த் தானே.

---

ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சக்கரபாணி ஆசாரவர்கள்
மாணுக்கர் ம-ா-ா-ஸ்ரீ,

## சுப்பிரமணியத்தேவர் அவர்களியற்றிய

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருமருவு செங்நெல்கன்னல் செல்லைச் சேர்ந்து
திகழ்தாரா புரத்தளியிற் சிறப்புற் றோங்கும்
பெருவிடைவா கனவகத்தீ சுரர்மேம் பாட்டைப்
பேசுதலப் புராணமொன்றைப் பெரிது சொற்று
ணிருநிலமீ துறைபவர்மா பவங்க ணீங்கி
யெழின்மிகுநற் பதவிநனி யெய்த வின்பாய்ப்
பொருவில்வே லாயுதனுங் கவிவல் லோன்சொற்
புலவரொலாங் களிப்பின்மிகப் புகழுமாதோ.

---

## இந்நூலச்சிடப்பொருளுதவிசெய்தவர்.

அமுதமுத வியவுததி புடைகொளக விடமிடையு
மதிகபுகழ் தித முற்றவ
னமலகம லத்திறைவி யகலமக லாதவரி
யரியதிரு வடியை யடியேன்
றமதுவினை யுமதுபய சரணவரு வருளாலிரவி
தன்முனிம மென்ன வோடத்
தயையினை தரச்செயென வுயருச் சனைசதா
தப்பாது புரி யொப்பிலாச்
சுமைதியமை தருகௌர வக்குலத் திலகனெழில்
துன்னுமுயர் மன்னர் மெச்சுந்
துரைபெரிய காவேட்டி நாயுடு தவத்தில்வரு
தோன்றல்சான் றுண்மை மிக்கோன்
குமுதவாய் மடவார்க டொடருமா மதனனேர்
கொண்டவன் றிண் டோளினன்
கோகனக மாதுவிளை யாடுசெ முகன்சுமுக
குமுணன்வரை யாத கொடையோன்
சமதமுறு மறிஞர்சக வாசனிறை வுறுமகா
சம்பன்ன னும்பர் முனிவோர்
தக்கநா வலர்பிதிர்க ளுக்குமா மனமகிழ்வு
சாரவினி தே செய்பவன்
கமழுமரு மலர்மாலை தழுவுமார் பினன்மிக்க
கற்பகக் காக் கரமுளான்
கணியநா ராயண சுவாமிநா யடுமனக்
கனிவினொடு மினிது துனுநல்
விமயமலை யமையவுயர் மாடநீ டியவளமை
யிசைதிசை யெலா மெட்டுறு
மின்பரிறை யுந்திருத் தாரா புரத்தலத்
தின்புரா ணத்தை யச்சிட்
டுமை மருண ளுமகத் தீசர்பே ரருளினு
லுயர்புத்திரர் பொருள் பூமனை
யோதுமிட காத்திரக லாயுணீ டூழிவரை
யுற்றுவாழ் வுட னேங்கவே.

# சாத்துகவிகள்.

இஃது,

திருக்கைலாசபரம்பரை

பொம்மபுரம் ஸ்ரீ-சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம் - ஈசானியமடம்

ஸ்ரீமத் - இராமலிங்கசுவாமிகளவர்கள் மாணாக்கரும்

சென்னை பச்சையப்பமுதலியார் காலேசு தமிழ்ப்பண்டிதருமாகிய

ம-௱-௱-ஸ்ரீ,

## க. வ. திருவேங்கட நாயடுவினலியற்றப்பட்ட

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறத்தாற்றினின்றொழுகுமைவர்கட்குமோர்தாரையன்பிற்கூட்டி
மறத்தாற்றிற்பயில்பதிற்றுப்பத்தர்கட்குவஞ்சித்துமறைவுகாட்டி
யுறத்தாற்றன்னகத்திருத்திக்காத்தமையாலுலகின்றமுழுவக்தகூறு
நிறத்தாற்றிற்பொலிதாராவஞ்சியெனுநகர்கொங்கினிலவுமன்றே. (௧)

பொன்னாட்டுப்புத்தேளிர்விதந்துதினம்வழிபடூஉம்புரையின்மேரு
வின்னாட்டும்விதுமுடியோனமர்தலத்துளொன்றாகிமிளிருமங்கண்
டென்னாட்டுத்தவப்பேறுவந்தகுடமுனிக்கருளுஞ்சிறப்பினாலே
மின்னாட்டுஞ்சடைப்பெருமானகத்தீசனுமனாய்விளங்காநிற்கும். (௨)

அப்போங்குங்கோடீரவப்பெருமான்சிறப்பினையுமவனருட்கே
யொப்போங்குந்தீர்த்தத்தினுறுபுகழுந்தலமகிமையுள்ளயாவும்
வெப்போங்கும்பிறந்தைதுயர்தவிர்ந்துய்யமன்பதைகள்விரித்துரைத்தான்
செப்போங்குந்தாரைநகர்ப்புராணமெனப்பேர்நிறீஇச்சிறக்கமாதோ. (௩)

ஈருயிருமோருடலிலியங்கிடவந்தேபுலவரிகவாவின்பச்
சீருலவைபடுபஞ்சாப்பறந்திடச்செய்சூரனெனுந்திறலினோனை
யீருடலுமீருயிருமாயியங்கிப்பணிபுரியவிகல்வேலுய்த்துப்
போருடலுங்கர்தவேட்கோர்கோட்டம்புரிந்துமனக்கோட்டந்தீர்த்தோன். (௪)

ஆயுமறிவாளர்புகழாயுள்வேதத்துறையிலாழ்ந்தறிந்தே
யேயுநோய்க்குணனுமுறுதாதுமுதலெண்குணனுமெண்ணியெண்ணி
யாயுமருளத்தனுயிர்க்குறுநோய்தெறுமெந்தையொப்பயாக்கை
பாயுநோய்போக்கமருந்தோவெனுநன்மருத்துதவும்பண்புமிக்கோன். (௫)

அத்தகையோன்யாவனெனில்வேலாயுதக்கவிஞனவன்பாட்டிற்குன்
வைத்தபொருட்செறிவுமணிவாய்ப்புமிகுவாய்ப்பெனவேமதிக்கற்பால
வித்தரையோர்தமிழினிமைதூக்கிடுதற்கேதொரிலக்கியமாயோங்கு
முத்தமிழ்தேர்நமராங்காள்முன்னியதன்பயன்கொள்வீர்முறையிற்றனே. (௬)

---

இஃது

மதராஸ் பியராபீசு டிராபிக் ஓவர்சியராகிய ம-ா-ா-ஸ்ரீ,

## மோசூர் - முனிசாமிமுதலியாரவர்கள்

இயற்றிய

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

**மல்குபுகழ்வஞ்சிநகர்மன்னுந்தாராபுரமென்னுமாதலத்தில்வதியுஞ்சீர்த்தி**
**புல்குமகத்தீசனருண்மான்மியத்தைப்புத்தமுதினினியதமிழ்ப்புராணத்தாலே**
**யல்குதலிலாவன்பிற்புனைந்துதந்தானுயுள்வேதத்தளவுமனைத்துந்தேர்ந்தோ**
**னெல்கலிலாவன்புடைவேலாயுதப்பேருத்தமனுங்கவிவல்லோனுவக்குமாறே.**

---

வேலம்பட்டி ம-ா-ா-ஸ்ரீ,

## முத்துச்சாமிக்கவுண்டரவர்களியற்றிய

### கலித்துறை.

**தே**மலி கொன்றையுங் கங்கையுந் திங்களுஞ் செஞ்சடையிற்
**றா**மலி யும்படி சூடகத் தீசர் தலமகிமை
**கா**மலி நற்கவி வாணர்கொண் டாட நவின்றனனாற்
**பூ**மலி யும்புகழ் வேலா யுதனெனும் புண்ணியனே.

---

శ్లో. శ్రీధారాపురవాసివైద్యతిలకో వేలాయుధాఖ్యస్సుధీః
స్కందావాసగృహంప్రతిష్ఠితమహాన్ సచ్ఛీలవాన్సత్తమః
లోకానందకరాస్పదంవిలసితం ధారాపురీక్ష్మాతలం
మాహాత్మ్యంద్రమిడోక్తపద్యకథితం భక్తిప్రబోధావహం.


ఇతి

24-4-1906 }
మద్రాస్. }

సి. దొరసామయ్యకృతిః.
విద్యావతీ కార్యస్థానం.

சாத்துகவிகள் முற்றிற்று.

---



உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# தாராபுரதலப்புராணம்.

## கணபதிதுதி.

உலகெலாம்புகழுத்தமியாளுமை
யிலகுமைந்தன்கரிமுகத்தெம்பிரான்
சலசநாண்மலர்த்தாள்களைப்போற்றியே
நிலவுநன்மையெலாநெடிதெய்துவாம் (க)

## அகத்தீசுவரர்துதி.

சகத்தானையயின்றுவிந்தந்தனையடக்குந்தமிழ்முனிவன்றன்மேனாளின்
மகத்தானகயிலைசெலவரும்போதம்பாநதியின்மருங்கிற்பாவ
முகத்தானத்தியகையுறப்பிரதிட்டைசெய்துபெரிதுபாசிக்குஞ்சீ
ரகத்தீசருபயதிருவடிமலரைப்பணிந்துதிடவருள்பெற்றுய்வாம். (உ)

## அகிலாண்டேசுவரிதுதி.

பூமேவுகுழல்போற்றிபொற்புமிகுகருணைபொழிவதனம்போற்றி
மாமேவுமறம்வளர்க்கும்வண்மைசெறிதிருக்கரவொண்வனசம்போற்றி
கோமேவுமூவுலகுமீன்றுசிறிதுந்தளராக்கொங்கைபோற்றி
தாமேவுநான்மறைச்செஞ்சிலம்பலம்புமகிலாண்டேசரிதாள்போற்றி. (௩)

## நடேசர்துதி.

அருமறைநான்காலறிவரிதாயடியவரகக்கமலத்தின்
மருவுபேரொளியாய்மயலெலாமகற்றிமால்பிரமாதியர்வணங்கப்
பொருவிலம்பலத்துணடம்புரிந்தருளும்பூம்பதத்துணைகளைப்போற்றி
யொருவருமிக்கால்வரைபெறவரிதாமுயர்வரம்பெற்றுவாழ்வோமால். (௪)

### சமயங்காத்தவிநாயகர்துதி.

நிலவுபொழியொருகோடுமிருசெவியுமுக்கண்ணுநீணல்வாயுங்
குலவுமெழிலைங்கரமுமுடையபிரானடியவர்தங்குறைதீர்த்தாளும்
வலசமயங்காத்தவிநாயகனுபயதிருவடிமாமலரையெந்தன்
றலையிசைவைத்தன்பினொடுதாழ்ந்துவினைபோழ்ந்துநலஞ்சார்ந்துவாழ்வாம். ()

### சுப்பிரமணியர்துதி.

ஆறிருபுயங்கள்போற்றியறுமுகவழகுபோற்றி
யேறுசீரடிகள்போற்றியிணையில்வேன்மஞ்ஞைபோற்றி
வீறுதாராபுரத்தின்மேவியசெவ்வேள்போற்றி
கூறுநான்மறைக்குமெட்டாக்குமரனேபோற்றிபோற்றி. (௬)

### சமயாசாரியர்துதி.

கல்லைநற்புணையாக்கடல்கடந்தென்பைக்காரிகையாக்கிச்செங்கல்லை
யெல்லையில்பொன்னாயியற்றியோரிகளையிலக்கணப்பரிகளாயிசைத்த
வல்லநற்சமயாசிரியர்நால்வர்கடம்மலரடித்துணைகளைவணங்கிச்
சொல்லுதற்கரியசுகமெலாம்பெற்றுத்துரிசெலாமறுத்தியாம்வாழ்வாம். (௭)

### நந்திகேசுவரர்துதி.

இந்திரனயன்மாலமரர்மாதவரையேகுமினின்மின்களென்னாத்
தந்திருக்கரப்பொற்பிரம்பினாற்றுக்கித்தக்கவாமுறையினிலுய்த்துச்
சந்திரமவுலிசந்நிதானத்தின்றலைப்பினின்மகிழ்ந்துவீற்றிருக்கு
நந்தியெம்பெருமான்றிருவடிமலரைநாடொறும்பணிந்துநாம்வாழ்வாம். (௮)

### தண்டியடிகள்துதி.

தந்தைதன்றாளறத்தடிந்துசம்புவி
னந்தலில்பூசனைநடாத்திநாடொறு
மிந்திரன்முதலியதேவரேத்துசீ
ரெந்தைதண்டீசர்தாளிறைஞ்சிவாழுவாம். (௯)

### மற்றையநாயன்மார்துதி.

பூமடந்தையுடல்குளிரப்பொருவிலறங்குதுகலிக்கத்
தூமருவுநீற்றினொளியுலகமுழுவதுந்துலங்கச்
சேமமுறுசைவநெறிசிங்காமலேவளர்த்த
சீமருவுதிருத்தொண்டர்திருவடித்தாமரைபணிவாம். (௧௦)

### குருதுதி.

புல்லறிவுடையேனெனவிகழாதுபோதகன்னூலெலாங்கற்பித்
தல்லறீர்த்தருளிநல்லவாம்வழியிலடியனேன்றனைவிடுத்தாட்கொண்
டெல்லைதீரன்புமின்புமென்மேல்வைத்தெளியனேன்றனையிரட்சித்த
நல்லகுருவின்பொற்றிருவடியைநாடொறும்போற்றிநாம்வாழ்வாம். (௧௧)

## அவையடக்கம்.

குயின்மதுரவிதமொடுகனிகூவக்கேட்டுளங்கொண்டதுபோல
வயிலலகுடையகரடமுங்கூவவாரம்பித்தனவெனலாமா
னயமிகுமுயர்காற்கவிவலர்முனரிஞனமிலாதுசிற்றறிவாற்
செயிரறுதாராபுரத்தலப்புராணஞ்செப்புதற்கமைந்ததுமாதோ. (கஉ)

பொருவறுமதுரையாளும்போதணிமணிப்பொன்றுடை
யரையினிற்புலித்தோலியானைத்தோலினிதணியுமீசன்
பெருமைசேர்கவிஞரோதுகற்கவிபெரிதுபுக்க
திருமணிக்குழைக்காதென்புனசிறுசொலுஞ்சேர்க்குமன்றே. (கங)

## நூல்வரலாறு.

ஆரணமுழுதுமாகமமெவையுமளந்தறிவியாதனுற்றெரிந்த
காரணச்சூதமுனிபிரமாண்டத்திற்கௌவுமாரசங்கிதையி
னோரணும்பூமியினிற்சிவலிங்கமெழிலுறுதானங்களிசைத்துப்
பூரணமாகப்பிரணவமிவற்றின்மகிமையைப்பொற்புறப்புகலும். (கச)

அந்தமுறைப்படிக்குவடமலைராமகோவிந்ததாசனுசை
விந்தைசெறிதளவாய்பட்டினத்தினளகிரிசாமியிவர்கள்வேண்டிச்
சிந்தைமகிழ்ந்துயர்தாராபுரத்தலப்புராணஞ்செப்பெனச்செப்புற்றேன்
சந்தமுறுகவிஞரடித்தொண்டுபுரிதருபெருமைசார்வேன்றனே. (கரு)

---

# நாட்டுப்படலம்.

மங்களமிகுந்ததொழின்மைந்தாமடமாதர்
துங்கமுறுசேயர்பொருடேயபுகழ்துன்னிப்
பொங்குபுனலோடைநதிபொங்கரிவையெங்குங்
கொங்குமலிகின்றதொருகொங்குவளநாடு. (க)

வேதம்விதிநீதிவழுவாதவிறன்மிக்கோன்
மாதர்விழிவேல்பொருதுமாமைமருமத்தோன்
கோதிறனுவின்கொடிகொள்கொங்கனெனவோதுங்
கோதைதனியாண்டதுயர்கொங்குவளநாடு. (உ)

நாவிலுறைமாதுமெழினண்ணுகளினத்தின்
பூவிலுறைமாதுமுறைபொற்புடையதாகிப்
பாவினிலவுங்கவிபகர்ந்தபடிபண்பிற்
கோவியல்வழாதுள்ளதகொங்குவளநாடு. (ந)

வாரியொருவர்க்குழுந்தவாதவமுதத்தை
நேரிலுமிழ்வுற்றபுலவேநெடிதுநேர்வ
சார்கலமெனுநனிலமூன்றினொடுசார்ந்தே
கூர்வனமெலாமுளதுகொங்குவளநாடு. (௪)

வேறு.

வீரைதீர்வருமூவரெனவிலங்கியநாட்டின்
சீரைமேவியசெழும்பொழில்வளங்களைநோக்கிக்
காரெலாங்கடல்புக்குவர்கழித்துநன்னீரைப்
பாரெலாம்பொழிந்துயர்வரையிடையிற்கண்படுவ. (௫)

அருவியின்மூழ்கிமேகவாடைபோர்த்தட்டதிக்கு
மருமலிதேய்வைபூசிமலர்பலவணிந்துவான்விற்
பொருவிலாவாரம்பூண்டுபூமியின்கொங்கைபோலத்
திருமலிவரைகள்யாவுந்திசைதிசைவிளங்கிற்றன்றே. (௬)

பிறைபெருங்கோடாமின்னுப்பிறங்கியமுகபடாமா
நிறைபெருமருவிவெள்ளநீண்மததாரையாநே
ருறுமழையொலிகெர்ச்சிப்பாயோங்கியவோங்கல்யாவுங்
கறையடியென்னத்தோற்றிக்கவின்பெறப்பொலிந்தமாதோ. (௭)

வேறு.

கமுகினொண்காயுந்தாழைநற்பழமுங்கதிர்பிணைந்தினிதசைதினையு
மமிர்துறழ்தேனுங்கறியினொண்கொடியினமைதருமிளகுஞ்செந்துகிருங்
கமைபெறுஞ்சாந்துமகிலுமென்பயறுமுழுந்துமெங்கணுங்கணிப்பிலவா
யமைவுறுமலைவாழ்குநர்பெருவாழ்வினளவையாமுரைப்பரியனவே. (௮)

வேறு.

இன்மைவேடுவச்சிறுமியரிடைகளேயடங்காத்
தன்மையாங்கவர்கொங்கையேயரற்றருட்சிலம்பே
பன்மைசேர்வடுக்கண்களேபழிகிளிமொழியே
யன்மையாங்கவர்கூந்தலேயலதுவேறிலையால். (௯)

வேறு.

வேடர்வன்மனநடுங்கிடப்புரிவனமனைவியர்மென்கொங்கைக்
கோடலாதிலைகொண்கரைப்பிரிவுறுங்கொடிச்சியர்குலைவுற்றே
வாடுகின்றதேயன்றிவாடுவதிலைமற்றவர்மொழிகேட்டுப்
பீடுதேய்தரத்தோற்பனகுயிலலாற்றோல்வியாம்பெயரின்றே. (௧௦)

அற்பமாயினவிரும்பினர்பெரும்பொருளருமையையறிவார்கொல்
விற்கொண்மாமணிசந்தகில்பொன்முதன்மேதகுபொருள்யாவும்
பற்பல்குப்பலாய்க்குவித்தனவுருத்தியர்நிலம்பணும்படிசெய்வித்
தெற்கொள்செந்தினைவித்திநல்லருவிநீர்பாய்ச்சுவரினிதம்மா. (௧௧)

றுறும்பசும்பாம்பெனக்கருவுறீஇயின்றதுட்டர்கள்செல்வம்
போலவேவிமிர்ந்தரியபல்கலையெலாம்புரைதபக்கற்றோங்குஞ்
லநற்கவிவாணர்போலிறைஞ்சியேவிளைதரநெறிவுற்றே
கோலவாளினுலரிந்துயர்வரையெனப்போர்பலகுவிப்பாரால். (கஉ)

துணிவொண்வாற்கதிரிறடியம்போரினைப்பிரித்தகலமதாகக்
ணிதமின்றியேபரத்திவன்கரிகளின்கன்றுகடமைத்தாம்பாய்ப்
பிணிசெய்தேதுவைப்பித்துவைநீத்துநீள்சாற்றினிற்றூற்றிப்பின்
ணமதாகவேகுவிப்பர்வேடுவர்வளமியாங்கழறிடப்பாற்றோ. (கங)

வேறு.

அருவியுமிருவியுமமையுமார்தரப்
பெருவலிவேடுவர்வாழ்பிறங்கல்கண்
மருவறுமுடையுடைஇவைகிற்றென்னவே
பொருவறுகான்வளம்பொற்புமிக்கதே. (கச)

மாயன்வண்சுரபிகண்மேய்த்துவைகலு
மேயுறமரகதசொரூபமெய்யொளி
பாயுறப்பதிந்தனவென்னப்பச்செனத்
தூயவவ்வனமிகப்பொலிந்துதோன்றிற்றே. (கரு)

உழையும்வெவ்வுழுவையுமுயர்பொருப்புநேர்
வழுவையுநாகமும்வதிதலாலும்பொற்
குழைகொள்கூவிளைநறுங்கொன்றையொண்பிறை
தழுவலாற்சிவபிரான்றன்னையொத்தவே. (கசு)

அண்டர்கண்மகளிர்கைசேப்பவாரணி
யொண்டொடிகலிப்பவாநனம்வியர்ப்புறத்
தண்டயிர்கடையொலிதரக்குறும்மொலி
கண்டிதுவதுவெனக்கழறொணாதரோ. (கஎ)

தகைகொளுந்தன்னிலவரகுஞ்சாமையு
மகணியின்செந்நெலும்வணங்கவார்பயன்
மிகவருளிறுங்குகம்பாதிமேம்படு
தொகையகல்சொன்னலுந்துவன்றிமல்குமே. (கஅ)

தொறுவர்வாய்வேய்ங்குழற்றுழனியுான்கழுத்
துறுமணியோதைகன்றிரங்குமொலல்லொலி
முறுவலான்முத்தினைச்செயித்தமொய்குழற்
றெறுவியரகமகிழ்தன்னச்செய்யுமால். (ககூ)

கொண்ணிறைநாளமுங்கடலைக்கொல்லையு
மென்னிறைநாறிமொண்டுவரைமீட்டமு
மொண்ணிறவவரையுமூழ்துமோங்கியே
கண்ணுறுபவர்மனங்களிப்பக்காட்டுமால். (௨0)

ஏற்றைவல்லேபிடித்திட்டபேர்கள்கைக்
கேற்றடங்கிமேடமாதரின்வடர்
தோற்றுகுஞ்சரங்களுந்துணங்குசிங்கமுங்
கூற்றமாங்கண்களுங்கோரசீங்கியே. (௨௧)

தக்கிரகந்திவெண்ணெய்தாரணி
மிக்கிரதம்மெனவிரும்புபாலெயி
னிக்கிரதச்சொலார்கரங்களேர்வளை
மிக்கிரங்கப்பழகுவமென்மேலுமே. (௨௨)

பண்ணுறுகுழலொடும்பாற்குடத்தொடு
மெண்ணுறுங்கம்பொடுமிணையிரும்பொடும்
புண்ணியப்பசுவின்காலோடும்பொற்பொடு
நண்ணுறப்பழகுவபொதுவர்நற்கரம். (௨௩)

என்னைநற்றெய்வதமிருந்தவத்தினால்
வன்னநாபியினொருமலருயிர்த்ததென்
றுன்னிநந்துயிர்த்தமுத்தொளிசெயாநகைத்
தன்னபங்கயச்செய்யவ்வனத்தைச்சூழ்ந்தவால். (௨௪)

வேறு.

கொங்கையெங்கெங்குங்காட்டிக்கொடியிடைநுடங்கக்கொதின்
மங்கலக்குழையுந்தோடும்வயங்கப்புட்குரல்வாய்மன்னத்
திங்களாமுகஞ்செம்மாப்பத்திருந்துகண்மலர்கள்சேர்த்திப்
பொங்கியகாமமாதுபோன்றவப்பொங்கர்மாதோ. (௨௫)

பாணிகற்கடகஞ்சாரச்சிவம்புகாலணிந்துபம்ப
மாணிழற்காஞ்சிசூழ்வலம்புரியுந்திதாழக்
காணுறுமலர்கடோன்றக்காதலர்க்காணச்செல்லும்
பூணுறுகற்பின்மாதர்போன்றனவோடையெல்லாம். (௨௬)

தும்பியும்மிஞிறுந்தேனுஞ்சுரும்பும்பாடகர்களாகப்
பம்புநீர்மதகினோதைமுழவமாப்பார்க்குங்கண்கள்
வம்புறுகுவளையாச்சந்தோடித்துத்தரளம்வாரிக்
கும்பலாய்த்திரைக்கையாலேகொடுப்பனநீர்கொள்கோட்டம். (௨௭)

## நாட்டுப்படலம்

நள்ளவிழ்குவளைவள்ளைகாவிருந்துழக்குங்காரா
னுள்ளுறப்பொழிந்ததீம்பாலுண்டுமொண்கமலப்போதே
பள்ளியாவதிக்குமாதர்பானடைபார்த்தங்கற்று
மெள்ளவிலமரர்நாட்டைமறந்தனவெகினமென்புள். (உஅ)

உம்பர்கொண்டாடுமோம்பிராவதிகங்கையோக
ரிம்பர்கண்டாடும்பொன்னிபவானியென்றிசையாறெல்லா
மம்புராசியைப்போற்பொங்கியலைக்கையாலாரம்வீசிப்
பம்பிநற்பழனமோம்பத்தலைத்தலைத்தலைபரந்துமாதோ. (உகூ)

பொருப்புறுமணியும்பொன்னும்வயிரமுமகிலும்பொற்பார்
திரைக்கையால்வாரிமுல்லையாயர்தம்பதிசேர்த்தன்னோர்
விருப்புறுபொருள்கைக்கொண்டுபழனநேர்மேவமள்ளர்
பொருக்கெனப்பறைகளார்ப்பப்புக்கெதிராகநின்றார். (௩௦)

அட்டமாநாகர்நாடிங்கணித்தெனவுடைப்பினுழப்
பட்டவாமவல்களெல்லாம்வரையிருசிறைபார்மீது
வெட்டிவீழ்த்திட்டவிண்ணோர்வேந்தன்வைகியபொன்னாடு
இட்டவாமெனமண்கொட்டிக்கரைசெய்துகொச்சித்தாரால். (௩௧)

வேசையருள்ளமேபோல்வேறுவேறுடைப்பிற்போர்த
மாசறுவெள்ளமுற்றுமுள்ளுறமடக்கவோடு
மேசறுதெய்வக்கற்பின்மடந்தையரிதயமேபோற்
காசுநித்திலமும்வீசிநடந்தனதடங்காறேறும். (௩௨)

கருப்புறுங்கோதைமாதர்கண்ணெனச்சேல்கடாவ
மருப்பயில்கமலம்பூத்தவளநிறைபழனமியாவு
மொருப்படப்புதுநீர்பாயவுவகைமீதூரமள்ளர்
விருப்புறுங்கள்ளையார்ந்தேர்த்தொழில்செயலூக்கமிக்கார். (௩௩)

வேறு.

இருபெருங்கோடுசேர்செங்கணேற்றினங்
கருநிறப்பகட்டினம்பிணித்துக்காசினி
பெருவிலையாரமார்பிட்டபெற்றியி
னுழவர்ச்சால்பலவுழல்செய்தாரரோ. (௩௪)

உலைவயின்மனத்தினில்வேகமுற்றன
நலமுறகோல்வழிநடக்குந்தன்மைத்தா
யிலகுறசெவிவைத்தாவியென்னவும்
ப[illegible]யிற்பரந்தன. (௩[illegible]

# தாரபுரதலபுராணம்.

ஆனுறழ்வன்புயத்துழவர்சொன்னமே
மானுறவிளைநிலத்துயர்வன்செய்யிடைப்
பூனுறவுழகிரையெழுந்தபூமணி
சேனுறுமின்னெனவிளங்குஞ்செவ்வித்தே. (௧௬)

நாறுசெய்வார்கருநாவனற்கனிச்
சேறுசெய்வார்செழுநீரைச்சேர்த்தியே
பூறுசெய்வார்வித்தியுற்றமிக்கநீர்
காறுசெய்வார்களமர்களென்றுயினோர். (௧௭)

குச்சனக்கொய்யுளையென்னக்கோதறப்
பச்சனச்செழித்தெழுநாறின்பன்முடி
யச்சனப்பறித்தனர்மள்ளராவியா
நச்சினமாதனாயுள்ளிறைந்துளார். (௧௮)

மள்ளருமள்ளர்தம்மாதரார்களும்
விள்ளருமுவகையிற்பழனமேவியே
கள்ளவிழ்குவளைசெங்கமலமாங்களை
யுள்ளறப்பறித்தெறிந்தலவினாரரோ. (௧௯)

இன்னபஃறொழிலெலாமியற்றியேர்பெற
முன்னிவேண்டுவவெலாமுறையின்முற்றியே
மன்னெடும்புவியிசைமகவளர்த்திடு
மன்னையிற்சாலியைப்போற்றினாரரோ. (௨௦)

மரகதநிறங்கொடுகிளைத்துவார்ந்துவா
னிரல்படக்கழுத்திற்பீழ்நிறைந்துமேனிநீஇ
யொருவில்பாற்செறிகதிர்முதிர்வுற்றொண்குல
வரிவையரெனத்தலைகுனிவதானவே. (௨௧)

வேறு.

தண்ணுலாங்கழனிக்கதிர்வளைந்ததிற்றழீஇய
வண்ணநீலமுங்குமுதமுமாநிலமடந்தை
யெண்ணுந்தன்மகவின்மகவினைக்களித்தெழின்மைக்
கண்ணினொற்றிவாய்முத்தந்தந்தெனக்கவின்காட்டும். (௨௨)

முன்னரைச்சரோருகமதழுமழுகியுமெழுந்து
தன்னூற்றேறமுனும்பிறுமகைமுதிர்கதிர்ச்சாலி
சொன்னநற்கலைதெரிந்தபுரோகிதன்குகைநீர்
மென்னக்கைநிலிக்கியுறத்தெளித்தெனவிளங்கும். (௨௩)

# நாட்டுப்படலம்.

இன்னதன்மையார்செக்கென்மூற்றினவெனக்களமர்
நன்னர்நான்சபக்கோளமைதினத்திவினண்ணி
யன்னமானவிகன்னலின்குளம்பழமழகார்
வன்னத்தாலைழயின்காய்மூதல்வரிசையிற்படைத்தார். (சச)

மாகநாயகமாதமும்மழைபொழிவளஞ்சேர்
மேகவாகனமருதநற்றெய்வமேமிகமுப்
போகமும்பொலிவெய்தவெங்களைப்புரப்பாயென்
றேகையோடுவீழ்ந்தேபணிந்தொருங்கெழுந்தனரால். (சரு)

வலக்கைகூன்குயமெடுத்தனர்வல்லவட்டுடையைப்
பெலக்கவேயரையசைத்தனர்பிறங்கியமகிழ்வு
மிலக்கமில்லதோருக்கமென்மேலுமெய்திடநன்
னிலக்கணேநிரைநிரைதொறுகெடிதுநின்றனரால். (சகூ)

வருமுன்றூண்மிசைவீழவுந்தலைவணங்கிடவும்
பெரிதுதானடுநடுங்கவும்பிரியமாய்வளர்த்த
வருமைசற்றுமுற்றனரலர்கன்மனத்தவரா
யரிதல்செய்தனர்மள்ளரிற்கொடியவரியாரே. (சஎ)

வன்மனத்தவர்மள்ளர்மற்றவர்மடவாரத்
தன்மையுற்றனரென்னிற்பெண்டன்மையெத்தகைத்தாம்
பொன்செய்காலணிபுலம்பப்பூங்கரங்களால்வாரி
மென்செய்மார்புறவணைத்தனர்விரைவினிலெடுத்தே. (சஅ)

வேறு.

செறுவினிலரியுந்தொறுக்கிரளினிற்சிறிதுதப்பி
யுறுநறுங்கதிருமுற்றியுதிர்நெலும்பெருக்கினாளும்
வறுமையின்மெலிந்தோர்செல்வம்வாய்ந்தனரென்னிற்றூமே
பெறுபலம்வினைப்போர்பெற்றபேற்றையார்பேசுவாரே. (சகூ)

அரிபெருஞ்சும்மையாக்கிக்கொண்டுவந்தடுக்கமள்ளர்
விரைவுறவெடுத்தடித்தமுதிர்தலைவிரிகிதன்னை
வரைபலவொருசார்தொக்கவாமெனக்குவித்தார்சூட்டைப்
பொருவிலாகாயமுட்டப்போர்பலபுரிவித்தாரால். (ருo)

சூடென்றும்போரிதென்றுந்துகளில்பல்வறமூமாறு
காடெங்குஞ்செழி[illegible]செய்புநல்லசெவ்வெதுக்கின்றுமங்
கூடுவதழகோகா[illegible]த்திடுவமென்றுப்
பீடொன்றுகடகளையையப்பிணித்தலைவிதிப்பித்தாரே. (ருக)

நீண்டவைபோக்கிநெல்லினை நிரைகுவித்தசோய்
வேண்டியகாற்றிற்றூற்றிப்பதடிமேவாதுமாற்றி
மாண்டகுவரியைமேருவரையிற்பல்குப்பலாக்கிச்
சேண்டொடவைக்கோறன்னைத்திசைதொறும்போர்செய்தாரே. (௫௨)

அரசர்தம்பகுதிதந்தேயளவில்பண்டிகளிலேற்றி
நிரைவதிபுதையப்போகிநீண்டமாளிகையினுய்த்தே
யருணிறைதேவரொக்கல்விருந்துதென்புலத்தார்தானென்
றுரைபெறுதருமத்தின்கட்செலவுசெய்துவப்பாரியாரும். (௫௩)

புரையில்மானிடரியாரும்பொன்னெடுமேருவில்லாய்க்
கரமதிலேந்துமெம்மான்கௌரிகாகுத்தன்காமர்த்
திருகணபதிவேற்கந்தன்றிருவிழாமுதலபூசை
பொருவறநடாத்திநாளும்போற்றிப்பொற்பொடுவாழ்வாரால். (௫௪)

செந்நெலுக்கிரெண்பங்காய்த்திசைதிசைசெழித்துநீளுங்
கன்னலுங்கமுகுக்காடுங்கதலியுந்தாழைக்கானு
மின்னெடுமங்குன்மேவமிளிர்பலமலர்குலாவு
வன்னநந்தனமுமின்னாட்டேர்தொறும்வளைவமாதோ. (௫௫)

தண்ணடையீட்டத்தானுந்தழைக்குமாய்ப்பாடியானும்
புண்ணடுங்கிடவெய்வேடர்பொலியுஞ்சிற்றூரினானு
மண்ணிடையளவிலாதவளமெலாமருவலானும்
விண்ணெடுநாடுநாணவிளங்குவகொங்குநாடு. (௫௬)

வேறு.

கதிரோன்றவழுஞ்சையவரைக்கண்ணேபிறந்தகாவிரியா
நதிதான்கிழக்கினேராகநடத்தல்விடுத்துத்தென்றிசையி
னெதிர்கொண்டெழுந்ததெழிற்கொங்குவளங்காணுசையினிலெனிலவ்
வெதிரினாட்டின்வளங்கள்வகுத்திசைத்தலெளிதோவிமையவர்க்கும். ()

முன்னேமச்சநாடென்றுமொழியும்பெருமைதனின்மூழ்கிப்
பின்னேகொங்குநாடென்றுபேசும்புகழைப்பெரிதேற்றுத்
தன்னேரில்லாவிராடபுரமெனவுந்தாராபுரமெனவும்
பன்னும்பெயர்சேர்திருநகரத்தியல்புசிறிதுபகர்கிற்பாம். (௫௮)

வேறு.

இந்தநன்னாட்டின்மானுப்பட்டியென்றிசையூர்வாழ்வோன்
சந்தநற்குவளைத்தார்சேர்தருபுயன்பெரியசாமி
சுந்தரக்கந்தவேட்குத்துலங்கிரண்டாயிரம்பொன்
றந்திரும்புகழார்செல்வத்தண்ணடைசாற்றற்பாற்றே. (௫௯)

நாட்டுப்படலமுற்றிற்று.

# நகரப்படலம்.

மண்டலத்துளபன்னகரெனுமாதர்வரிசெறிங்கண்வழுக்குவதாய்
விண்டலத்துறைவோர்தன்னகரிதுவாமென்றுமேவிம்மியப்பினதா [ர்
யெண்டிசையிடத்துங்கிடைப்பதற்கரிதாம்பொருளெலாஞ்சேர்த்துளவிசைசே
தண்டலைத்திருத்தாராபுரச்சிறப்பைச்சாற்றிடத்தக்கவரியாரே. (௧)

அகலிடமடந்தைக்கரதனச்சிங்காதனங்கொலோவாநகவன்முகமோ
புகல்வதற்கரிதாம்பிறைவடங்கிடந்துபுரள்பெருங்கொங்கையோபூக
மிகமகிழ்கழுததின்மங்கலநாணேவிளங்குமாருயிர்க்குயர்வீடோ
தொகுநலநிறைதாராபுரமென்னுந்தொன்னகரியாதெனச்சொல்வாம். (௨)

பாமகடமக்குவெள்ளைவெண்டோட்டுப்பங்கயம்பச்சைமான்மனைக்குப்
பூமருமரத்தநிறத்தசெங்கமலம்பொன்மணிமுதலியபொருள்க
டாமகிழ்வுடனேநிறைபெரும்பெட்டிதருமதேவதைகுடிகொள்ளற்
காமணிவீடாயமைந்தனதாராபுரமெனுமழகியநகரம். (௩)

கடிகமழ்சாந்துங்கண்ணிறைதொடையுங்காசறையொடுநெடும்புகையும்
பொடிபடவிடித்தசுண்ணமுநெய்யும்பொங்கொளிக்குங்குமமுதலாய்க்
கொடியிடைமடவார்குடைதொறுங்கலந்தகோதகநீர்கொள்கோட்டங்க
ணெடிதுகாணுற்றுப்பூம்படாம்போர்த்துநின்றனவெனத்தனிநிகர்த்த. (௪)

சேடனூற்றுப்பத்தொண்படங்கிழியச்சிவைபலசெறுத்திச்செல்வயிற்றைக்
கோடுகள்கொடுநீண்டெழுமரகதநற்குரகதவிரதமார்த்தாண்ட
னீடியபதம்பிற்படவுடுபதியினிலையொரீஇயரம்பையர்நிதமுங்
கூடியேயாடக்கொழுநிழல்கொடுக்குங்குளிர்பொழில்சூழ்ந்துளதன்றே. (௫)

வண்டுகிண்டிடவாய்விரிந்தவெண்டோட்டுமல்லிகைமுல்லைவண்டாழை
தண்டளிர்கொண்டபாடலமசோகுகண்பகம்புன்னையென்றின்ன
விண்டகன்மலரின்வாசமெண்டிசையும்வியன்கடலுலகமும்விழுங்கி
யண்டர்கற்பகத்தண்டலைமணமடக்கியமாருமகிழவார்தருமால். (௬)

விசும்பையெட்டுவனவெண்மதித்தசும்புமிலைச்சுவவெங்கதிரவன்றேர்ப்
பசும்பரிக்குலத்தினிளைப்பையாற்றிடுவபைம்புயல்பணிபடுதிவலை
யசும்புபாய்தரவேசொரிவனபொதியாசலத்திசைதென்றல்வந்தசைவ
பசும்பொனூட்டவருக்குயர்பழமழகார்பன்மலர்தருவவாம்பகர்கள். (௭)

செழுமழைவிதானமெனநனிதிகழுமாதவிதிரையினிற்றெரியக்
குழுமிவண்டினங்கள்கூடித்திசைபடிப்பக்குயில்குழலொலியினிற்கூவ
விழுமியமயில்கணடிப்பமன்மதனுமிரதியுமகமிகவியந்து
விழிகளிகொளப்பார்த்தரசவீற்றிருப்பவிளங்கியவளங்கொளுமிளங்கா.

சலசநாண்மலருஞ்சலசரக்குலமுந்தங்குதண்டடங்குளந்தன்னிற்
பொலனிருசிறைவிரிந்தருமகவெனப்புட்குலம்பொற்புறுமடவார்
கலைகடற்பான்மையினுற்புலவர்காட்டுமோனதமதென்னு
இலவுளத்திடைசற்றேனுமெண்ணுகிலவினிதினில்வாழ்ந்தவணிருந்த. (௯)

கோடுநீடியநீர்வளங்கொளாமையினுற்கொழுமடற்களமிகவிம்மப்
பீடுசேரிசைநல்லரிகுரற்படவேவாளையின்பாய்ச்சலாற்பெரிது
மூடுறுபூகப்பொதிமிடறுடைத்துமுதிர்சிறைப்புட்குலம்வெரீஇப்போ
யோடநீள்பதுமப்புதுமலரசையவொளிர்தருமெழின்மணியோடை. (௧௦)

ஊரெலாங்கொள்ளக்குறைசிறிதேனுமுறாதுயர்சிவபெருமானுண்
சீரெலாஞ்சிறந்ததிருவடித்தொண்டுசெயுமடியார்கள்செந்தமிழாற்
பாரெலாம்புகழ்ப்பாடுநற்கவியின்பான்மையினிறைந்துபாய்திரைகொ
ணீரெலாநிறைந்துசேலெலாந்தாவாநின்றனநீண்மணிப்பொய்கை. (௧௧)

### புடைநகர் வேறு.

கறையடியுடையசெங்கண்ணகாழ்படு
பிறையிருமருப்பவேழுயர்ந்தபெற்றிய
முறையின்மும்மதஞ்சொரிமூரியானை
ணிறைதராயாத்தகூடங்கணீண்டன. (௧௨)

ஆண்மனஞ்செய்கைசொல்லாசனம்பத
மாண்புறவறிவவாயுவின்முன்வர்வுவ
பேணலர்பிதிருறவெதிரும்பெற்றிய
வேணமைகுரகதச்சாலையெண்ணில. (௧௩)

அரதனம்பதித்தபொற்பலகையார்செரீஇ
நிரைதவளமணிகணீரொளிர்மைய
துரகதம்பூண்டதுன்னலாரைச்சூறையா
டிரதநின்றிடுமிடமெண்ணிலாதன. (௧௪)

வேலொடுவாள்கதைபயிலும்வீரர்விற்
கோலொடுபழகிடுகுமரர்கூர்பிண்டி
பாலமுஞ்சூலமுங்கற்கும்பான்மையர்க்
கேலவேயமையரங்கெண்ணிக்கோடியே. (௧௫)

வாரணக்கூட்டமும்வாசியீட்டமுந்
தேரணித்தொகையுங்காலாட்டிரட்களும்
பாரெலாம்புகழூர்ப்படைப்பண்பமைத்
தேருலாந்தெருவிலர்தஞ்சேரியெண்ணில. (௧௬)

### வேறு.

கண்டைவல்லிடியாமுகபடாமின்னுக்கசட்டுிதந்தாவளமூதுமிற்
கொண்டமார்கற்குத்திண்டிறற்குமரர்கொழுமெழிற்கற்பகநீழ
லண்டர்போற்றிடவீற்றிருத்தல்விட்டெழூந்தேயடலமராடவோனழகார்
கொண்டன்மேற்கொண்டுதெரியலரிரியவருங்குலிசேசனேர்கொண்டார். (கள)

திரைநிரையலவீதுலகெலாந்தாவித்திரிதரும்பெருவலிசேர்ந்த
பரிநிரையெனவேபகர்துரகதமேற்கொண்டுதுண்டிடும்பலவீரர்
நிரைகவுரிதகமாக்கிரந்திதம்வல்சிதம்புரோசிதம்புலுதமென
வுரைநடையுடையசடிலமேற்கொடுவேர்துறுமனகேசனையொத்தார். (கஅ)

உருண்முனையுறிலெவ்வோங்கலும்பூமியுட்புதைதரவெதிரோடு
மிரதமீதேறியணிகலனவிரவெழிலமர்பயிறருகுமரா
சுரர்முனிவரர்பூசுரரொலாந்துதிப்பமேருவைத்தினம்வலஞ்சூழு
மிரவியரனேகர்துரகதவிரதத்திருந்தமருடற்றலையெய்ந்தார். (கக)

வீசுறுநெடுவாட்கசன்றுதப்பித்துமற்றவர்மேலவைவிடுத்து
மாசறுமயில்வேலிடைபடத்தடுத்துமவையவர்மேற்செலவெறிந்து
மாசுகமாசையிடைவிழவறுத்துமாங்கதற்கெண்மடங்கவர்மேன்
மூசுறவிடுத்துங்காளையரியாருமொய்யமர்கற்பரான்முறையே. (உ0)

அடையலருடையவுளநெடுங்கவறுவகைப்படையடைவிற்சூழ்
புடைநகர்வளத்தினறிவிலேனறிந்தபொற்பினிற்சிற்சிலபுகன்றுங்
கொடைகுணம்பொற்பிற்கடவுளரிவராமெனப்புகல்கோதிலாதவர்வா
ழிடைநகர்வனப்பிற்சற்றறிவகையினினிதினிலெடுத்திசைத்திடுவோம் (உக)

### இடைநகர் வேறு.

வண்டுபயிறண்டலையுமாசிலலர்மூசுங்
குண்டுறுதடங்கடிகுலாவுகுளிர்பொய்கைக்
கண்டுமணிமேடைபுளினஞ்செய்மலையார்வுந்
றண்டாவிளையாடவெழிலாகவுளதம்மா. (உஉ)

மாதரடிகொங்கையிவைகட்குநிகர்வாயா
தேதிறனிரும்பிணருமெய்துமரமெல்லாம்
பூதிகழ்தடம்படிமினூர்பொனணிதாங்கி
யேதமைபெறப்பெரிதிணங்கியெதிர்நின்ற. (உ௩)

### வேறு.

கலனுலவுறியலாலழகிலரென்றுகளிப்புற்
றிலசேர்தருதருவெய்திமெிறுமாப்பிரிவுறவே
யலகோவிலவிலைழுதலகியன்கனமார்நிகராகா
துலகோதுவபழியென்னவைக்கொல்கிக்குனிவுற்ற (உ௪)

தடநீர்குடைமடமாதர்களெழில்சேர்தருதளிரே
யடிதோய்புனனடையாலுடையனம்பெற்றகமகிழ்கொண்
டிடநேமியம்புட்கொங்கையிணைதோய்புனன்மூழ்கி
நெடிதாங்களிப்பெனும்வாரியினீத்தத்தமிழ்ந்தனவால். (௨௫)

குழன்மாமழையெனவோவியல்கொடுதன்னினமெனவோ
விழைசேர்முலைமலையென்றுநலிடைமின்னெனவெணியோ
வெழில்சேர்தருமணிமாடமுஞ்செய்குன்றமுமெய்தி
யுழைசேர்விழியவர்காணியவொளிர்மாமயிலாலும். (௨௬)

பொற்பூணணிமடவார்விளையாடும்பொழிலிதனு
ளற்போடுசஞ்சரிப்பேமவரகத்தேமகிழ்வனவா
நற்பாலவைசெயலேமுறையெனநாகணங்கிள்ளை
பொற்பாரரிகுயிலஞ்செவிபுகக்கூவுவவினிதே. (௨௭)

சந்தத்தொயிலிணைமாமுலைதனையொப்பனவாமென்
றிந்திற்பொலிமுகமுத்தெனவேர்வேர்வரவெடுத்தே
யுந்திப்படியடித்தேதுடித்தோடிச்சுழலுறவே
பந்திப்படிவிளையாடுவர்படைகட்கிடைமடவார். (௨௮)

கொடிநேரிடையவரம்மனைகொண்டாடுதொறுந்தம்
விடநேர்விழியதனோடுறவாமேவிடும்வேணேர்
தொடைசேர்குமரர்கணெஞ்சுகணவற்றோடுசுற்றுறும்பொற்
குடநேர்முலைசற்றேதெரிதரவங்குகுளிக்கும். (௨௯)

## வேறு.

சந்தம்பொற்சுண்ணஞ்சிந்தூரந்தானளாஅய்க
கந்தமிக்குறுசலச்சிறிகைக்கொழீஇச்
செந்திருவனையவர்வீசச்சேண்டரு
விந்திரதனுவெனவிலங்கிற்றலரோ. (௩௦)

ஓதருசெம்பொனின்மாடத்துச்சிமேன்
மேதகுமரகதக்குடங்கண்மேவுவ
பூதொகுவேங்கைமீப்பொருந்திக்கார்குறித்
தேதகுமயிற்குலமிருந்ததேய்ந்தவே. (௩௧)

அடர்கொடிமதியகடுரிஞ்சியாரவே
யுடல்வெயர்படமுகிலூரறிப்பார்த்தவி
னடுகடுங்குபுவரைமாடநண்ணியே
சடசடவருவிவீழ்முழுவதன்மைத்தே. (௩௨)

சிறியபொன்னிரதமீச்செம்பொற்போதக
முறுவலித்திளஞ்சிறுறாரமொய்விரீஇ
யுறுபெருங்கோழிமேன்மாதரொண்குழை
யெறியவத்தேருருளாதியற்றுமே. (௩௩)

அங்கலுழ்கொண்கரோடரிவைமார்மகிழ்ந்
திங்கிதலீலையினிசைக்குமின்சொலைப்
பைங்கிளிகூட்டினுட்பயின்றுபன்னிடப்
பொங்கரொண்கொம்பர்மேற்பூவைகற்குமே. (௩௪)

இன்னகர்மடந்தையரினியபாடலு
நன்னடவிசேடமுநாகநாட்டுவாழ்
கன்னியர்கேட்டுநேர்கண்டுங்கற்றிடற்
குன்னுபுநாடொறுமுறுவர்போவரால். (௩௫)

வாடுறுமாலையான்மண்ணின்மென்பதங்
கூடுறுதன்மையாற்கோவிமைப்பதாற்
பீடுறுமானிடப்பிறப்பினரென
வாடகநாட்டவரையந்தீர்வரால். (௩௬)

வடவரைபுரைதருமாடநீடிய
விடைநகர்வளஞ்சிறிதியம்பினேமினிக்
கடல்புடைசூழ்ந்தெனக்கவினுலாவிய
தடமதிலகழ்வளஞ்சற்றுச்சாற்றுவாம். (௩௭)

### வேறு.

அரிதர்தாங்கியகரிகளிலிரண்டடற்கரங்கோத்
துரியவாழுங்கண்டுறவிடுக்கினுமுணர்வரிதாய்ப்
பெரியவாயவன்மீனிறைவுற்றதாய்ப்பிறங்கிப்
புரிசைசூழ்வரக்கிடந்தனபொங்குபேரகழி. (௩௮)

தாழ்ந்துளோருயர்வாரெனத்தக்கவர்சாற்று
மாழ்ந்தமாமொழிப்படியனந்தன்னணிமுடிமேல்
வாழ்ந்துமாமணிமுதற்பொருணிறைந்தெழுவாரி
சூழ்ந்தவாமெனப்பொலிந்தனதுதையுநீரகழே. (௩௯)

பளிங்கரிந்துமென்மேலடுக்குற்றொளிபாயும்
விளிம்பும்வெள்ளமும்வேறுவேறாய்த்தெரிவின்றித்
தெளிந்தமேலவருஞ்சிறியாரொடுதிகைக்கி
னளந்தியாம்புகறகையவோவலகளியக்ழே. (௪0)

கனமிகுஞ்சுறவினத்தொடுமுதலையின்கணங்கண்
மணிதரைப்பெறுதிரிதரப்பயமிகமருவி
யினமதாயிறுலுகளப்பஃபுட்குலமெழுந்தே
நனியரற்றுவவலையொலியடங்கிடநடுங்கி. (சக)

அன்னப்பேட்டொடுசேவலூடிப்பெரிதகன்றே
வன்னத்தாமரையறுபதமிரிதரவைக
றுன்னுசுற்றங்கணீக்கியேதுரிசறச்சுடுதீ
மன்னிநற்றவம்புரிவனவொத்தனமாதோ. (சஉ)

அரியபொன்மணிவெள்ளியிற்செய்குடமலாமற்
கரியமட்கலங்தோய்வில்பூங்காமர்தண்டுறைகள்
பெரியகொங்கைகள்பிறங்கியகுங்குமவிருந்து
புரியமேனிசேர்தெங்கணும்வாசனைபுனைந்த. (சங)

வேறு.

வந்தவர்தப்பலில்வகைசெய்கிற்பதாற்
சந்தணிகனதனக்கணிகைசார்மனை
முந்தலின்மணமகளொட்டலாருருப்
பந்தநற்காவலிற்கன்னியார்க்கினே. (சச)

நித்திலம்பத்தியிற்கோத்தநீர்த்தென
மெத்தியகமுகினில்விரிந்தபாளையுங்
கொத்துறுகுவளையுங்கோதிலாம்பலும்
பத்தியோசனைபரிமளம்பரத்துமே. (சரு)

காசினிபுகழகழ்க்கிடங்கின்கண்ணியம்
பேசினமிதுவளைதெரிந்தபெற்றியி
ஞசினியளந்திடும்பொன்மாமதிற்
றேசுறுசிறப்பிற்சிற்சிலதுசெப்புவாம். (சசு)

யவனர்வல்லபத்தருங்கரும்பொன்னிறுலமைத்த
நவமதானபேயவுணர்பாம்பிவைகணண்ணலரின்
குலையைமொத்துவவெட்டுவவிழுங்குவகோண்மா
தவலிலாதுபாய்ந்தரத்தநீர்குடித்திடுந்தடுத்தே. (சஎ)

அதிகமாயுயர்ந்தவரிழிவடைரென்றறிஞர்
இதமதாமொழிவழியண்டமிசைமிகச்சென்று
நிதமுமாமுகிறன்றலைசுமந்தவாய்நின்ற
நிதியமேகொடுபெரிதியற்றிடுமெமதிலே. (சஅ)

தரியலராருயிருண்பன தானையும்பரியு
மரியயானையுமிரதமுமென்பனவல்ல
பெரியவாங்கிடங்கிடங்கருஞ்சுறவுமேபேசற்
கரியவாமதிற்பொறிகளுந்தடுத்தமென்றே. (சக)

மாதரார்நுதனேர்தனுவினைநணிவளைத்திட்
டேதிலார்கண்மீதனற்கணைபிறைக்கணையிறைக்கு
மோதலாகலாவுருக்குவட்டொடுசிலையோச்சுள்
தாதுபோலச்செம்புருக்குவலூற்றுவதடுப்ப. (ரு0)

இடுகுகைப்பிடித்தெதிர்ந்துவானிடியெனக்கெர்ச்சித்
திடுமடற்படைசுழற்றிடுமெழுமழுவெறியுஞ்
சுடுகனற்கொடுகாய்ந்தநெய்மணற்குவைசொரியுங்
கொடியவாம்படையாயிரங்கோடியிற்கொட்டும். (ருக)

ஒருதரத்தினூற்றுவர்திரட்சதக்கினியொறுக்குந்
திருகுமாமருப்பொண்டகர்சேரலருயிரைப்
பருகுமாறுதாக்குந்திருமதிற்பொறிப்பண்பைப்
பெரிதுசொற்றிடவனந்தற்குமரியபெற்றியவே. (ருஉ)

## வேறு.

குயினுழைமதிலினுன்குவாயிலுங்கோதிலாத
வெயினிலைவயிரக்குன்றம்விழிப்பபோல்வயிரமேய்ந்த
செயிரகல்கதவஞ்சேர்ந்துதேவர்கள்வாசஞ்செய்யு
முயருலகத்தையொத்தவுன்னகர்ச்சிறப்புரைப்பாம். (ருங)

## உண்ணகர் பரத்தையர் வீதி.

சந்தனந்திமிர்ந்ததங்கடனஞ்சிறுவரைகைத்தந்தே
மைந்தர்தந்தனமுந்தங்கடனமுந்தம்வசமாய்வாங்கும்
பைந்தொடிப்பவளச்செவ்வாய்ப்பரத்தையரிருக்கும்வீதிச்
சுந்தரச்சிறப்பிற்சற்றுத்தோற்றியவாற்றிற்சொல்வாம். (ருச)

சந்தனமெழுகியுள்ளாற்பூந்தொடைதாழநாற்றி
வந்தவர்மகிழத்திண்ணைகுங்குமம்வழியவாக்கி
யெந்தநற்சுவரும்போகலீலைச்சித்திரங்களேற்றி
யிந்திரவிபவப்பாயலிலங்குமாலில்லமெங்கும். (ருரு)

தோகைமாரல்குனம்மைச்சுமக்கலாதென்னவீழ்ந்த
மேகலையுகுவெண்முத்தமத்தகமுலைமென்சாந்தம்
வாகுலாமாலைசுண்ணம்வண்டுணக்கிடந்தமுற்ற
மேகலாதரசுமாதையின்மையச்செய்திலங்குமாதோ. (ருசு)

பாதசாலத்தினுறைதமேகலைபரந்தவோதை
தேம்வாய்மிழற்றுமோதைஇன்னரிவீணையோதை
கோதகல்முழவினுறைகுழலெழுமோதையாதி
நாதமுற்றிடலாற்றேவர்நாடுமொப்பாய்நண்ணுதே. (௫௭)

மடநலார்கமழவூட்டுநறும்புகைவானமீப்போய்ச்
சுடரெலாமறைப்பவீங்குமிருளையத்தோகையன்னார்
படர்கலனவிராலவ்வற்பகல்படுத்திடும்பன்னாளுங்
குடிகொள்வான்மதனுந்தேவர்கோனகரனையதொன்றே. (௫௮)

கன்னலங்குதலைமாதர்கரங்குவித்திடுவகண்டே
யின்னலநிறைந்தசாமிகரங்குவித்திடுவர்மாத
ருன்னிநாணொன்றேதோற்பவுளவளந்தோற்பார்கமந்த
ரன்னரினிலாபமெய்துமவரவணிக்கண்யாரே. (௫௯)

முத்தவெண்மாலைநாலுமுற்றமூர்வசிமுன்னான
தத்தரிநெடுங்கணாரைத்தம்வசப்பட்டபேர்க
ளத்தம்விற்விற்கலன்பொன்னுடையனைத்துந்தம்வசமதாக்கு
மித்திறநுங்கட்கில்லையெனநகைத்திடுவபோன்ற. (௬௦)

முலைவிலைசதம்பொனல்குன்மும்மடியதிகம்விற்றங்
கிலையையோரிரவினீத்துப்பிற்பகனேருமாந்தர்க்
கிலகதினிரட்டிவிற்கும்வேசையரிருக்கைசொற்று
நலமலிபொருள்கள்விற்குமாவணநவிலலுற்றும். (௬௧)

## கடைவீதி.

அரியினமூரன்றுதேனுண்ணலர்மலரலங்கறூக்கி
விரியொளிவயிரச்சட்டமேவுவித்துருமக்காலிற்
றெரிதரக்கமுகும்வாழைந்தம்பமுஞ்சேர்த்தியாத்து
மருமலர்சிதறிச்சாந்தான்மெழுக்குற்றகடைகண்மாதோ. (௬௨)

சிற்பநூல்வழிவழாமற்சென்றியோசனைக்கப்பாற்போய்ப்
பொற்புலாமாலைநாற்றிப்பூம்புகைபொலியவூட்டி
விற்கொள்சந்தனத்தானீவியையவிசிதறிமென்பூப்
பற்பலதூவிவாசம்பரவுவகடைகண்மன்னோ. (௬௩)

சீர்செறிபெட்டிவன்றாட்டிறந்தொளிர்மணியுமுத்தும்
பேர்செறிவயிரங்கோமேதகங்குவித்திட்டுப்பின்னு
மேர்செறிதுகிரின்குப்பையிரத்தினவிழையெண்ணின்றி
நேர்செறிதரப்பொன்னாற்செய்கலன்பலநிறைத்திட்டாரே. (௬௪)

பீடுறுமவர்கள்செல்வமனந்தனும்பேசவொண்ணு
நீடுறுகமுகுவாழையிலாங்கலிநிதியத்தாலுங்
தேடருமணிகளானுஞ்செழும்பலமிலைபூவாதி
கூடுறவியற்றிக்கோதில்கடைதொறுநாட்டினாரே. (௬௫)

அளவிறேனிருலின்மூசியாங்கலைகடலினார்ப்பே
யுளவலாவெழுத்துஞ்சொல்லுமொருவருமுணர்தலின்றித்
தளமலியொருவர்மார்பச்சாந்தெழுவர்கடமார்பத்
தளவளாயிடம்பெறுமற்கடையெலாமடைகுவாரே. (௬௬)

இருவினைமூழ்கும்பற்பலுயிருமெம்பெருமானின்பக்
கருணையினல்குமூர்த்தங்கைக்கொடுபெறப்பல்கன்மம்
புரிவபோல்வணிகரெண்ணில்பொற்குவைகொடுத்துத்தாந்தாங்
கருதுபல்பொருள்களுளும்வாங்குவர்களிப்பின்மன்னோ. (௬௭)

வரைப்பொருள்பெரிதென்கோயான்வனப்பொருள்பெரிதென்கோயான்
குரைப்புனனிறையும்பண்ணைகொள்பொருள்பெரிதென்கோயான்
றிரைக்கடலிடத்திற்சேர்த்தசெழும்பொருள்பெரிதென்கோயா
னிரைப்படக்கடைகடோறுநிறைதருபொருளின்மாதோ. (௬௮)

தாம்புரிவினைகட்கேற்பத்தனுகரணாதியாவுந்
தேம்பொதிதருதார்க்கொன்றைச்சிவனருள்செய்வதேபோன்
மேம்படுமாடத்தீட்டும்பொருள்பலவிலைக்கிலாய
மாம்பரிசளப்பர்தக்கதக்கவாறடைவின்மன்னோ. (௬௯)

முன்னரொன்றுரைத்துப்பின்னர்மற்றொன்றுமொழிதல்செய்யும்
பின்னமாமதம்போலாதுபின்சொன்மூற்சொற்குப்பேதந்
தன்னமுமுறாதுவேதஞ்சாற்றுசத்தியம்போல்வேறு
சொன்னிகழ்வுறாதுவிற்கும்விலைதுணிந்தறுப்பரன்றே. (௭0)

வண்ணஞ்சேரிவ்வூர்வாழும்வணிகர்பொன்னறையின்மாட்டு
நண்ணுறுபொருள்குபேரன்பொக்கிசந்தனினுநண்ணு
விண்ணுறுமமரர்வேந்தன்றிரவியவீட்டுமில்லை
யெண்ணருமிவர்தஞ்செல்வத்திசையையாரிசைக்கற்பாலார். (௭௧)

வாரணம்விற்பாரோர்பால்வாம்பரிவிற்பாரோர்பாற்
றேரணிவிற்பாரோர்பாற்றிண்படைவிற்பாரோர்பாற்
றூரணிவிற்பாரோர்பாற்சந்தனம்விற்பாரோர்பாற்
றோரணநிறையும்வீதிச்சுந்தரஞ்சொலவல்லார்யார். (௭௨)

மாங்கனிவருக்கைவாழைவண்கனிமாதர்மாதர்
தேங்கனியிதழின்மேவுந்தீஞ்சுவைதோற்றதீங்கு
வாங்குமினென்னுவிற்குமாதரார்வடிவான்மைந்த
ராங்கதன்விலைபுர்தங்களறிவுந்தந்தவைகொள்வாரால். (எங)

மணிபதியணிவண்மாழைவளைகுழைகடகஞ்சோதி
திணிபிறைவடமுத்தாரஞ்செம்மணிப்புட்பராகத்
தணியிலெக்கலன்கேட்டாலுமருளுமாவணச்சீர்சொற்று
மிணையிலாவீதிச்செல்வச்சிறப்புச்சற்றியம்புவோமால். (எச)

வேறு.

மறையவரரசர்வணிகாசூத்திரர்கள்வாழ்வுறுமணிதிகழ்வீதி
யிறைவன்மந்திரத்தெழிலெயிற்புறத்தினிலிசைதருமினநான்கென்
றறையுஞ்சாதியினுயாநதவுமிழிந்தவுமாசையிற்கலந்தீன்ற
குறைவிலாதவர்தத்தமதொழுக்கொடுகூடிவாழ்மறுகன்றே. (எரு)

மலயமாருதமூலவுறுபத்தரும்பர்தரின்வயினெங்கு
மிலகுமாமணிவேதியினணிகளுமினியவேதிகையெங்கு
மலவில்பூரணகும்பமுங்கும்பத்தினருகுபாலிகைக்காடுங்
குலவுபாலிகைக்கடுத்தமாடத்தினீள்கொடிகளாடுவமாதோ. (எசு)

தெரும்யானையும்பரிகளுஞ்சனங்களுஞ்செல்லலாற்றெருச்சேர்ந்த
பாரெலாம்பகர்புழுதியாவனதினம்பாவலர்மறையோர்கட்
காரமாணிதிபொன்மணிவாகனமளிப்பவர்தத்தஞ்செய்
நாரமாறெனவோடியப்புழுதியைநனியடக்கிடுமன்றே. (எஎ)

வேறு.

கச்சணிதனத்திற்பூசுசந்தனமுங்காளையர்தம்மொடுமூடி
வெச்செனவெறிபற்பலநலக்கலனும்வீழ்தருவீதியினிவைதா
மெச்சிலென்றெணியோவயன்மனையவர்பாலிணங்குறுமிவைகளைத்தொடுதற்
கச்சமதாயோவனைவருங்கழன்றெட்டன்றிவீதியினடவாரே. (எஅ)

ஒருமகப்பயத்தலிரு * மகப்பயத்தலொண்ணுதன்மகளிரோபயத்தல்
வருமகப்பெறுதுவருந்துதலூமைசெவிடலிகுருடிவைமாறுய்த்
திருகுதன்முடங்கலெனுங்குறைவுறுதுசிவபெருமான்றிருவருளாற்
பொருவில்பற்பலவற்புதசுபகரமேபொருந்துபுத்திரர்ப்பெறுவாரால். (எகூ)

மிக்கவேனிலின்கணடைந்தவர்புனலைமேவினுலெனவகமகிழ்வு
தொக்குநல்விருத்தையெதிர்ந்துமாமதுரச்சொல்லுரைத்திற்கொடுபோகித்
தக்கநாலுண்டியறுசுவைசெறியத்தானினிதூட்டியேயவர்க
ளுக்கவாவடங்கக்கலனிலனுடையுதவுவதிவருறுதொழிலே. (அ0)

* இந்தத்தேற்றேகாரம் - எண்ணேகாரமாகக்கூட்டுக.

கங்கையஞ்சடையோன்றிருவடிக்கழலைக்கைதொழுபவர்களாடவர்க
டுங்கநற்பரமேகணவனொன்றவர்தந்தூயதாட்டுணைதொழுவார்கண்
மங்கையரிவர்கடமைவணங்கிடுதற்காகவேவந்தனமானத்
திங்களுங்கதிருந்தாழவிண்ணிவந்தசெழுமணிக்கோபுரத்திரளே. (௮௧)

கும்குமம்பளிதமான்மதம்விராவுகோதினீர்ச்சிவிறிகைக்கொண்டே
மங்கையர்மகிழ்நர்மகிழ்வினோடாடமாடமேனிலைமணிவாரித்
துங்கநீர்பெருகிப்பலமுகமுகுவசுரார்திரடொகுவடவரையி
னிங்குலிகந்தோய்ந்தினமணிபுரட்டியிழிதருமருவியையேய்ந்த. (௮௨)

கன்னலங்குதலைக்கன்னியருருவிற்கைபுனைசித்திரங்கமழ்நீ
ரின்னறுந்திவலைமென்மெலவிறைப்பவிந்தமுதத்துளிபிலிற்ற
மன்னுமென்மலர்த்தூடென்றறாற்றிடவேமைந்தருமகளிருங்கலந்த
பொன்னுறுமாடப்பூமலரமளிபூங்கணைவேணகர்பொருவும். (௮௩)

மலருமந்தாரமகரந்தமிறைப்பவத்துகண்மடங்கவானதிதா
னிலகுதண்டிவலைபயப்பயவிறைப்பவியற்றுசித்திரங்கள்வெண்கவரி
பலதரமசைப்பப்பாவையரிருபாற்பரவப்பால்வலம்புரித்தடக்கை
குலவுதாமரைக்கணிருபர்மாளிகைவைகுந்தமொத்திருந்தனமன்னோ. (௮௪)

வானதிப்புனலினாரநற்சேற்றைமாற்றிப்பின்பரதநூல்வழியிற்
றேனமர்குழலார்நடிப்பப்பண்படிப்பச்செவ்வியாழ்விரன்முறைதெரிப்ப
வீனமின்மணியோவியங்கள்சாந்தாற்றியெடுத்திருபக்கமுமிரட்டத்
தானமரரசர்குமரர்மாளிகையிந்திரற்கமைதருநகர்நிகரே. (௮௫)

பன்னகமகளிரமரர்நாரியர்கின்னரரொழிற்பாவையர்முனிவர்
தன்னெழின்மாதர்தானவர்தங்கடையலர்சகமடந்தையரோ
டன்னநற்பூவையஞ்சுகந்தோகையரிகளிறிவுளிபூந்தருக்க
ளின்னசித்திரஞ்சேர்மாளிகைமயன்றனிருக்கைநன்னகர்நிகர்த்திடுமே. (௮௬)

வானுறுதருக்கற்பகநறுங்கொடியுமல்லிகைமுல்லைவண்கொடியுந்
தேனுறுங்குவளைவள்ளைசெங்கமலஞ்சிலைபிறைதிலகமும்பூத்துத்
தானிறைமடவாரெனுமெழிற்கொடியுந்தபனன்றேர்க்கொடிதுகிற்கொடியு
மானிறமழைமின்கொடியொடுதுவன்றிமாளிகையெங்கணுமயங்கும். (௮௭)

மாதர்கோதையிற்சேர்மாமலர்த்துகளுமணிக்கலனொடுகலனுராயும்
போதுகுபசும்பொற்பொடியுமேனியின்மேற்பூசுபூந்துகளும்போர்மாரன்
மீதுறவிடுத்தவலர்நறுந்துகளுமேனிலைத்துகிற்கொடியசைய
வேதினமுகுகற்பகநறுந்துகளுமேயரமியமெலாமயங்கும். (௮௮)

ஆடுறுமகளிர்சிலம்பலம்பிசையுமணிகொண்மேகலைகலியின்சயுஞ்
சூடகந்தொடிகளூரசுறுமிசையுஞ்சரிகுழற்சூடியதொடையிற்
பாடளியிசையுங்குழன்முழவியாழ்பட்பாட்டிசைதிசையெலாம்பரவ
வாடகக்கோயின்மேனிலைமாடத்தரங்கெலாமயங்கிடுமன்றே. (௮௯)

வானுயர்கொயின்மணியரமியத்துப்பளிங்கினுல்வெண்பொனுல்வயங்க
வேனிலைபடியாத்தெழிற்சுரகதிநீரினைநிறைத்திலங்குமந்தாரத்
தேனுறுமலர்தூவியதடமடவார்திரளொடுமோடவர்படிந்து
தாணிரவிடைமற்றவர்மலைமுலையாந்தடத்திடைப்படிகுவர்மாதோ (௯௦)

அண்டமீதுறுமாடகவரமியத்திலழகொடுநாடகமாடு
மொண்டொடியவர்பான்மேனகையரம்பையூர்வசிதிலோத்தமையுற்றே
தெண்டனிட்டிவர்குற்றேவன்முற்றுவித்துத்தினந்தொறும்பிநயநிருத்தங்
கண்டுறுனெறியிற்கற்பரோலிவர்தங்கண்ணியமெண்ணியார்கரைவார். (௯௧)

வேறு.

இலகுவெள்ளியிலடுப்புப்பொன்னியற்றியபானை
யுலைபனீரழன்மாணிக்கமரிசியொப்பிலாத
விலைகொண்முத்தினைக்கொடுசமைத்தேவிளையாடுந்
திலகலானுதற்சிறுமியர்திரட்செறிவொருபால். (௯௨)

கன்னறேனமுதக்குழலியாழ்நறுங்கண்டாற்
றுன்னுபாகுபாலின்சுவைகளும்பழிசுமப்ப
மன்னுமின்மொழிகிளிபயிரமத்தினம்வகுத்துப்
பன்னுகின்றபொற்பார்தருபாவையரொருபால். (௯௩)

இந்திரன்பொழிலிடைமயிலாடுவவென்ன
வந்தரத்திடையாடப்பொற்கொங்கைகளாடச்
சுந்தரப்புயத்தாடவர்மனஞ்சுழன்றாட
வுந்தியூசலாடுறுமடந்தையர்திரளொருபால். (௯௪)

மன்னுமால்வரைவளமெலாமலைக்கையால்வாரித்
துன்னுமாம்பிராவதியினித்திலம்வயிரந்துப்
பென்னுமின்மணியியற்றுகந்துகங்கழங்கமனை
யன்னமாயெடுத்தாடுமங்கையர்குழுவொருபால். (௯௫)

வச்சிரத்தெழிலாழிசந்தனமரமறுவி
லச்சகஞ்செரீஇவெள்ளியிற்சங்கிலியமைத்துப்
பச்சைமாணிக்கமரகதம்பதித்தபொற்சிறுதே
ரிச்சையானடத்திச்சிறுசெழிற்குழுவொருபால். (௯௬)

ஊளமொருவடான்றுகாரணமின்றிச்சிறிதேருற்று
நின்றுகாற்படைநெஞ்சுறமூழ்கவுகிமர்த்து
பின்றுகின்றிலாவாரணப்பெருஞ்சமர்காணு
இன்றதன்றுதார்க்குமரர்களெழிற்குழுவொருபால். (௯௭)

விட்டும்விட்டிடாமுன்னெதிர்தகரெதிர்மேவிக்
கிட்டிமுட்டிடுமொலியிடியென்னக்கேட்டிடக்கை
கொட்டிமட்டிலாக்குதுகலங்கொண்டமர்காணு
மட்டுலாந்தொடைமார்பர்கள்வயங்குவதொருபால், (௯௮)

இலகுசொன்னத்திலியற்றியவெழிற்பலகையின்கட்
குலவுபன்மணிவன்னிரைநிரைபடக்கோலி
நிலவுபுள்ளிகொணீள்கவறுருட்டிச்சூதாடும்
விலையின்மாணிக்கப்பூணணிவிடலையரொருபால், (௯௯)

புனலினிற்குடைந்தாடியாடையுமணிப்பூணு
மினிதுபூண்டுசந்தப்பொழிலிடைவிளையாடி
வனிதைமாருமைந்தருமணிச்சிவிகையின்மன்னிக்
கனிவினோடுபோதருகணக்கில்சிறப்பொருபால். (௧௦௦)

குந்தங்கப்பணங்கொடுமரந்தோமரங்கூர்வாள்
விந்தைமெச்சுகேடகஞ்சிறுசவளம்வெவ்வியவாய்ச்
சந்தமிக்கசூலம்மடந்தையர்தடங்கண்ணே
யுந்தொடைப்படையாதிசெய்குனர்குவையொருபால். (௧௦௧)

ஒண்முகஞ்சிறுத்தெண்பதிற்றிருவிரலுயர்ந்து
கண்முன்செல்லுமைங்கதியிலக்கணங்களுங்கண்ணி
யெண்முனெத்தனையோசனையெனும்புக்கெதிரும்
வண்ணமாநடத்திடுதிடவாடவரொருபால். (௧௦௨)

ஒன்பதொண்முழநீண்டெழுமாமுழமுயர்ந்த
தின்பமேதருவால்கரமிருநிலத்திசைந்த
வன்பதத்துகிரந்தரச்சந்திரவனத்த
வென்பதாமரசுவாவுகையிளையவரொருபால். (௧௦௩)

பாவமோவமும்மாரிமாதத்தொரும்பயப்பக்
காவன்மாநிலமுய்தரவறங்குதுகலிப்ப
வாவுமால்விடையேறுநாயகன்மகிழ்தரப்பூ
தேவர்வேள்விசெய்தேதிகழ்தருதிரளொருபால், (௧௦௪

தேவநாயகன்றேவர்கடினத்துதிசெயுமா
தேவிநாயகன்சிவபுரநாயகன்சிறியேற்
காவிநாயகனடியவரடிகளையருச்சித்
தோவிலாதபாவம்மறுப்போர்திரளொருபால். (கoரு)

வேறு.

ஆதிநாயகனருச்சனையொருபாலாகமாதியத்தியயனங்களொருபால்
வேதமோதுவித்தகர்குழுவொருபான் மிக்கமந்திரஞ்செபிக்குனரொருபாற்
கீதயாழிசைகிளக்குனரொருபாற்கேடிலாநடமாடுனரொருபாற்
றீதுதீர்மணிபொன்னிவைசிந்திச்செவ்விமங்கலஞ்செய்குனரொருபால். (கoசு)

வேறு

தொகைதொகுபொருளுண்டாக்கறெல்லறச்சும்மைசொல்லும்
பகலெலாம்பற்பலாற்றினீட்டிப்பின்பயிலிராவி
னகுமலர்த்தொடைசேர்மார்பர்நாரியர்நகிலிற்புல்லி
யகமகிழ்ந்தின்பமென்னுமரும்பொருளீட்டுவாரால். (கoஎ)

ஆதுலர்தமக்குச்சாலையறுசமயத்தார்க்குண்டி
யோதுவோர்க்குணவுபிள்ளைக்கூற்றுபாறண்ணீர்ப்பந்தர்
வீதநீர்த்துயிர்காப்பாற்றவிலேதரலென்னுன்காமிக்
கோதகறருமச்சாலைக்குவைகளெங்கெங்குமன்றே. (கoஅ)

நாவலரீரொன்பானுநற்புராணங்களோதிப்
பாவகம்பதிந்தபொம்பார்நற்பொருள்பகரக்கேட்டே
மேவுவிற்பன்னரின்பவேலைவெள்ளத்துமூழ்கு
மோவிலாக்கழகச்சாலைப்பெருமையாருரைசெய்வாரே (கoகூ)

சரியைநல்வழிவழாதுசார்பவர்மடமுந்தாவில்
கிரியைநூன்முறைசெய்கிற்போர்கெழுமுமாமடமுமியோகத்
துரியவாநெறியினிற்போருறைதருமடமும்பற்றி
லரியஞானியர்வாசஞ்செய்மடமுமங்கெங்குமாமால். (கக0)

விராடனுலரசுசெய்யமேயதுவிரதசீல
விராசபாண்டவார்தாமோராண்டிருந்ததிவ்விரும்பாரெல்லாம்
பராவுவீடுமனுன்மெச்சப்பட்டதுபவமிலாதார்
விராவுதாராபுரத்தின்மேன்மையார்விளம்பவல்லார். (ககக)

புலவர்பண்ணவரியாரும்புகல்வதற்கரிதாம்பொற்பார்
நலமகர்ச்சிறப்பிற்சற்றுரைவினறனைநந்திகாவ
லிலககத்தீசர்கோயின்மான்மியவெழிற்கோவெல்லை
யிலகசட்டறிவிற்றேற்றுமளவெடுத்திசைத்தல்செய்வாம். (கக௨)

## வேறு.

அரவகங்கணத்தரனமர்கோயிலின்மிசைசீர்
வருதன்மாசெனச்சுரர்திரள்களையெலாமறுத்தல்
பொருவவின்கதிர்க்கற்கொடுபொருத்திவிண்பொதுத்தே
யுருவியொண்மதிலுற்றனசுற்றுறவுயர்ந்தே. (௧௧௩)

வன்னமாமணிவயங்ககத்திசர்தூவியின்பான்
மன்னுபொன்னினல்வெள்ளியானுயர்தருமணியான்
மின்னுமாடங்கடிலங்குவமேருமால்வரைசூழ்ந்
துன்னுநாலிருகுலமலையுற்றனவொத்த. (௧௧௪)

உமைமணாளருக்கொண்டிருவமுதமைக்குஞ்சீ
ரமையுமாமடப்பள்ளியினரும்புகுய்ப்புகையுங்
கமைகொள்யாகசாலையிற்கமழ்புகையுங்கண்ணுறலா
லிமையிமைக்கிலராகலரிருநிலத்திருப்போர். (௧௧௫)

சிங்கவேற்றிடியோசைகேட்டிடுகரித்திரடா
னெங்குநிற்கிலாதோட்டமிட்டிடுவனவென்ன
வெங்கணுயகற்பணிபவர்பவம்பயந்திரிய
வங்கண்மாமுரசதிர்வனவாறுகாலமுமே. (௧௧௬)

அண்டமீதுறுகிரகமுமுடுக்களுமமலங்
கண்டுதம்பவக்கடல்கடப்பானுளங்கருதி
யண்டினலெனமாமணிகொடுசமைத்தலகு
கண்டிலாவிளக்கெங்கணுநிரைநிரைகவினும். (௧௧௭)

அறமியற்றினர்க்கல்லதுசந்நிதியடைத
லுறுவதன்றெனவனைவருமுணர்ந்தனருய்ய
வறமதேவடிவாகியவணிவிடையுயர்த்த
மறுவிலாக்கொடிவானளந்தெழிலுறவயங்கும். (௧௧௮)

சொன்னத்தூணிரீஇமாமணியுத்திரந்தொடக்கி
வன்னமன்னுநல்வச்சிரப்பலகையான்மறைத்து
மின்னுமொன்பதுமாமணிமாலைகள்விளங்கு
மின்னகோயிலுக்கொப்புலகத்தெலாமிலையே. (௧௧௯)

தென்றிசைக்கிறையரசறச்சிவனருள்சிறக்குந்
தன்றிருப்பதமேம்படத்தளைமகிழ்தழுவ
வொன்றுசைவர்கடாடொழுதேத்தியோத
வென்றுநல்லருளின்றொடைகொடுத்திருந்தனரே. (௧௨0

அமலநாயகனமரர்கணாயகனடியார்க்
குமலகுற்றமற்றிடவருள்கொடுத்தமையுடனே
யமருகின்றதாராபுரவணிசொலவணந்தம்
குமரிதாமெனிலென்னனம்புகழ்ந்தியான்கூறல். (கஉக)

வேறு.

அம்பிகாபதிதன்சந்நிதிமுனரினம்புலியவாவிலாதணியாய்க்
கும்பலாயினபோற்கொடிகொள்கோபுரஞ்சேர்கோநகர்கொழுஞ்சிவாடிப
ரெம்பிரான்றனதாரெழிலைநோக்கிடுதற்கேற்றகண்ணடியையொத்ததனு [பே
லம்புராசிப்பாரின்னமாநகருக்கன்னநாமம்மறைவனவே. (கஉஉ)

கொழுஞ்சிவவாடியெனப்பதம்பிரித்துக்கொள்பரியாயப்பேர்ப்பொருள்கோள்
செழுஞ்சிவமுயர்கண்ணடியென்றுதலினூற்செப்புமந்நகரவிப்பிரர்க
டொழுஞ்சிவபிரானைத்தன்னெழிலாடிக்கட்டெரிசித்தல்போற்றுலங்கி
யெழுஞ்சிவஞானவாடியிற்றெரிசித்திடுவதாலப்பெயரியைந்த. (கஉங)

வேறு.

கோவலூரெம்பெருமான்சீயர்திருவடிப்பாற்குணத்தாற்
சம்பந்தியுங்கோகனதைகுலமகுண
ஞலார்தருசீவைணவர்களடிப்பொடியாயருள்செறிராமச்
சந்திரன்னெனும்பேரறிஞன்
சேவலார்தருகொடிச்சுப்பிரமணியசுவாமிதிருக்கோயிறனக்
கோர்தோட்டந்தந்தேதிகழும்
பாவலோர்புகழ்தருபற்பலதருமநடாத்துபவன்வாழ்
தாராபுரத்தின்பண்புபகரிதே. (கஉச)

நகரப்படல முற்றிற்று.

---

## நைமிசாரணியப்படலம்.

கடல்கடைந்தமுதமாந்துங்கடவுளர்திரணணு
மிடையறமிடைக்தெற்கெற்கென்றிடவிர்ப்பாகமீய
தடைவினெண்மகங்களாற்றுமருந்தவரனகமாக
நடலைவேரறச்செய்விக்குநைமிசமாநற்கானம். (க)

மிகமுனிவரரொன்றனுமகிழ்வொடுவிளைக்கும்வேள்விப்
புகைகமழ்தாவின்மீப்போய்க்கற்பகப்பொதும்பர்ப்பூவிற்
றுருசுரும்பினத்தையோடத்துரந்துவதறியாரியாருந்
திகழுங்கற்பகத்தின்வண்டின்றென்றுசெப்புதல்செய்வாரே. (உ)

விண்ணுளோர்பசியைமாற்றிவித்துமாமழைபெய்வித்து
மண்ணகவுயிர்கட்கெல்லாம்வன்பசிமாற்றிவான்றொட்
டெண்ணுமூவுலகின்வாழுமுயிரெலாமினிதுகாக்கு
மண்ணலஞ்செவிலித்தாயொத்ததுநைமிசக்கானம்மா (௩)

பற்பலமுனிவரானும்பண்ணவர்பரவலானு
மற்பகலகலத்தேவரணிகலனவிர்தலானு
நற்புகைநிறைவால்வண்டோடிடாத்தருக்களானுங்
கற்பகக்காட்டோட்டைக்கடுத்ததுநைமிசமாங்கானே. (௪)

மணநிறையெழிற்பூம்பச்சைவண்கொடியொடுசாரங்க
மிணையிலம்புலிதொக்கண்ணிலறுகுறுமியல்பினாலே
பணவரவெருக்குக்கொன்றைகூவிளைபராவுகங்கை
யணிசிவபெருமானொத்தவாநைமிசாரண்யம்மே. (௫)

வேறு.

தருமமியாவையும்வளர்த்தலாற்றமையடைந்தவர்ச்சார்
பெரியவல்வினைபோர்த்தலாலிமயமாம்பிறங்கல்
வருமெந்தாயுமையொத்ததைம்புலப்பகைமாற்று
மரியமாதவர்வாழ்வுறுநைமிசாரணியம். (௬)

மறைசொன்மந்திரவேள்வியான்மலரயனுலகா
நிறைகவின்றிருமாதரானெடியமாலுலகா
மறையுமாபவமகற்றலாலரனகராகு
நெறிவழாதமாதவருறைநைமிசநெடுங்கா. (௭)

வண்டொடிடமாமலர்சிதறிவண்வாசங்
கொண்டதேம்புனலாற்றலொண்கவிப்புகழ்கூறி
விண்டவாமலர்தூவிக்கண்ணீர்சொரிவிமலன்
றொண்டர்போன்றதுநைமிசாரணியநற்றொல்கா. (௮)

வேதவோதையுமாகமவோதையும்விமல
போதமேதருபுராணநூலோதையும்புகழைக்கை
யாரியாயபல்விலங்கினத்தோதையுமலைகண்
மோதுமாகடலோதையின்மும்மடிமுழங்கும். (௯)

பாவவேரறவெட்டினர்பரம்பொருளுணர்ந்தோர்
தேவயோகமேசெய்பவர்மந்திரஞ்செபிப்போர்
பூவ்வபரகன்னல்லருச்சனைபுரிபவர்புகழே
மேவயாகங்கள்செய்பவரன்றிவேறிலரால். (௧௰)

வீரைவற்றினுமேகம்பெய்யாமலேவிடினு
நேரின்மூவிருபருத்துவளனெலாநிறையச்
சீர்பொருந்தநாடொறுஞ்சுரந்தேபுகழ்செறிந்து
பார்பொருந்துநன்னிதியெனச்சிறப்பெலாம்பயக்கும். (கக)

சொன்னமால்வரைவில்லினனடிமலர்தொழுதே
மன்னுவேள்விசெய்யருந்தவர்சிறுமகார்மருவிப்
பன்னுகின்றநற்கழகத்தின்பாங்கரிற்பரவி
யுன்னுபூவையுங்கிள்ளையும்வேதநூலோதும் (கஉ)

தாமரைச்செழும்பொய்கையுங்குவளையந்தடமுங்
காமர்வண்டுசூழ்சோலையுங்கணிச்சியான்கணிப்பி
னேமநல்லடிப்பூசையும்வேள்வியுநிகரில்
பூமனும்பனசாலையுமெங்கணும்பொலியும். (கங)

வல்லியப்பெருமடியுண்டுபுலிப்பறழ்வளரும்
வல்லகேசரிக்குழுவொடுமதாவளமருவு
நல்லபாம்பெழிற்கேகயநீழலினண்ணு
மல்லலைமிசவனச்சிறப்பியார்சொலவல்லார். (கச)

இச்சிறப்பமைவனத்திருந்தவர்கலியுகத்திற்
கச்சமுற்றவராய்த்துவாபரயுகவந்தத்
தெச்சமாநிற்றவஞ்செயவிணையிலாவசிட்டன்
வச்சர்கும்பமாமுனிசவுநகரெலாம்வந்தார் (கரு)

சொன்னவாயிரம்வருடத்தின்முடிவுசெய்தூய
வன்னசத்திரயாகஞ்செய்வான்றழல்வளர்த்தா
ரன்னயாகத்தைக்காணியவருந்தவரனேக
ருன்னியாசையினுற்றனராலொருங்கொருங்கே. (கசு)

மறையெலாந்தெரிவியாதமாமுனிவரன்சொல்ல
நிறைபுராணமீரொன்பதுமுணர்ந்துநேரில்லா
விறையையுள்ளத்தினிருத்தியைந்தெழுத்துநாவிருத்துங்
குறைவில்சூதமாமுனிவன்வந்தனன்மகிழ்கொளவே. (கஎ)

வேறு.

வந்தசூதனையிருந்தமாமுனிவர்மகிழ்வினோடெதிர்கொண்டடிவணங்கி
யுந்துமாதனத்திருத்தியர்க்கியத்தோடுற்றவாமுபசாரங்களுஞற்றி
யெந்தையேயிதுவரையுமியாமியற்றுமினியமாதவமேபலித்தனவின்
றந்தவாமலகக்கனிபோலெற்கறிவுறுத்தவந்தனையனையெனவே. (கஅ)

தண்ணென்மாமழைபெய்யின்வேனிலின்கட்சாரும்வெப்பஞ்சற்றேனுந்தங்கிடு
விண்ணின்மாமணிதோற்றிடினிருள்போய்விலதல்லதுமேவுவதாமோ [மோ
வண்ணவின்னமிழ்துண்ணவெய்திடிற்பின்மாள்வதென்பதுவந்திடவற்றே
வண்ணனின்றரிசனையினாற்கேள்வியானமாமிடியணுகுவதாமோ. (௧௯)

உயருமீரொன்பதாந்திருப்புராணத்தொப்பிலாப்பிரமாண்டத்திலோது
மயர்விலாக்கௌமாரசங்கிதையினமருநற்புகழ்க்குமரகாண்டத்தி
னியையுமாசிவதங்களினுயர்வாயியம்புகின்றதாராபுரத்திசையைத்
தயையினான்முனமெங்களுக்கினிதிற்சாற்றலுற்றனைகேட்டனமேனும். (௨0)

மங்கைமார்தடமுலைபடிவிடர்தாமற்றுமற்றுமேமருவுதற்காசை
பொங்குகின்றதேயன்றியீங்கிதுபோதும்போதுமென்பார்கொலிங்கதுபோ
லெங்கணுயகன்மான்மியந்தலத்தினேற்றநீயுரைத்திட்டகேட்டதுதொட்
டிங்கெமாசைசற்றேனுமற்றிலதாலென்செய்கேம்புகன்றமையிரட்சியுமே. ()

அறவர்தம்மனத்தன்பினைநோக்கியானனம்மலர்ந்தாரணச்சூத
னுறுதிகூறுவன்கயிலையெம்பெருமானோதநந்திகேட்டொருமுருகேசற்
கறிதியென்றறைந்தானவனாதற்கியம்பவாங்கவனருள்வியாத
பெறுதியென்றுகூறிடவவன்றனையாற்பேசமுற்றவுங்கெட்டனன்பெரிதே. ()

வள்ளலாமகத்தீசுரர்வாழுமறுவிலாததாராபுரமகிமை
தெள்ளுநல்லறிவுள்ளவர்க்கல்லாற்றீயர்பாற்பொருள்சேர்வனகருதி
விள்ளினள்ளலாம்வெந்நரகத்தின்வீழ்வர்கேட்டவர்சொன்னவரிரவி
யுள்ளநாள்வரையும்மினனுறுவருற்றதீயருக்கோதுதறகாதால். (௨௩)

முனிவர்நீரறிவாமதமீறிமுன்னைவல்வினைநிகளங்கண்முறியத்
துணிகொண்மும்மலவெளில்கெடவொடித்தேதோற்றுமாயையுங்கருமமுமாகு
மிணையபாகொடங்குசத்தையுந்தடுத்தேயின்பமானகானினையடைந்திருந்தீ
ரிணையகாதையாங்கவளம்வாய்க்கொளுதலிசையுமென்றிசைக்கத்தொடங்கின
[னால்.

அன்னகாலையங்கிருந்தமாமுனிவரகமகிழ்ந்தெழுந்தானந்தக்கண்ணீர்
துன்னமாமலரடித்துணைதொழுதேதூயராயினேமென்றுதோத்திரித்தார்
பன்னும்வேதவியாதமாமுனிவன்பாததாமரையைப்பணிந்தேத்தி
மன்னுகாதையைச்சூதமாமுனிவன்வழங்கலுற்றனனான்முனிவரர்க்கே. (௨௫)

நைமிசாரணியபடல முற்றிற்று.

# திருக்கயிலாயப்படலம்.

திங்கள்சூடியசடைதிகழ்சிவபிரானமருந்
துங்கமாகியகயிலையின்வருணனைசொல்லற்
கிங்கெமாலிசைகின்றதன்றெனினுமாசையினாற்
புங்கமாமுனிவீர்சிலபுகலுவல்கேண்மின். (௧)

வேறு.

விருப்பொடுசுரருமசுரருங்கடைந்தவேலையினெழுந்தவெள்ளமுதந்
திருப்பொலிகளத்தவிடத்தைவைத்தமரர்திரளையுமெமையுங்காத்திட்டோற்
கிருப்பிடமாதன்மாட்சிமையெனத்தேர்ந்தெழிற்கிரியுருவெடுத்தெங்கு
முருப்பொலிதரவந்துற்றனவொத்துயர்கயிலாயமாமோங்கல். (௨)

விம்பமாமொருகூர்மத்தின்மாமுதுகின்மீதுமீதாகவெவ்வேறு
யும்பரேழெனவேயடுக்கடுக்காகவுற்றவாமுலகுகட்கெல்லாந்
தம்பமாய்த்தாங்கிச்சகத்திரத்தெட்டாச்சாற்றுமாற்றுளதகைசார்ந்த
செம்பொன்மேருவினுத்தரகுணதிசையிற்றிகழ்வதுதிருக்கயிலாயம். (௩)

நேமிமாகிரிசூழ்ந்தலைபலநிமிரேழ்நீள்கடல்சூழ்ந்துநேரில்லாப்
பூமிசூழ்ந்திருநாலெனப்புகறருநற்பூதரஞ்சூழ்ந்துபொற்புற்ற
வேமமாமேருமலைதலைமிசையினெழின்முடிசூட்டியதென்ன
வாமதேவன்வாழ்தருதிருக்கயிலைமலைபொலிந்திலங்கியதாமால். (௪)

அரனடியடைந்தோரவனுருவுறுவரெனவருமறையறையடைவே
சுரநதிபிறைசார்த்தரவத்தோலிரலைதுனியகலகியிவைநலங்கத்
திருமுடிமுதலாயிடையிடையணிந்துதிகழ்சுதைநீற்றொளிசெறிந்த
பரசிவவுருவுற்றவன்றமைச்சுமக்கும்பான்மைபோன்றதுபகர்கயிலை. (௫)

வெண்ணிறவிடைவெண்ணீறுவெண்கங்கையாமிவையேமிகமகிழ்வா
மண்ணலுக்கெனத்தேர்ந்தனவிசந்திரனன்மினலுடுவொளியனைத்தும்
வெண்ணிறவுருக்கொண்டண்டமுட்டிடும்வேதண்டமாய்வினையெலாம்வீயப்
பண்ணுமாமெனவிவ்வண்ணமாய்நண்ணும்பான்மைபோன்றதுபான்கயிலை. (௬)

தேவநாயகன்பூசனையினுமடியார்பூசனைசிறந்ததுவெனத்தேர்ந்
தாவலினடைவோர்தமையெதிரொலியாலழைத்தயமலரினலருச்சித்
தோவிறீங்கனிதந்தொளிகொடுதழுவியவர்ச்சுமந்துலகநாயகன்றன்
சேவடிவணங்கவிடுத்தவன்பவங்கடீர்க்குமாற்கயிலையங்கிரி. (௭)

இந்திரன்றிருமாலுமைமணாளன்மூனிறைஞ்சவான்மகிழ்வொடுமெழுந்தே
கந்தரமிசையுங்கபதிபுயத்துமேறியேகடிதடைந்தவர்க
டந்தம்வாகனத்தைத்தாழ்வரைநிறுத்தித்தரிசனைசெய்துபின்சார
வந்தவாகனமூர்தாமும்வெண்ணிறத்தான்மயங்கிக்கேட்டறிவரவ்வரையின். ()

தேவருமவர் தம்மகளிரும்பரமசிவதெரிசனந்தினஞ்செய்தும்
மாவரைவளங்களைக்குவான் றிரியவவ்வரைபுட்டமவடிவ
மேவிடவவனென் மேவினிர்வருகவெனவிளித்தேவராதிருப்ப
வாவனுயகருமகளிருமயங்கவியற்றுமக்கயிலையாமசலம், (௯)

## வேறு.

இரவியெண்ணகல்கோடியங்கிருந்துநோற்றென்ன
வரதனக்குலமணியணியவிர்வனவொருபாற்
பரவுபான்மதியளவிலதவம்பயில்வனபோற்
றரளமாமணிக்குலைபலதயங்குவவொருபால். (௧௦)

இன்னமால்வரைநாப்பணின்மாணிக்கத்தியற்றும்
வன்னமாமலையொன் றுவந்துற்றதுமானக்
கன்னிமாமதில்காப்புறக்கதிரொளிகளுற்றும்
பொன்னங்கோபுரமொன்றதிபொற்புறப்பொலியும். (௧௧)

ஏர்கொண்மாணிக்கத்தான்மரகதத்தினுலிசைபொற்
பாரும்வச்சிரத்தாற்றரளத்தினுற்பவளத்
தாருமேயியற்றுதருளானமைக்தழகு
சாருமாலயமுஞ்சிகரங்களுந்தயங்கி. (௧௨)

கயிலைமால்வரைமாமுடிகவித்தெனக்கவினே
யுயருநல்லொளிச்சிகரவண்கோயிலினொருபாற்
செயிரிலாயிரகிரணமுமுடையசெங்கதிர்நேர்
பயிலுமாயிரந்தூணிரைபரவுமண்டபத்தில். (௧௩)

ஏகிலாத்துவசம்வலமிடத்திடுகாற்றாள்
வீசிவிண்ணினுமண்ணினும்போய்விழவிடுத
லீசனூர்கழற்போதிருதயத்திருத்திடுவோர
பாசமிப்படிப்பாறுவவாமெனும்பரிசே. (௧௪)

வாணனாயிரங்கைளாற்குடமுழாவதனை
யெணுணம்வகையிடிபயப்படும்படியிரட்ட
மாணுளவுமைக்கருவியுங்கடலெனமலியத்
தாணுவாமறையொலிதிசைதிசையெலாந்தழைய. (௧௫)

நாரதன்னொழித்திம்புருடாதியர்யக்கும்
வீரவிஞ்சையர்கின்னரிவீணையுமிடறும்
வாரமன்னியமர்தாமத்திமமலியுந்
தாரகத்துமிசையொலியெங்கணுந்தயங்க, (௧௬)

இந்திராதியரெண்டிசைப்புறமெலாங்காப்பச்
சந்தமிக்கவைரவர்களுட்புறந்தனிகாப்ப
முந்துவாயில்பூதங்குறண்மொய்த்தனர்காப்ப
வெந்தைதன்சமீபங்கணநாதர்காத்திருப்ப. (௧௭

வேதனாதியர்தம்மைக்கைவேத்திரமதனான்
மோதிப்போதிர்நின்மின்னெனநந்திமுன்காப்பப்
போதுதாளொம்பவமெலாமழுவினாற்போக்கித்
தாதைதன்னைமேலாக்கியதண்டிபின்காப்ப, (௧௮)

இத்தன்மைத்தெனவேதமுமினமறியாத
தத்துவப்பொருளாய்ப்பவம்போக்கியெந்தமையாள்
சுத்தவற்புதசோதியானந்தசொரூப
முத்ததாரகப்பிரமமாகியவொருமுதல்வன் (௧௯)

அலரிமண்டலமல்லவன்மண்டலமனலி
குலவுமண்டலமடுத்தனபவளவாற்கூவி
னிலவுகேசரியொண்பிடர்நேருறநிமிர்ந்த
விலகுசெம்மணியாதனத்திருந்தனனிறைவன். (௨௦)

இருந்தவெம்பிரானிடதுபாகத்துவந்திருந்தாள்
பரந்தவின்னொடுமென்னும்பற்பலவுயிர்களையுந்
திருந்தவீன்றுசற்றுந்தளராதெழிலேசேர்ந்
திருந்தகொம்மைவெம்முலையறம்வளர்க்குமெம்பிராட்டி. (௨௧)

கந்தமுந்துமந்தாகினிசீகரங்களுல
விந்துவந்துசூடியசடைகடுக்கையோடிலகச்
சந்தமுந்துமைமுகமுமுக்கண்ணொடுதயங்க
வந்துவந்தனைசெய்பவர்மாடுசற்றசைய. (௨௨)

தண்ணறுமலர்வாளியைத்தகித்தநேத்திரமும்
விண்ணுமண்ணுநன்றுவிளக்கிருவிலோசனமும்
பண்ணுலாமொழிப்பார்வதிதனக்குபதேசம்
பண்ணவேமலர்ந்தருளியபவளச்செவ்வாயும். (௨௩)

இசையும்வேதமுமின்பொடுகுடிகொளற்கில்லா
விசையுமையிருசெவிகளுங்குழைகளுமிலங்க
வசையிலக்கணிமாலையும்பற்பலமலரா
லசைசெயத்தொடுத்தழகமைகண்டமாலிகையும், (௨௪)

# திருக்கயிலாயப்படலம்.

நெமியோடயனாரொலாநிமிடத்துமண்ணாய்ப்
போமுனாலகாலந்திருக்கரத்தினிற்பொருந்த
வாழினென்றுவாயிட்டுமோமரகதமணியி
னாமினாமினென்றங்ஙனமமைகழுத்தழகும். (உரு)

சந்தமிக்கமான்மழுவமைதருதிருக்கரமு
மந்தமாரபயம்வரதம்மமைகரமுங்
கந்தமிக்ககூவிளையெருக்கொடுகொன்றைகலந்தே
பந்தமுற்றநன்மாலைகள்பயிறருமார்பும், (உசு)

பொற்புலாவியவேதங்கண்முடித்தபூணாலு
மெற்குலாவியவுதரபந்தனத்தினதெழிலும்
பற்றலார்விடுபுலியதளுடையிடைப்பண்பு
முற்றதோகையினிறகணியாலுறமொளியும். (உஎ)

வேதன்மாலிவர்க்காக்கலுங்காக்கலும்விதித்த
தோதுதேவர்க்குமுனிவர்க்கும்வரங்கொடுத்துயர்வ
தேதின்மார்க்கண்டற்காயுடந்ததுசிறியேன்றன்
றீதெலாமறுத்தாள்கழல்கழலொடுதிகழ. (உஅ)

தத்தையாமொழிமரகதவடிவவெந்தாய்மேல்
வைத்தபூரணவற்புதக்கடைவிழிவனப்பு
முத்தமொத்ததண்முறுவலுந்தழன்முழுமேனி
யுத்தமத்திருநீறணியொளிநிலவுமிழ (உகூ)

எங்கணாயகனிப்பரிசினிலெழுந்தருளுஞ்
சிங்கவாகனத்தின்னிருபக்கமுஞ்சிறந்த
துங்கவேழமாமுகனொடுசுப்பிரமணியனு
மிங்கியாம்புகலரியபேரெழிலுடனிருந்தார். (௩0)

விசங்கராசன்மீதேறிமால்விரைவின்மெவினன்வெள்
விகங்கமீதினிலேறிவேதாவுமேவினனீ
ணகங்கள்யாவையுமோநடுநடுங்கிடவேயா
நகங்களாரவாரித்திடுகயிலையாகவிரம். (௩க)

ஆயிரம்பெருங்கண்கள்பெற்றிடுபயனடைவ
தாயகாலமிதாமெனவிந்திரனடைந்தான்
மாயிருங்கடல்சூழ்புவிவட்டவெண்டிசையு
மேயகாவல்செய்தேவருமகிழ்வின்மேவினரால். (௩உ)

ஏகமோடுபத்தாமுருத்திருயீராறே
யாகவோதுமாதித்தருமமாருமனவில்
யோகர்சித்தர்வித்தியாதரரொப்பில்கந்திருவர்
யாகமாதவர்முனிவரரடைந்தடிபணிந்தார். (௩௩)

ஏகநிற்கவெங்கெங்குஞ்சற்றிடமறநெருக்க
மாகநந்தியன்னவர்திடுக்கிடநெடிதுதட்டி
வேகமாகக்கைவேத்திரத்தடிகொடுவிரட்டி
யோகைமேவவச்சவையொழுங்குறத்திரிவுற்றான். (௩௪)

வல்லிநேரிடைநீலியின்மலைமுலைவாரின்
வில்லுலாவிடவீக்கிக்கூந்தலிற்றொடையிலைச்சி
யெல்லிதாமெனமேகலைமுதற்கலனிலக
வல்லநன்னடமாடுவானரம்பையர்வந்தார் (௩௫)

வன்னவண்டளவாநகைமேனகைமாது
மன்னுகைம்மலரிற்பனிமாமலர்மருவத்
துன்னுமாமுழக்கம்மடக்குருந்தருவத்தி
துன்னுநன்னடமாடுதலுற்றனளுவந்து. (௩௬)

தித்திமத்தளம்யாழ்குழலின்னிசைதிருந்துங்
கைத்தளங்களத்தின்றொலிநன்னர்கம்பிக்க
முத்தையொத்தமென்னகையினார்முழுமணிச்சிலம்பு
தத்தளங்கெனவேகலித்திடத்தளிர்த்தாளின். (௩௭)

துள்ளறாங்கலென்றிவ்வகைதோறுமொநரம்போ
டெள்ளலின்றியகஞ்சமென்குரறனியினிமை
கொள்ளுமைவகையோசையுமாதவர்குழுவைத்
தள்ளுமாசையஞ்சலதியிற்றனித்தனிதாழ. (௩௮)

சுவைமிகுத்தநற்பாடலுமைவகைத்தொனியுஞ்
செவிகளுக்கமுதானபாவகமுந்தேசிகமு
முவமையற்றநற்றேவர்க்குமுயர்தவத்தோர்க்கு
நவமதாமமுதாகக்கண்கட்குநன்னிலவே. (௩௯)

பாடல்வல்லபமும்பரதத்துரைப்படியே
யாடல்வல்லபமும்மவையிடத்தளவில்லைர்
கூடிநோக்கினுங்கேட்கினுமமரர்கொண்டாட
வாடவல்லவனன்றியாரறியுமாற்றலதே. (௪௰)

அரம்பையர்க்குண்மேனகைபுரிமாடல்பாடலின்
விரும்பும்வச்சிரமும்மலையும்பலவென்பு
மரும்பும்புற்றருவும்முருகினதெனிலங்ஙன்
விரும்புதேவர்கடன்மையெங்ஙனம்விளம்புவதே. (௪௧)

சேலையொத்தகண்மாதர்களாடலாற்றேவ
ராலயிற்கரும்பாம்வகைபட்டவாறறிந்தே
யாலமுண்டகண்டத்தாணங்கையினுனின்
காலமுற்றனநிற்கவென்றறிகுறிகாட்ட. (௪௨)

நந்திகண்டரம்பையாபுரிநாட்டியநிறுத்திச்
சந்தமேவியதாமரைக்கரந்தலைமிசைக்கொண்
டந்தகர்ந்தகவரவவாபரணவென்றளவில்
சொந்தமானவல்லபங்களைச்சொலிச்சொலித்துதித்தான். (௪௩)

திக்கெலாங்கணநாதர்கள்சிவசிவவெனவெம்
முக்கணுயகனுருளொடுமுகமலர
மைக்கருங்குழன்மேனகையாதியமாதர்
தக்கதேவருமுனிவரும்விடைகொளுஞ்சமயம். (௪௪)

அந்தவேலையிலயனிகர்வராகமாமுனிவன்
சந்தமேவியசந்திரசேகரன்றுள்வீழ்ந்
தெந்தநாயகனேயடியேன்றனமியற்றற்
கிந்தமாநிலத்திற்பரிசுத்தமெய்தியதாய். (௪௫)

வானநன்னதிதனனினுமகிமைவாய்ந்தனவாய்
ஞானமாதியமூழ்கினர்நண்ணநல்குவதாய்த்
தானமாதிநற்றருமமொன்றுயிரந்தலைமுய
வீனுமாநதியுடையநல்விடமருளென்றான். (௪௬)

அன்னவாசகம்பன்னகாபரணன்கேட்டருளி
யின்னநீர்முனிநன்னர்நீவினுயினையிதற்கு
முன்னமேயுமைதன்னைமூவுலகமுமுயிர்க
டன்னையன்னையாய்த்தந்தனைகாத்தனுயினதால். (௪௭)

ஆலகயானதியாயவளியில்வருகெனவுத்
தோகையெத்தலத்தென்னதஞ்சரர்முனிவரர்கும்
குகராசலச்சுதமூலைத்திடைத்தோன்றி
மாகாரலயமட்டும்வந்திடும்படிவருத்தேதம். (௪௮)

தேவநாயகியாமுமைதிருநதிவடிவாய்
மேவினளெனிலந்நதிமகிமையார்விரிப்பார்
பாவவேரறப்புகுவராகப்பருப்பதத்தின்
மேவிநீதவமாற்றிருவினைவிடைகொளவே. (௪௯)

என்றுகங்கைசூடியசடையெம்பிரானியம்பத்
துன்றுமாமலர்க்கைகுவித்திணையடிதொழுதே
நன்றுமாமறைமந்திரத்தாற்றுதிநவிற்றி
யின்றுபாவமற்றேனெனப்போவதற்கிசைந்தான். (௫௦)

சந்திரப்பிறைசூடியசடைமுடிச்சம்பு
சுந்தரப்பதம்போற்றியேயயனரிசுரர்க
டந்திருப்பதமுற்றனரருந்தவர்சதுர்வே
தந்தரும்பொருளைத்துதித்தேகுதல்சமைந்தார். (௫௧)

திருக்கயிலாயப்படல முற்றிற்று.

---

## வராககிரிப்படலம்.

கயிலைமான்மியஞ்சற்றுக்கழறினம்
வெயில்புகாப்பொழின்மேவுவராகநற்
சயிலவுற்பவமும்மதன்றன்மையும்
வியுலமீதுசிறிதுவிளம்புவாம். (௧)

### வேறு.

மறைபுகலரியசோதிமலரடிக்கண்ணுளுரு
நிறைமதுமலர்தூயாரநிழன்மணிநேரில்சொன்னந்
திறையெனவீசும்வையைத்தெற்கதுகுருவிருந்த
துறையெனவுளதோர்செல்வச்சுமைதொகுதாயமூதூர் (௨)

அன்னகர்வாழ்வேளாளன்சுகலன்மற்றவற்கன்பான
பன்னியுஞ்சுகலையீராருஞ்சுதர்ப்பயந்தாள்பாரிற்
றுன்னருஞ்செல்வத்தாலச்சுதர்களைக்கடியாராகி
மன்னிடவளர்த்துவந்தாரின்னணம்வாழுநாளில், (௩)

அன்னையும்பிதாவுமாயவவர்களொன்றற்குமஞ்சார்
பன்னருங்கானில்வேட்டம்பாவமூர்த்திகளொடாடித்
துன்னெறிவெயில்புகாதபுதரிலைம்புலனுந்தோற்று
வென்னிடநோற்றுவைகுங்குரவனைமேவிக்கண்டார் (௪)

செங்கைகட்டிக்கொட்டிச்சிரித்துக்கற்றிராளுமண்ணு
மங்கவன்மேனியாதியழுந்துறவீசியார்த்தார்
செங்கமலத்தோனொத்தமுனிசினஞ்செனிப்பநோக்கி
யிங்கியற்றுதற்கேலாதவியற்றுநீர்கேட்டிரென்றே. (௫)

பணிதொழின்மறந்துவேடர்குழுவொடுபெயினுநீவி
ரணியுழுதொழிலராதலாற்பன்றியகட்டின்மேவி
யிணையறுபறழாய்த்தந்தைதாயறப்பசித்தீயென்னும்
பிணிதெறவுழலுகிற்பீரெனப்பெருஞ்சாபமிட்டான். (௬)

பாவத்தினுருவாமைந்தர்பன்னிருவோருந்தாழ்ந்திச்
சாபத்தையடியேநீங்குந்ததியெதுதயையினாலிவ்
வாபத்தைநீக்கிக்காவென்றழவருந்தவத்தோனாங்கக்
கோபத்தைமுனிந்துபெம்மான்குரைகழனினைந்துகூறும். (௭)

எம்மையெந்நாளுங்காக்குமிந்துசேகரனேயுங்கட்
கம்மையாய்ப்பாறந்தோகையளித்துமந்திரிகளாக்கிச்
செம்மைசேர்பேரானந்தவீடுதந்திடுவனென்றே
மும்மையாங்காலந்தேர்ந்தமுனிவரன்மொழிந்தான்மன்னோ. (௮)

தூயதாங்குருவிருந்ததுறைப்புறத்தெழிலாய்ச்சூழுஞ்
சேயகானிடத்துக்கேழற்றிரட்கரசினுக்குப்பெட்டை
யாயகேழலின்வயிற்றிலாறிருபறழ்களாகி
மேயினர்முனிவனோதுமொழிபழிமேவிடாதே. (௯)

அத்ததிதன்னிலோர்காளரசருக்கரியேறன்ன
மெய்த்தவமதுரைவாழுமீனவன்மேற்குத்திக்கின்
மத்தமாமீதுமேவிமானமாவேட்டஞ்செய்வான்
மொய்த்துவன்சேனைசூழச்சென்றனன்சூரிமொய்ம்பன் (௧௦)

மாவுறையிடங்கள்காணவல்லதோற்கழற்கான்மள்ளர்
பாவடித்தாரைபற்றிப்பார்த்துப்பற்புலவுபாய்வாய்த்
தீவிழிப்புலிவன்கேழற்றிரண்மருப்பரிணம்புல்வாய்
மேவிடந்தாங்கண்டோடிவந்தவர்விளம்பினரால். (௧௧)

வேட்டஞ்செய்மார்க்கள்வல்லேமேவிவார்வலைகள்வீசி
மாட்டெங்குநீட்டும்வன்வாய்நாய்புறமருவிக்காப்பக்
கூட்டுமாவொதுக்கிநீட்டுபடைஞர்கள்குழுமிக்காப்பக்
கோட்டுமாமீதுமீனக்கொடியுடைக்குரிசினிற்ப. (௧௨)

ஒல்லையிற்றுடியுங்கோடுஞ்செவிடுறவொலியாநிற்ப
நல்லெழிற்பாவைகாட்டிகையவிளிகவிலாநிற்ப
ரெல்லையிற்புலியுமாறுமேனமூமிரியவீர
வில்வளைத்தெண்ணிலாதவெங்கணைவிட்டார்த்தாரால். (௧௩)

வேறு.

நிறைந்தமான்முறிந்ததாணெரிந்தசென்னியுதிரநீர்
பிறந்தவாறதாகவெண்ணிணம்பிதிர்ந்துபெருநிலஞ்
செறிந்தமத்தமாபனைத்திரட்கையற்றுமத்தகந்
திறந்துவாய்பிளந்துமண்ணுருண்டுவீழ்ந்துசெத்தவே. (௧௪)

பட்டபட்டமாவலாதுபட்டிடாதபற்பன்மா
வட்டமாகவட்டதிக்கும்வளையவிட்டவலையினுக்
கெட்டிடாமன்மட்டில்வேகமாகவோடவெயினர்நேர்
இட்டிவாளின்வெட்டவீழ்ந்துகெட்டவெண்ணிலாதமா. (௧௫)

வீரரார்ப்புடுக்கையோதைகொம்பினோதைவில்லுணக்
காரவாரம்பல்விலங்காற்றுமோதையரிணமேற்
சேருநாய்குலைக்குமோதைகானெலாஞ்செறிந்துசெற்
சாருநேரிதுருமினோதைதன்னையொத்ததாலரோ. (௧௬)

இன்னதன்மையின்விலங்கெலாமலைத்திலங்குவேன்
மன்னர்மன்னனானமாறன்மேற்றிசைக்கண்மருவுவா
னன்னபோதொர்கேழல்கேழலரசன்முன்னடைந்துநின
றென்னையாளுமிறைவவந்தவாறிதென்றியம்புமால் (௧௭)

வேறு.

எங்கண்மன்னவனேகேட்டியீங்குவாழேனமியாவுந்
திண்கண்மாமரபின்மாறன்செகுக்கின்றானென்றுசெப்பத்
துங்கவெங்கேழல்வேந்தன்போர்செயத்துணிந்துதன்பாற்
றங்குயிர்ப்பெடையைநோக்கியிங்ஙனஞ்சாற்றுமன்றே. (௧௮)

பாண்டியனெதிர்போய்ப்பாய்ந்துபற்பல்போர்பயிற்றிவென்று
மீண்டிவண்வருவன்கொல்லோவன்றிவீடுவேன்கொல்லோ
காண்டகுபறழ்கடம்மைக்கலங்கிடாதினிதுகாத்தே
யீண்டுநீயிருத்தியென்னும்பெடைக்கேழலினையகூறும். (௧௯)

ஆவியங்கேகவாகமிங்கிருப்பதன்றுமா
பாவியோபறழைத்தந்துநன்றனிபாதுகாப்பன்
கோவொடுசெய்யும்போர்வென்றுவரிற்கூடவருவேனன்றேற்
றாவணிப்போதோபோவம்வாவெனப்பெடைசாற்றிற்றே. (௨௦)

நல்லதென்றெழுந்துசேழலரசன்முன்னடப்பட்பால்
வல்லையிற்பெடையும்போகவரும்பறழினைத்தூக்கி
நில்லெனவிரட்டிப்பின்னேநேரேசேனில்லாவேனப்
பல்வகைவீரர்சூழக்காலெனப்பாறிற்றன்றே. (௨௧)

சென்றபல்லெறுழிச்சேனைதென்னவன்சேனைநேரே
யொன்றியொப்பில்லாவன்போருடற்றவாறுறதனோக்கி
மன்றலார்நிம்பமாலைமன்னவன்சேனைமள்ளர்
வென்றிவின்ஞேறிட்டுவிசிகமாமழைபெய்வித்தார் (௨௨)

இழிந்தனசோரியாறுயெழுந்தனசிரங்களிற்று
விழுந்தனகால்கடுண்டாய்விட்டனவிழுக்குமூளை
கழிந்தனகோடுகண்டங்கண்டமாயாவியோவி
விழுந்தனவல்லாவேனவீரர்கள்வெகுண்டார்த்தாரால். (௨௩)

கதத்தெதிர்மாறன்சேனைவீரரைக்கலங்கக்காலா
லுதைத்தும்வன்கோடுமார்பினூன்றித்தட்டுருவியோட
வதைத்துமேற்பாய்ந்துதள்ளிவாய்கொடுகடித்துமாய்த்துச்
சிதைத்துமித்தகைத்தெண்ணில்லாச்சேனையைச்செகுத்ததன்றே. (௨௪)

தாள்களற்றுருஞ்சில்லோர்தலைகளற்றுருஞ்சில்லோர்
தோள்களற்றுருஞ்சில்லோர்துடைகளற்றுருஞ்சில்லோர்
வாள்களற்றுருஞ்சில்லோர்மலரயன்வகுத்தவாம்வா
ணாள்களற்றுருஞ்சில்லோர்நரபதிசேனைவீரர். (௨௫)

பாண்டியனமாத்தியாயர்பார்த்தனரார்த்துத்தண்ட
நீண்டவேனேமிசூலமீட்டிதோமரங்கணேரே
தூண்டியாண்டடருமேனத்தொகுதிகடுண்டமாகி
மாண்டகண்டெறுழிவேந்தன்மனைப்பெடையிவ்வாறோதும். (௨௬)

வேந்தநஞ்சேனையாவும்வீந்தமேலினியாஞ்செய்ய
லாந்தகைத்தென்வாளாவிங்கழியினென்றுநாந்தப்பிப்
போந்துவாழ்ந்திடுவமென்றுப்புகன்றதந்துணையைநோக்கிச்
சார்ந்தொழிற்கஞ்சாவேனத்தனியரசினையசாற்றும். (௨௭)

மாதர்களளவிலாநூல்வாசித்துங்குணர்ந்தாரேனும்
பேதைமைத்தன்மைதானேபெருகுமென்றறிஞர்பேசுங்
கோதறுமொழிக்[illegible]கேடிதினைகொற்றமுற்று
மாதகவீரர்க்கே[illegible]மையன்றறனுமன்றால் (௨௮)

கருஇருட்போதுபூட்கையிரண்டுறைதுறையின்கட்போ
யொருமருப்பெறுழிநீருண்டுவகையிற்பெயருமொப்பி
லொருகருங்கேழல்வைகுந்துறையினீருண்ணப்போதற்
கிருதிறலரியேறஞ்சுமெனலறியாரியாரே. (உகூ)

அம்மரபினில்யான்வந்துமமர்புரிந்திடுதற்கஞ்சிப்
பொய்ம்மையாமுடல்போக்காதுபுகழுடம்பினையோபோக்கல்
செம்மையீதன்றுதென்னன்சேனைகடிடுக்கிட்டோட
வெம்மையிற்பொருதுவீரலாபங்கைமேவுவேனால். (௩0)

## வேறு.

என்றேயுயிர்ப்பேடையையாங்கணிருத்தியல்லார்
குன்றுமெனக்கானுறையேனக்குழாத்தையெல்லாங்
கொன்றுமெனவோடிடல்கூடற்குரிசினின்னி
லென்றுலெனவொத்தினிதார்த்தெதிரேற்றதன்றே. (௩க)

நிலங்கான்முகத்தாற்கிளைத்தேகிமர்தூசிகீள்வான
றலந்தோன்றுறுதுதகையத்தனியேனஞ்சாரும்
வலந்தோன்றுறவேவியந்தான்வில்வளைத்துவாளிக்
குலங்கோடிகோடிவிடுத்தானெடுங்கூடற்கோமான். (௩உ)

தொடுத்துச்செழியன்விடும்வாளியைச்சூகரம்வாய்க்
கடித்துப்பசும்புல்லெனக்கான்றனகாற்கையிற்கொண்
டொடித்துச்சிலவாளியைத்தேய்த்தடலூற்றவாலா
லடித்துச்சிலவாளியைப்போக்கிநின்றார்த்ததன்றே. (௩௩)

பொதியத்திறைகண்டுபொருதுபுழைக்கைகையி
னதியற்கரும்பொன்னமையோர்முசலந்தந்தார்த்துத்
ததையச்செலுத்திவரக்கண்டவேனத்தலைவன்பொரு
தெதிருற்றுலக்கையொடுநீண்டகையையிறுத்ததன்றே. (௩௪)

தந்திக்கிரியின்மிசைநின்றுசரேலெனப்பாய்க்
தெந்தக்கிரிநேரெனுந்தேர்மிசையெறிநேமி
சந்தக்கரத்திற்கொடுவீசத்தடுத்தவேன
முந்தித்தடந்தேருடைத்தார்த்தெதிர்மோதிற்றன்றே. (௩௫)

தேர்மீதிருந்தேபரிமீதுகுப்புற்றுத்தென்ன
னேர்சேர்செடுவேல்விடுவானெடுத்திட்டபோதே
பார்சேரொறுழிக்குலவேந்தன்பரிப்பிற்போய்ப்பாய்ந்
தூர்நேரெனவேசெருத்தாவிறையார்த்துப்பாய்ந்தான (௩௬)

தண்டோர்கையிற்கொண்டெறுழித்தலைவன்வன்றலைக்
கண்டானிடியொத்தடித்தான்கடிதாவியோவிக்
கண்டார்வியப்பக்கவின்மானமிசையிற்கண்ணி
விண்டானெதிர்கொண்டிடப்பொன்னகர்மேவினானே. (௩௭)

சுரர்பூமழைசிந்திடத்துந்துமிபேரியார்ப்ப
வரமாதர்களாடநற்பாடலமுதமுண்டும்
பெருவாரிதியின்னமுதுண்டும்பெறாதசெவ்வி
யுருவெளினுற்றரமங்கையர்கொங்கையின்புண்டும்வாழ்ந்தான். (௩௮)

வேறு.

நின்றதுகண்டநெடும்பெடையேன
மென்றுணைபொன்றவிருப்பதுகற்போ
வென்றிடறன்னினும்வீவதுமேலா
மென்றடல்வேந்தையெதிர்த்ததுருத்தே. (௩௯)

மன்னவர்பேட்டைவதைத்தறகாநீ
யின்னதனைத்தெறுகென்றவனேவ
மன்னுசருச்சரவேடுவேர்மன்ன
னன்னதனோடமராடியயர்ந்தான் (௪0)

படிமிசைவீழ்பவன்பற்றுகைத்தண்டாற்
பெடைதலையின்னடித்தேயுயிர்பேர்ந்தா
னுடனிருவோரும்விமானமதுற்றே
கடிதுபொன்னாடுகலந்தனரன்றே. (௪௧)

வென்றிபெறும்புயமீனவன்சேனை
துன்றிமுனும்பினுஞ்சூழ்தரவேபோ
யென்றிதுவாமெனவேயொளியீனுந்
தன்றிருமாமனைசார்ந்தனனிப்பால். (௪௨)

வேறு.

தாயுந்தந்தையும்வீயவபற்றமெலாந்தயங்கித்
தீயவெம்பசிதெறவெயில்சுடநிழறேடிப்
பாயுமீளுமெண்டிசையெலாமோடிடும்பார்க்கு
மோயுமாயெனும்பன்றிவாராமையாலுயிர்க்கும். (௪௩)

ஓடுமுற்றிடும்வாய்திறந்தாற்றுமுற்றிடாதாற்
றேடும்வீடுவபோன்மயங்கிடுந்திசைதிகைக்கு
மேடும்பள்ளமுமேறிடும்விழுமெழும்விளம்பாப்
பாடுபட்டிடுமேலியாதென்னெனப்பகர்வாம், (௪௪)

இன்னதன்மையிற்பேதுறுமத்தநியினிலெம்
மன்னையாமுமைதன்னொடுமெம்பிரானருளான்
மின்னுமாமணிவிமானமேற்கொடுவிளையாடி
யன்னகானகத்திச்சையாலமர்ந்தினிதிருந்தார். (௬௫)

ஏனத்தொண்பறமூறுபருவரலினுக்கிரங்கிக்
கூனற்றண்பிறைசூடியசடைமுடிக்குழகன்
றனப்பேடையின்வடிவெடுத்தெதிர்வரத்தயங்கவ்
வெனக்குட்டிகடுன்பமற்றின்பொடுமெதிர்ந்த. (௬௬)

இட்டமானதந்தாய்வரல்காண்பறழினங்கள்
கிட்டிமுட்டிவமுதுகுறத்தாவுவகீழே
யெட்டிப்பாய்வனகால்விசைத்தெறிந்துவன்னிலத்தை
வெட்டிமட்டிலாவுவகையிேனாடுவயீள்வ. (௬௭)

ஏனமாகியநாயகன்குட்டிகட்கெல்லா
மானமாமுலைப்பால்கொடுத்தவற்றெருடுவனப்பும்
ஞானமுந்திறலும்பெருமையும்பலகலனும்
தானமைந்திடச்செய்துபின்றேவர்கடலைவன். (௬௮)

கோலமாமுகமொன்றுமேகோலமாமுகமா
ஞானமானிடவடிவமாயுடலெழினண்ணச்
சீலமாகியசோமசுந்தரப்பிரான்செய்தக்
கோலமாமுருநீத்துத்தன்கோயில்புக்கிருந்தார். (௬௯)

ஓங்கப்பன்னிருவோரும்பாண்டியனமைச்சர்களா
யோங்கிவாழ்ந்தனருவர்கடாய்தந்தைவிஞ்சையரோர்
நீங்கிஞுள்புலத்தியன்றவஞ்செயும்பனசாலை
நாங்கர்யாழ்கொடுபோடிடப்புலத்தியனகைத்தே. (௭௦)

ன்றுநற்றவத்திற்கிடையூறதாயிசைசெய்
ன்றவிஞ்சையநீகிடியாகெனக்கிளப்ப
வன்றிச்சாபநீங்கிடுமெனப்பாண்டியனெதிர்த்துப்
பான்றச்செய்வனப்போதுபோம்போமெனப்புகன்றுன (௭௧)

ன்றவாறுபாண்டியன்றனுவிற்றிடுமடல
ன்றபன்றியாகெடுங்கிரியாமெனாநீயிர்வா
ஞன்றுகின்றவப்பருப்பதத்தற்புதமொருவா
ன்றுசிற்சிலவற்றையாமெடுத்தினியிசைப்பாம். (௭௨)

வராகமாகிரிமிசையுமைநாயகன்மகிழ்வாற்
பராவிவாழ்குவனவணமைமகிமைபற்பலவா
னிராசையுற்றமாமுனிவருஞ்சுரருநித்தமுமே
விராவிநற்றவமியற்றிவாழ்குவரளவில்லார். (ருங)

கருதுகின்றவர்தம்மனங்களிப்பகண்ணுவது
பொருதுகின்றவர்பாற்புயவலிபொருத்துவது
சுருதிமாமுடிபோற்சிகரங்கள்தொக்குளதவ்
வருமையாம்வராகக்கிரிவளமளவிலாது. (ருச)

காமனுக்குநல்லெழில்கொடுப்பதுசுதைக்கமல
நாமகட்களவில்பலகலைநவிற்றுவது
பூமகட்குயர்செல்வமெலாம்புகுத்துவது
போர்மகட்கெழில்பொருந்துபோர்த்திறம்புரிகுவது. (ருரு)

எண்ணுகின்றவரிடரகற்றிடுமிசையினது
கண்ணிற்கண்டவர்கருதுவதருங்கவினுளது
விண்ணைக்குத்தியப்புறம்புகுசிகரமேவியது
பண்ணைவண்டுகள்பயில்பொழில்பற்பலவுளது. (ருசு)

ஆலகாலமுண்டவனவாவொடுமமருவது
கோலமானவன்போலவண்டத்தைக்கோத்துளது
ஞாலமீன்றவன்கண்டுவெட்கிடுநலத்தினது
வேலனற்குறமாதொடுமேவமேவியது. (ருஎ)

பத்தர்பற்பலயோகியர்ஞானியர்பரவி
நித்தநித்தமும்வாழ்தருமுயர்நிலையினது
சித்தர்வித்தியாதரர்கள்கின்னரர்கள்சேர்ந்துளது
சுத்தமாதவர்முனிவரர்தொகைதுலங்குவது. (ருஅ)

எண்மைத்தாகியநற்றொழிலியற்றிடினிமய
வண்மைத்தாகியமாபயன்வரவகுப்பதுமா
திண்மைத்தாகியதீவினைபற்பலசெயினு
நுண்மைத்தாகவேயவதுமுன்மாய்க்குமேன்மையது. (ருகூ)

வாழைமாமதுரக்கனிமந்திகளயின்று
தாழைமீதுதாவிடப்படிவீழ்கனிதன்னைக்
கூழைமென்குரங்குக்குலங்கைக்கொடுகுலக்கற்
பூழைபூடுபோய்ப்புகுவதக்கோடவொருபால். (சுo)

கன்னிகாரநற்கருந்துணர்ப்பாதிரிகாயா
வன்னிகொன்றைமந்தாரநீடுறுகுராமருது
புன்னைபிண்டிவாசம்புனைகூவிளமகிழ
மன்னுநந்தனமாவனத்தின்வனமொருபால். (௬௧)

மயிலைமாலதிமல்லிகைபித்திகைமறுவி
லயின்முகைத்தளவம்பலமலரலர்ந்தழகு
பயிலுமாதவிபம்பியசூழலிற்பரவி
யியலும்வண்டினத்தின்னிசையின்னெழிலொருபால். (௬௨)

நரந்தைவாழையினற்கனிநாவலங்கனிகட்
கரந்துமண்ணினுட்கனிபலவின்கனிகவினே
நிரந்தமுந்திரிகைக்கனியெங்கணுநெருங்கிச்
சுரந்துவீசிடும்வாசனைதொகுவனவொருபால். (௬௩)

ஏலமாவிலவங்கங்கச்சோலம்பச்சிலைதக்
கோலமாஞ்சியுங்குங்குமமுங்கடிகுழுமிக்
காலநின்றதோர்கருப்புரவாழையுங்கலந்தே
ஞாலமெங்கணுநறுமணநாட்டுவவோர்பால். (௬௪)

நாகமேவியநாகங்கணடுநடுங்கிடவே
நாகதாளியின்கனிசிறுபாம்பெனநண்ணித்
தோகைமஞ்ஞைகடொடர்ந்துபோய்க்கொத்தலுந்துளங்கி
யூகசாலங்களோடியேயுலைவுறுமோர்பால். (௬௫)

சரோருகங்கருங்குவளைசெங்குவளைகடயங்கும்
பரோடைநீரொடுமட்டையைப்பருகுபல்வேழ
முராமவொண்மரத்தொண்டழைகைக்கொடாண்டுண்டுண்
டரோகமெய்தியேயதிர்க்குமவ்வரையகத்தொருபால். (௬௬)

கனைதருங்கவரித்தருவெங்கணுங்கனைக்கக்
கனைத்திடுங்கவரிக்கணமென்பர்காய்புலியங்
கனைநலார்மறையாலகல்வாயினைக்கட்டுங்
கனைமலர்ப்பொழில்காட்டுபெற்பலகவினொருபால். (௬௭)

காயமெட்டியேமுட்டியுங்குழைதழைகலந்து
மாயமோவிந்தவன்மரம்வைகலுமருவுஞ்
சாயையில்லெனச்சார்ந்தவரையுற்றுச்சாற்றச்
சாயையின்றியதருத்திரள்சாருவவொருபால். (௬௮)

விடபமீதினிலேறினர்விழிகட்குவிழாவுங்
கடகயானையுமிரதமும்பரிகளுங்கலந்த
தொடர்பினெனவுந்தோற்றுவித்திறங்கிடிற்றேற்ற
நடலையாக்கிடுநற்றருநண்ணுவவொருபால். (௬௯)

சருகுகாய்கனிபறித்திடநினைத்துத்தன்னிடத்து
மருவுவோர்களைவிளார்கொடுவளைந்தடித்தடித்தே
யரவுபோலவேசீறியேயாவியையகற்று
முரனுலாவியதருக்குலநெருக்குறுமொருபால். (௭0)

சுவானக்குட்டிகடொக்கனவெனப்பயந்துன்ன
வவான்வரைத்தலையோடியபுலிப்பறழனைத்துஞ்
சுவானக்குட்டியிற்காய்பலகாய்த்தனதோற்றுஞ்
சுவானக்குட்டியின்மரங்கண்டுதுளங்குவவொருபால். (௭௧)

வழுத்துவேடுவர்மக்கண்மானுடமரம்வடிவாய்ப்
பழுத்துநிற்பனபார்த்தந்தத்தருவினைப்பரிவாற்
குழுக்கொண்டாடநும்பிள்ளையைக்கூட்டெனக்கூறி
யொழுக்கத்தோடுறநின்றழைப்பவர்திரளொருபால். (௭௨)

தங்குலத்தினிற்றோன்றுமங்கையரிவரெனத்தாம்
வெங்குலத்தவில்வேடுவர்பேதையர்விரும்பி
மங்குல்சூழ்வரையிற்றிரிதருமகண்மாவை
யிங்குவம்மின்களெனவழைப்பவர்திரளொருபால். (௭௩)

கருடவேகத்திற்றிரிபவரினமெதிர்காணு
விருடியாமெனவேயிறைஞ்சிடப்பயந்தேகும்
புருடவன்மிருகங்களுமிடையறப்பொலியும்
வருடையாடுகளுந்திரிதருவனவொருபால். (௭௪)

இத்தகைப்பெருமான்மியநிறைகிரியின்வாய்ச்
சுத்தமாம்வராகப்பெயர்முனிவரன்றுன்னிப்
பத்தர்சித்தர்பண்ணவர்முனிவரர்திரள்பரவி
யுத்தமத்தவமுஞற்றுவைபவங்கள்கண்டுவந்தான். (௭௫)

எங்கணாயகனுமைநாயகனிசையுத்
துங்கமாகியதொல்வரைமாபரிசுத்த
மிங்குயாம்வசித்திடத்திடமாமிடமென்று
வங்கணாற்றவமாற்றிவைகினனகமகிழ்ந்தே. (௭௬)

வராககிரிப்படல முற்றிற்று.

# அம்பாநதிப்படலம்.

வராகமாகிரிவளம்வழங்கின
மிராகநீத்தமாமுனிவரேத்துசீர்
விராவுமாம்பிராவதியின்மேன்மையைத்
தராதலத்தினிற்சற்றுச்சாற்றுவாம். (௧)

வேறு.

அம்மலையணித்தாகாநகரமுமனேககால
மும்மழைபொழியாதாகியுயிரொலாம்வாடமுக்கட்
கைம்மலையுரிமேற்போர்த்தகடவுள்வண்கழையாமென்றோள்
மைம்மலிகூந்தற்செவ்வாயுமைமதிவதனநோக்கி. (௨)

மதிநுதன்மதுரமென்சொல்வனிதைசூகரவெற்பின்பாற்
பதியெலாம்வருடமோவப்பலவுயிர்வருந்தல்பார்த்தா
மிதுதனாலவ்வெற்பெய்தியெழுகடலெல்லாமட்டு
நதியினல்லுருவமாகிவாவெனநவிலகம்பன் (௩)

தண்மதிதங்குமோலித்தலைவன்சொற்றலைவிதாங்கி
யெண்பெறுபிருங்கியாதிமுனிவர்களிறைஞ்சிச்சூழப்
பண்மொழித்தேவர்மாதராயம்பக்கம்பராவத்
திண்கரியரியுலாவுஞ்சூகரத்திகிரிசேர்ந்தாள் (௪)

உலகெலாமுய்யவொப்பிறன்னுருவாறுயோங்கி
யலைகுலாமம்புராசியளவுமார்ந்தனளவ்வேலை
மலமறுமுனிவர்சூதமரமதாய்த்தவங்கைவாய்த்தா
ரிலகரமாதர்பற்பல்கொடிவடிவெடுத்தின்பெய்ந்தார். (௫)

உலகெலாங்காக்குமொப்பிலுமைநதியுருவாயுற்றங்
கிலகுநாடோங்கியந்தநதியம்பாநதியாமென்றும்
வலமுலாமாழைமூலம்வரலாலம்பிரவாறென்றும்
பலபெயர்பகர்வாரந்தநதிவளம்பகரற்பாற்றே. (௬)

வேறு.

தேவசுரபிகர்ப்பபுரிதெரிசித்திவோன்வராககிரி
மேவிநதியினிருமருங்குமிளிருந்தலங்கடமைவிழியி
னுவலோர்டுமாங்காங்கரியதவங்களாற்றுதலா
லோவிலாம்பிராவதிக்குப்பொருவேயெனப்பேருரைப்பாராஸ். (௭)

வேறு.

குகராசலமேற்றிசைக்குதலைத்தி
னேகநாயகிதன்னுருக்கரந்திருந்தியா
யோகையோடலைக்கரத்திற்கைத்தொண்மணியுருட்டி
மாகநீண்மலைநின்றுகீழிறங்கினண்மாதோ. (அ)

வேறு.

சந்தனமுங்குங்குமமுநாண்மலருநீண்மணியுந்தயங்குசோதிச்
செந்திருமான்மதமுஞ்செழுமாழையின்பொடியுந்திகழச்சேர்ந்த
மைந்துடையதன்கணவன்மணிவரைத்தோள்புணரமனமகிழ்வுமன்னச்
சுந்தரநல்லணியணிந்துகொண்டுவருகிறவாறுதோற்றிற்றன்றே. (கூ)

உரககணபணவணியுமுருத்திராக்கமுங்கரியினுரியுங்கேழல்
வருமருப்புமருவருப்புவரப்புரியுந்தழுவுதொறுமாலென்றேலத்
திருகரையுந்திரைத்திருக்கையெடுத்தெடுத்தப்பால்வீசிவீசியேசி
துருவநகையினிலரமணிகணிரறவிரைவினோடிற்றன்றே. (க0)

சிலம்புசிலம்பொலிசிலம்புசிலம்பொலியாவலைக்களத்திற்செறிந்துசெவ்வே
புலம்புபலபுட்குரல்புட்குரலாகவறலளகம்புறத்திற்றாழ
நலம்பொலிபல்கலன்சிதறினாலெனக்காசினமுமணியணியுநாலத்
தலம்பரவுமுமைநதிதன்றலைவனைத்தான்றழுவியசீர்தழுவிற்றுமால். (கக)

வெண்ணிறத்துகிலைவிலக்கிவிட்டனபோனுரைகரையினருகுமேவ
வண்ணவதனத்துவெயர்வந்தனபொற்சிறுதிவலைமருங்கிற்சிந்தக்
கண்ணினிற்காணுதல்கலவிகாசெனப்பல்ககமிருககணங்கள்யாவுந்
துண்ணெனொலியாற்கலங்கியோடவோடினவுமையாந்துநீராறு. (கஉ)

கணவர்தமைக்கலவாதாற்கலந்தவிளர்ப்பனைத்துமவர்க்கலத்தலோடுந்
தணந்தவெனப்பொற்பொடியுந்தண்மலர்த்தாதுகுபொடியுந்தாங்கிச்சேந்த
திணைந்தகையிற்காந்தண்மலரிலகிடத்தோளிணையிணைவேயெய்தவேங்கை
மணந்தமலர்மலைமுலையின்மருவுசுணங்கெனப்பொலியவந்ததாமால். (கங)

பொருப்பினத்தைப்பூண்முலையைப்பொருவவெனப்பொருததனைப்புரட்டிப்பூ
மருப்பினத்தையலைக்கைகொடுவாரிமூரிக்கன்மிசைமடியமோதி [ட்கை
விருப்புறுகண்ணிணைக்கயலுமிளிர்நீலக்குவளைமலரும்விடாதவாரித்
திருப்பயில்சொன்னிகர்வவெனத்திங்கனியின்றிரடிரட்டிச்சென்றதாலோ. ()

கொன்றைநறுங்கூவிளையுங்குருமலராத்தியுந்தனதுகொழுநன்சூடி
நன்றுமகிழ்கின்றதெனத்தன்றலைமீதிற்சுமந்துநறவையுண்ப
தென்றுமெவருக்குமடாதென்றுதன்றுநின்றவிருளினத்தையெல்லா
மன்றவிருகரைவீதும்வாரியெடுத்தேவிலாசந்தந்ததாமால். (கரு)

மாவிரிபார்வதியம்பாநதிவடிவமாகியவண்வருதனோக்கிப்
பாவிரிமாபுலவர்புகழ்பவகாசவிசுவாசப்பண்பேபல்குங்
காவிரிமாநதிகடிதினடிவீழ்ந்துதன்றலைமீக்கமையிற்றாங்கித்
தீவிரமாயெனதுபவந்தீர்ந்ததெனக்கடலிடையிற்சேர்த்ததன்றே. (௧௬)

கங்கைசரசுவதிநருமதையமுனைகுமரிகனமுறுகாவேரி
மங்களகோதாவிரியாநதிமாதருமைமாதுமலரிற்செவ்வி
தங்குதிருவடிதொழுதெந்தமைக்காவென்றேதுதிசாற்றுமிந்த
மங்கையர்மாநதியையுமைமாதுநதிக்குவமைசொலுமாறெவ்வாறே. (௧௭)

உலகுபுகழ்தருமம்பாநதிகௌரிநதியுமாநதியொப்பில்லா
திலகுபராசத்திநதிபவானிநதியமலைநதியிமையோர்போற்று
நலமுலவுநாரிநதியாம்பிராவதிநதிதாய்நதிநாம்போற்ற
வலகில்பவமெலாமறுக்குமம்பிகாநதியெனப்பேரனந்தமாமால். (௧௮)

அண்டமுறுபனிவரையிலவதரித்துநீலநிறமார்ந்துமம்பொற்
றண்டரளவணிதழுவித்தலைத்தலைநல்லறத்தொழில்கடழையவாற்றி
யெண்டிசையுமண்டுபலவளமுளவாகிடவியற்றியெய்தலாலே
கண்டவர்களுமையெனவேகைகூப்பப்பொலிந்தனவக்கௌரியாறே. (௧௯)

உவமையகலுமைநதியாயுறுவகண்டசிவகணங்களுற்றவ்வோங்கற்
பவமகலுமுயர்தருவாய்ப்பைங்கொடியாய்ப்படிவுகொடுபகலிராவு
நவமலர்தூய்நிழனிரப்பிநாரிதிருவடிபரவநமைவாழ்விக்க
வவனிமிசைவருமம்பாநதிமகிமைசொலும்வலமையடைவாரியாரே. (௨0)

கோலமலைச்சூதமரமூலமிருந்தெழுந்தவம்பாநதியாங்கோலங்
கோலமுறுகுறிஞ்சிமுல்லைமருதமெனுநிலங்கொள்பலவளங்கைகூட
ஞாலமுறுபலவுயிருநனிவாழத்தனிகாத்துநவைகடீர்த்தெக்
காலமுநற்றாய்தனதுகான்முளையைக்காப்பனபோற்காத்ததன்றே. (௨௧)

சேலின்விழிகொடுபார்த்துத்திரைக்கரங்களாற்றழுவிச்செழுநீராட்டிப்
பாலினமுதுணவளித்துப்பற்பலநற்கனிபரிவினீந்துவாசக்
கோலமலர்களைச்சூடக்கொடுத்தளவிறனியம்பொற்குவையுங்குன்றின்
சாலமெனவேநிறையத்தந்தனவம்பாநதியாந்தாய்நீராறே. (௨௨)

நாயகனோடாடினவர்நானமியற்றுதற்கேகுநயங்கடோன்றத்
தூயவனவானேயமாமலகத்துவர்விரைவத்துகள்கைக்கொண்டு
நேயமொடுதாயுமையாநதிவருதல்கண்டெதிரோநேர்ந்துதன்னீள்
பாயவலைக்கரத்தேந்திப்படிவித்தாளெனக்கடலிற்படிக்ததன்றே. (௨௩)

நிவந்தபுனலாம்பிராவதிநதிகற்கரையிருந்துநேரிலாத
தவஞ்செபந்தியானமகமியோகமொடுதருமமிவைதகவினாற்றி
னவந்தெறுவதன்றியொன்றொன்றனந்தவனந்தமதாகவாகுமாரும்
பவந்தெறும்பற்பலவிபவப்பண்புதருமிதன்மகிமைபகர்பாலமைத்தோ. (௨௪)

வேறு.

பலவளநிறையுமாம்பிராவதியின்பாங்கரிற்பருமணிபரவி
யலகறவொலிசெய்பலதிரைமருவுமருங்கரைமிசையவிரார
வுலகெலாமுணர்ந்துவணங்கவீற்றிருக்குமொண்மதியணிசடையுடையோ
னிலகுநற்றானம்பலவுளவவற்றுட்சிலதெரிவகையெடுத்திசைப்பாம். (௨௫)

செவ்விசேர்குன்றிமணிவிழியுளசூகரப்பெருந்திகிரிமுன்சேர்ந்து
வவ்வியமறுத்தவராகமாமுனிவனன்னதிக்கரையினிலமல
மொவ்விலிங்கம்மொன்றுறநீறீஇமலர்தூயருச்சிக்குமியோகலிங்கத்தைச்
செவ்விதிற்பணிவோரியோகஞ்சித்தித்துச்சிவபதிசேருவர்திண்ணம், (௨௬)

சுரர்முனிவரர்களிருடியர்சித்தர்வாலகிலியர்கள்சொலியக்கர்
நிருதர்கள்பிரமசாரியரில்லோர்நேரிழையொடுநெடுவனத்து
வருபவர்துறந்தோரியோகர்பூசுரர்கண்மாநிலமன்னரிலைவ
ரரியநற்சேரனுதியராம்பிராவதிநதிக்கரையடைந்து. (௨௭)

பொன்னிறொண்மணியின்வெள்ளியிற்சிற்பப்பொற்பினிலிரதவாதத்தி
லின்னவில்சிலையின்மணலினிலுருவமியற்றினரிலக்கிலாவிலிங்க
மன்னவைபணிதலரிதுமாதவஞ்செய்தார்க்கலாற்பணிதல்கையடையிற்
பின்னிடையூறுபிறவிநோய்முற்றும்பேர்ந்துமாபதிபதம்பெறுவார். (௨௮)

சூரனைப்பிளந்தசுடரிலைவேலோன்சுரர்பதிகரிமுகத்தோன்றல்
வீரநேர்விநதைதனயன்மேல்வருவோன்மேதகுமறைதெரிவேதா
பாருறைதருவிப்பிரர்பலவரசர்பண்பொடுகோடொறும்பணியு
மேருறுமிலிங்கமாம்பிராவதியினிருகரையலகிலாதிலங்கும். (௨௯

அருமறைபயில்கோசிகன்பரத்துவாசன்காசிபனருட்டுருவாசன்
பொருவறுததீசியகத்தியன்வசிட்டன்பொற்புறுகோதமன்கபில
னரியவத்திரிநாரதன்பராசரன்காலவன்வியாதன்னிவரமல
வுறுநிறீஇமலர்தூய்வணங்குமாவிலிங்கமளவிலவுளநதியோரம். (௩௰)

மரகதவடிவப்பச்சிலையொளிரும்வச்சிரவுடன்மடற்பூக
நிரைதருசோமநாதத்திற்சோமனிகாறுமுனிவனேரிழையா
ளுரைபெருஞ்சாபமோவமாமலர்தூயொப்பறுபூசனையுஞற்றுந்
தரைபுகழ்சோமநாதலிங்கத்தின்பெருமைசாற்றிடமுடியாதால். (௩௧)

அத்தலமதனுக்கடுத்தகீழ்த்திசையினம்புலியாளம்வெவ்வரவும்
வைத்தசெஞ்சடைசோனார்தகனேசனென்றுயர்மாநிலம்வழுத்து
மூத்தமலிலிங்கந்தனைநனைமலர் தூயிறைஞ்சவோருறுபவமோட்டிச்
சித்தமென்மேலுமகிழ்வுறப்பரமசிவவுருக்கொடுதிகழ்வாரால். (௩௨)

கங்கையங்குடிலைருக்கடிகமழ்சடிலமொடுதரக்குரியுடைகளுலத்
துங்கவாகீசரெனவுலகோதுந்தோமறுசோதிலிங்கத்தின்
செங்கமலத்தோன் மாலிவர் துதிக்குந்திருவடியிடைமலர்சிதறித்
தங்குமன்பொடுதாழ்பவாருஞானஞ்சார்ந்துசாரூபமேசார்வார். (௩௩)

திகழ்மறையூர்த்தென்காசிலிங்கப்பரெனப்பெயர்செகமெலாஞ்செப்ப
வுகப்புறவுளதோரிலிங்கமத்தாணுவுகளநல்லடியிடையொளியு
மிகப்பரிமளமுமுறுநறுமலரால்விதிப்படியருச்சிக்குமேலோ
ரிகத்தினிற்பெறும்பேறெய்திமேல்வீடுமெய்துவர்பவமெலாமேக. (௩௪)

அவ்விலிங்கத்திற்கடுத்தழற்றீர்த்தமமருமொன்றதனிடையாடின்
வெவ்வினையனைத்தும்வீடிடும்வாதமெண்டதுஞ்சன்னியும்வீயுங்
கவ்வைசெய்சயநோய்தீருஞ்சீதளநோய்கருகிடுஞ்சுரங்களஃறுது
வெவ்வலிவெருண்டுபோறுமத்தீர்த்தப்பெருமையார்விளம்பவல்லவரோ. (௩௫)

செயிரில்சந்திரபுட்கரிணியென்றொருமாதீர்த்தமத்தலத்தினிற்சேரு
நியமமொடதின்மூழ்கினர்பெரும்பவங்களைருப்புறுபஞ்செனநீறு
மயனநோய்தொண்ணூற்றாறுநீரிழிவுநலிபிரமேகமுஞ்சிக்கு
முயருமத்தீர்த்தப்பெருமையிப்படியென்றுரைக்கும்வல்லமுளோரியாரோ. ()

திருவுறும்வாதராசமாபுரத்துப்பச்சிமதிக்கினுந்திகழ்ந்து
விரிவுறுமம்பாநதிக்குத்தெக்கணத்துக்கரையினும்விண்டொடநிவந்த
வாதனச்சிகரச்சேதிமத்தமருமாணந்தமார்ந்தசோமேசர்
திருவடித்துணைதொழுதநோத்திரிப்போர்தீவினைக்கடற்கரைசேர்வார். ()

வேங்கடகிருஷ்ணசாமியாந்திருப்போமேவுவிப்பிரகுலதிலகன்
றுங்கிடதத்தேர்மெனகடம்புரியுந்தாண்டவேசுரர்திருத்தாளைப்
பூங்கடகக்கையுச்சிமேற்குவியப்போற்றப்பொன் பூமனைபுதல்வர்
தாங்கடலெனவேநிறைத்திடவார்த்துமையுமேற்பகர்பெயர்த்தாறு. (௩௮)

சீர்பெறுந்தத்தாத்திரேயலிங்கேசர்செம்பதுமத்திருவடிக்க
ணேர்பெறுமலா[illegible]ராமார்ச்சனைசெய்[illegible]வோர்
சார்தருசகலபா[illegible]
சேர்தரும்பரமசி[illegible]சமே. (௩௯)

அயிலைநேரிருகணம்பிகைவாமத்தமரமாமணியுமம்பொன்னும்
வெயிலைமென்மேலும்வீசுநீள்கோயின்மேவிவாழ்வுறுமுயர்விமலக்
கயிலைநாயகனுபயமாகழலைக்கைதொழுபவர்பவக்கடல்வீ
ழியலைநீங்கினராயெம்பிரானிருபாதத்தெழினீழல்வாழ்ந்திருப்பார் (௪0)

திருச்சினகரப்பொற்கோயிலினமரர்திரடினந்தொழுமகிழ்திளைக்கு
மருச்சுனலிங்கத்தவிர்மலரடியையன்பினாதிக்குமடியார்
கருச்சினஞ்சாராதாலகாலஞ்சேர்கண்டமுமரவவாபரணத்
திருச்சினந்திகழச்சிவபெருமான்றன்றிருவடிமலர்நிழல்சேர்வார் (௪௧)

இலகொளியியையுமெழிலுறுசுடராயெழுந்தகாஞ்சேசனென்றியம்பு
மலமறுமிலிங்கமொன்றுறுமதனுக்கடுத்தவேத்திரவனத்தின்கட்
குலவுமோரிலிங்கமுளமறைமுனிவர்கூட்டமுஞ்சுராருங்கொண்டாட
வலநிறையிலிங்கங்களைவழிபடுவோர்கதியினையெளிதின்மன்னுவரால். (௪௨)

மதியகடுரிஞ்சுநனைமலர்பொதுளும்வனஞ்சுலவுறமழையினங்க
ளதிகம்வந்துறங்குநெடுந்திருமதிலுமாரமுமணியொளியவிரு
மிதநிறைதருகொங்கணத்திலோரிலிங்கமெழிற்கொங்கணேசனென்றிசைப்ப
ரதன்றிருவடிக்கட்டாழ்பவர்தாழ்விலரும்பதமடைந்தகமகிழ்வார். (௪௩)

தேவர்வானத்திற்றிகழ்தருதாரகணங்கள்பூசித்திடுதேன்சேர்
மாவலர்கடுக்கைத்தாரகேச்சுரனைமாகதிமஞ்சனமதுகொண்
டாவலினாட்டியலர்மலர்தூற்றியன்பினாதிக்குமடியா
ரோவலிறாரகணத்தொடுமுறைத்தப்பாலுமாபதிபதமுறுவார். (௪௪)

பொலிவுறுதக்கன்றலையறுத்தயத்தின்பொற்றலைபொருத்துபோர்வீரன்
சிலசிவகணங்களொடுமடைந்தெதிரில்பூசனைசெய்திடுசெயலா
லிலகுதுப்பொளிகொள்சடைமுடிவீரேசன்னெழிலிணையடியிறைஞ்சி
யலர்மலர்சொரிந்தாராதனைபுரிவோரகிலநாயகன்கழலடைவார். (௪௫)

பிரமன்மாமகஞ்செய்புன்னைமாவனமேற்பிறங்கிடுமெப்பரமேசர்
சுரநதிமுடியிலாம்பிராவதியின்றூயநீராட்டித்தொல்வேத
முறைசகத்திரநாமார்ச்சனைபுரிவோரொப்புயர்வற்றொளிர்சோதிப்
பரசிவவுருவந்துறவடைவரியபதவிசேருவர்பவமற்றே. (௪௬)

பண்ணினிற்கனிசொன்முத்தொளிர்முறுவற்பவளவாய்ப்பார்ப்பதிவெறுமப்
பெண்ணிடம்பெற்றுவெண்ணிறமூன்றும்பிறைசடையிலச்சிப்பேசரிய
விண்ணிடையிடைந்திவசேதிமத்தின்மேவியவிசாலலிங்கத்தை
புண்ணெகிழ்ந்துருகியருச்சனைபுரிவோருறுவராலரியசாரூபம். (௪௭)

விரிசிரத்திரள்காய்நீளிலைப்பருஉத்தாள்விழுதுவீழ்கூந்தலந்தால
நிரைதருநீழற்சேதிமத்திருக்குநேரிலாக்காட்சிநாயகனை
விரிமலர்கொடுபூசித்தவர்சுழல்காலூசரேறருளெனவினையாற்
கருவினிற்சுலவாதுயர்விடைக்கொடிசேர்கடவுண்மாபதவிகைக்கொள்வார். ()

மலைச்சிலைகுழையவளைத்துவண்டுளபமாலைமாலம்பதின்மாட்டி
நிலைச்செயலிலாமுப்புரமுநீறுவெந்துறச்சிறுமுறுவலைநிகழ்த்திக்
கலைக்சிறுபிறையைத்தலைச்சடைமிலைச்சிக்கமழிதழித்தொடைசூழ்தோட்
டிலகுலேச்சுரனைத்தெரிசனைசெய்வோர்சிவபரகதியைச்சேருவரால். (௪௯)

இப்படித்தலமெத்தனையுளவதற்கப்பாலிசையாதிமாபுரமொன்
றிப்படிமுதற்பலுயிரொலாமீன்றவியல்பினாலாகமமெவையுஞ்
செப்பருங்கருப்பபுரியெனுமுயர்பேர்சேருமத்திருத்தலத்தின்க
ணொப்பருமிலிங்கமைந்துளதொழுவோர்க்குயர்பரகதியினையுதவும். (௫௦)

செப்புறுமவற்றிலாதிநாயகனென்றொருசிவலிங்கம்வன்மீகத்
தொப்பறவுறையுமதனிலெம்மிறைவனைந்தொழிலியற்றுவனோது
மப்பொடுமலர்தூயருச்சனைபுரிவோரடைகுவரரியசாரூப
மிப்படிவஞ்சுளேசனைத்தொழுவோரெய்துபேறெவரிசைப்பவரோ. (௫௧)

வஞ்சுளவனத்துவடகிழக்காகவாம்பிராவதியொடுமருவி
விஞ்சுறுமணிமுத்தாறுகாவிரியுமேவுறுமேவுமவ்விடத்தை
யெஞ்சலிறிருமுக்கூடலென்றிசைப்பரத்தலத்தெழிலிமையோர்க
டஞ்சமென்றடிபோற்றிடமணிலிங்கமொன்றவணுறைவசாற்றிடவே. (௫௨)

பூமலியலைசேர்மூவகைநதியுமொருங்குறப்பொருந்துறலானு
மாமணியிலிங்கமதனடுவெழுந்துவயங்குவைபவனத்தானுந்
தேமலரயன்மாலமரர்புண்ணியச்சேத்திரமெனச்செப்பல்செய்தாரோல்
யாமளவிட்டத்தலமகத்துவத்தையறைவதெங்ஙனமறவீரே. (௫௩)

அத்திரிகூடற்றிருப்புனல்படிந்தோரத்தலமான்மியமறைந்தோ
ரத்தலமகிமைகேட்டுளோர்நால்வேதத்தொடரொன்பதாகமங்க
ளத்தலத்திருந்தன்பாகவோதிடுவோரரியசீர்ச்சுவர்கத்தையடைவ
ரத்தலமணியீசுரரடிபணிவோரரன்மலர்ப்பதநிழலடைவார். (௫௪)

இன்னதிமருங்கின்மலசலங்கழித்தோரிசைசவுசங்கள்செய்திடுவோர்
பன்னுபல்விளக்கியுமிழ்ந்துளோராடைதனைந்திறங்கிடுமகாபதகர்
துன்னுநீரதிரத்தோய்குவோர்பூத்ததோகையர்மூழ்குறல்சொல்லு
மின்னனவியலாதனபுரிபவர்களெரிநரகக்குழியிழிவார். (௫௫)

புகல்புதுநீத்தம்போந் தழிப்புதியகௌசிகம்புதியபொற்றாசு
திகழ்புதுக்கலன்கள்செம்பொனாற்செய்பூவென் றிவைசிவபெருமானுக்
ககமகிழ்ந்தணிந்தா ரா தனைபுரிவோ ரடர்பவம்பொடிப்பொடியாகி
மகிதலம்புகழவிகபரசுகங்கண்மருவிமாசகல்பதம்வாழ்வார். (௫௬)

அண்டமுட்டிடுசூகரவரைபணிந்தாங்கதிர்கரையவிர்மணிவீசு
தெண்டிரைசெறியம்பாநதிபடிந்துதிகழிருகரைச்சிவலிங்கங்
கண்டடிபணிந்துபுகழ்ந்தருச்சிப்போர்கருவிடைமறுபடிகலவா
தண்டர்போற்றிடுமெம்மானருட்கழலம்போருகநீழலிலடைவார். (௫௭)

வேறு.

இன்னமான்மியமியையுமம்பாநதியாடற்
குன்னுகின்றவருயர்மறையோதும்வேதியருக்
கன்னதானந்தன்னாலியையளவினிலாற்றிப்
பின்னர்சங்கற்பம்பேசுகபெரிதகமகிழ்ந்தே. (௫௮)

பொங்குசோதிவெண்ணீறணிபொலிதரப்பூசிப்
புங்கமேவுகண்டிகைகளம்பொருத்திப்பொற்புற்ற
செங்கையங்குலியிற்பவித்திரந்தனைச்சேர்த்தி
யங்கண்மாநதிசெலவிலமகன்றினிதாக. (௫௯)

பத்தியோடுமைந்தெழுத்துநாத்தழும்புறப்பயின்று
சுத்தமெய்திக்காமம்முதற்றூர்க்குணந்துறந்து
சித்தமோடுமைந்திந்திரியங்களைச்செயித்து
நித்தமாற்றுநைமித்திகநெறியினிலியற்றி. (௬௰)

காலின்மேலிடுகழல்குடையொடுநனிகமழ்தாம்
பூலம்பொய்மகளெண்ணெயென் றின்னனபோக்கிச்
சீலமல்லவாந்தீவழியின்வழிசெலாம
லேனுநல்வழியெவ்வழியவ்வழியேகி. (௬௧)

உப்பிலாமலேயொருபகலொருதரமுணவுண்
டொப்பிலாவுமைமாநதிமான்மியமோதுந்
தப்பின்மாக்கதைசாற்றியம்பிகைமணாளன்றாட்
கொப்புபூசனையுஞற்றியுண்மகிழ்வுதூர. (௬௨)

இருவர்பாலொருபொருள்களுங்கைக்கொளாதயனாந்
தரியவேள்விகளாசறவாசையினாற்றிக்
கருதனண்பகற்கண்ணுறுமதிதியர்களிப்ப
வுரியசட்சுவையோதனமுவகையினுதவி. (௬௩

அறிவுசான்றிடுமெருந்தவர்க்கருசுவையான்ற
றறியவுண்டிகணல்கிரன்னூனவிதுறுமிம்
முறைவழாமலம்பாநதிமுதிர்கரையருகு
குறுகியேயிருகரங்களுஞ்சிரமிசைக்கூப்பி. (௬௪)

தருமமியாவையும்வளர்க்குமம்பாநதித்தாயே
யருமையார்திருத்தீர்த்தமாடிடவருளருளென்
றுருகியொண்டுதியோதிவீழ்ந்தேபணிந்துவகை
மருவியேயிருவத்திரமிடையிடைவரிந்து. (௬௫)

மனைவிதன்வலக்கையிடக்கையினின்மருவ
வினிதுபற்றிநாயேன்பவவீட்டமற்றிடவுன்
கனிதிருக்கடைக்கண்ணருள்செய்யெனக்கழறிப்
புனிதமாநதியெதிர்பொருந்திடப்புகுந்தாடி. (௬௬)

பின்னரின்னகத்தீசர்தாள்பெட்புறவணங்கி
மன்னுமாமறைமந்திரம்வரன்முறைபுகன்று
முன்னர்மூழ்கியமுறைதவராமலேமூழ்கிப்
பன்னுமேழ்பரியிரதமூர்பரிதியைப்பார்த்தே. (௬௭)

தேவநின்றிருக்கரம்படத்தீர்த்தங்கணிமல
மாவவென்றருமறையெலாமறைதலாலடியேன்
பாவமோவிடுமாறருள்புரியெனப்பணிந்தே
யாவலோடுமுன்முறையினைதியெதிராடி. (௬௮)

உம்பர்மாமுனிவோர்பிதிரொனுமிவர்க்குவகை
பம்புமாறுதர்ப்பணம்பணிப்பாய்புனற்கரையி
னும்பரேறிமுற்றுகில்களைந்துலர்துகிலுடுத்தே
யின்பமுற்றிடுமாசமனம்பெரிதியற்றி. (௬௯)

தெய்வநீறுகண்டிகைவிதிமுறையணிசெய்து
வெளவைதீர்சிராரத்தங்கண்ணியங்கணவியற்றிப்
பொய்மைதீர்மறையோர்க்குப்பொன்னிலங்கலனுடை
யெவ்வமில்பசுவாதியதானங்களீந்து. (௭௦)

திங்களஞ்சடைசேரகத்தீசர்தன்றிருத்தாட்
டுங்கமாமகிலாண்டவீசுவரியின்றுணைத்தாட்
பங்கயம்பணிந்தேயெமைப்பாதுகாவெனவுந்
துங்கமாகியதோத்திரங்களைக்கொடுத்திசைத்து. (௭௧)

எழிலியைத்ததன்மாமனையின்வயினேகி
விழுமிதாமறையோர்பெரியோர்விருந்தினர்கள்
குழுவையூட்டிப்பின்னுண்டிடுங்கோதிலாதவர்சே
ரழிவின்மாபலத்தளவளந்தறைபவரியாரோ (எ௨)

அரியமாதவமாற்றினர்க்கல்லதிவ்வாற்றின்
மருவியாடிடவாய்ப்பனவல்லமாதவர்காள்
திருவிளையகன்புகழுமம்பாநதித்தீர்த்தப்
பெருமையிற்சிலபேசுவன்கேண்மெனப்பேசும். (எ௩)

அன்னன்மேவுமம்பாநதியமலதீர்த்தத்தைக்
கண்ணிற்கண்டிடுமோனவர்கருதுதற்கரிய
வெண்ணில்வேள்விமாதவமெழிற்றீர்த்தயாத்திரைகள்
பண்ணுமாபலன்பலித்திடுமெனிற்பகருவதென். (எ௪)

கோதிலாதவம்பாநதியாடனீகுறுகென்
றோதுகின்றவன்மேற்புகல்பலனெலாமுறுவன்
நீதுதீர்நதியாடுவோனடைபலன்செப்பற்
கேதுவல்லபமெற்கிலையிசைகொண்மாதவரே. (எ௫)

மொழிவதற்கரிதாலம்பாநதிமூழ்கி
னெழுபதாயிரகோடிதங்குலத்தொடுமேம
வழுவிலாமலைவில்லியான்றிருவடிமலரி
னிழலின்மேவிடுவாரெனிலென்னிகழ்த்துவதே. (எ௬)

எந்தையாமகத்தீசர்பாதத்தையெவ்வுலகுந்
தந்ததாயகிலாண்டவீசுவரிதாளிணையைச்
சந்தமிக்கவம்பாநதிதன்னைச்சந்ததமுஞ்
சிந்தைசெய்பவர்சேர்பயன்செப்புதல்கேண்மின். (எ௬)

தாயர்தந்தையராமிவரிருவழிதனினு
மேயகோடிதந்தமரெலாமருகினின்மேவ
வோய்வில்கற்பமொன்றுயர்சிவபதவியினுறைந்து
தூயமுத்தியின்னடைகுவராற்றுறவினரே. (எ௮)

கோதிலாதவம்பாநதியாடினோன்கொடிய
தீதுசேருமைம்பாவங்கடினந்தினஞ்செயினு
மாதிசோதியொண்பதவியிலம்பதுகோடி
காதல்சேர்தமரொடுமடைகுவன்பவங்களைந்தே. (எ௯)

விழுமவெங்குகைதங்கியேயுருகிடான்மிகவும்
வழுவழுப்புளவசைக்கிணறாழ்தரமாட்டா
னிழுமென்வைதரணிக்கணினிழிதரலெய்தான்
றெழுகுலத்தர்கொண்டாடுமம்பாநதிதோய்ந்தான். (அ௦)

வளைந்தவன்சுவானத்தசைவாயிடைமடுக்கா
னுளைந்துகவ்வியேயுணவதனுக்குணவாகான்
களைந்தமூத்திரந்தாகத்திற்குண்டிடல்கண்ணான்
விளைந்தமாவுமைமாநதியாடியமேலோன். (அக)

காய்ந்தசூலத்திற்கல்லினிற்கரிந்திடான்கலங்கிச்
சாய்ந்தசோரியுங்கிருமியுமுண்டிடல்சாரா
னேய்ந்தமுண்முருக்கேறலான்மலமடுவிடையே
தோய்ந்திலானுமைமாநதிதோய்தருதூயோன். (அஉ)

செருமவீழ்தருஞ்சிலைமழைதீமழைசேரான்
கருவிற்காய்புனற்காரவெந்நீரிடைக்கலங்கான்
குருதிக்கூவலிற்குளித்திடான்கொழுந்தழற்குழியின்
வெருவிப்பாய்தரானும்பிராவதிபடிமேலோன். (அ௩)

சென்னிகீழதாய்வீழ்கிலான்சிலைமரத்திற்செய்
துன்னுசெக்கினிலறைபடான்சடசடதொனிசூழ்
வன்னியின்னிடைமறுகுறான்சுழல்வளிமருவ
வின்னலெய்திடானும்பிராவதிபடியெழிலோன். (அச)

மண்டுகோமநீருண்டிடான்மலக்குவைவாயிற்
கொண்டிடானுடல்பூசிடான்கொதிகொதிகொதித்துத்
தண்டினாலடித்திடுமடிபடத்துயர்சார்தல்
கொண்டிடானுமைமாநதியாடுகொள்கையினான். (அ௫)

வைத்தவாயரிவாளினாலறுப்புணமாட்டான்
பித்தங்கோளைகைப்பென்பனவுண்டிடான்பெரிய
வத்திதோறசையயில்கிலானவையறுப்படையா
னித்தராதலத்தாம்பிராவதிபடிந்திட்டோன். (அ௬)

துன்றுபல்லகியின்கடிதோய்கிலான்றுலங்கு
குன்றுநேர்கரிக்கொடுரங்குத்துவகொள்ளா
னன்றிக்காய்சிலையெண்ணெயென்றின்னனவயிலான்
வென்றிமேவுமம்பாநதியாடுமேலோன். (அ௭)

வெந்தவெம்மணல்விழுகலனெழுகலன்விழும
முந்துதீமுனை யூசியின்மிசையிருந்துழலான்
முந்துமாகடுங்காரரங்கண்முகத்தின்மூக்கின்கட்
சிந்தல்சேர்தரானம்பிகாநதிபடிதிறலோன். (௮௮)

உருவிலென்பினைப்பிடுங்கிடவொடுங்குவதுருனீ
டருவினின்றுதாழ்மலக்குழிதள்ளுதல்சாரான்
வெருவுமூவிலைவேல்கொடுகுத்திடவீயான்
பொருவிலாம்பிராவதிநதியாடியபுனிதன். (௮௯)

தீயபாசங்கைக்கொண்டுடல்கட்டிடல்சேரான்
பாயுந்தீப்புகைவாய்ப்படான்பற்பலபடைகள்
காயிரும்புறுபலகையிறகட்படைகாணான்
றூயதாயவம்பாநதிபடிபரிசுத்தன். (௯0)

அயத்தினூற்புரியுருண்டைநீள்கம்பியாண்குறியின்
வயத்தின்மாட்டிடவாடிலன்குசிவத்திரத்திற்
புயத்திற்கண்ணினிற்சந்தினிற்பொருத்துதல்பொருந்தான்
செயத்தையீயுமம்பாநதியாடிடுதிறலோன். (௯௧)

இனையவெந்நரகெண்ணிலவிருக்கினுமிஃதெட்
டனையுமேதனைவருத்துறுந்தன்மைசற்றேனு
நினையுமாறிலைபவமெலாமறுத்துநிர்த்தூட்செ
யனையம்பாநதியாடியவருளடைந்தவர்க்கே. (௯௨)

பாதகம்பலபலதினம்பண்ணுபாதகனுங்
கோதுநீங்குபுவெந்நிரயக்குழிகுறுகான்
போதன்போற்றுமம்பாநதிப்பூம்புனலாடப்
போதுவேனெனநூறடிபோகியபுனிதன். (௯௩)

அணிநிலாவுமம்பாநதியாடுமானிடர்கட்
கிணையிலிக்நதியின்னிடத்தெய்துநுண்மணலிற்
கணிதமின்றியேசெய்பிரமகத்திகள்கரிந்து
துணியுமையமீங்கில்லைசொற்றுறவறஞ்சுமந்தீர். (௯௪)

கூறுசீரமைகௌரிமாநதியின்மேற்குலவும்
வீறுசீதளமாருதமெய்மிசைவீசி
னூறுநூறுபல்லாண்டிழிபிழிறுகருறலா
லேறுபாவமக்கணத்தினிற்றெரிந்திடுமன்றே, (௯௫)

கொழித்தமுத்தவம்பாநதியொண்கரைகுறுகி
மழித்தசென்னியனுய்நதியாடியவ்வைக
லொழித்தவுண்டியனுயுறிற்குருமனேயொடுகூ
டிழித்தபாவமோர்கோடியோடிடுமெரிந்திற்றே. (௬௬)

பைம்பொனெற்றலைபாவுமம்பாநதியின்பாற்
றம்பவுத்திரபுத்திராற்றமசடல
விம்பவென்புவீழ்வித்திடில்விளம்பொருகோடி
செம்பொனின்கரவின்பவமோடிடுந்திகைத்தே. (௬எ)

இனையிலாதவம்பாநதித்தீர்த்தத்தினெய்தித்
துணைவியோடுநூன்முறைவழாதாடியதூயோ
ருணர்விலாமலைம்பாதகரொடுமுறவுறலாற்
புணரும்பாவமக்கணம்பொடிப்பொடியதாய்ப்போமால். (௬அ)

வேறு.

வழிகெடுப்பவன்மாதவர்மறையவரிவரைப்
பழுதுசொல்பவன்பாகந்தற்காக்குறும்பதகன்
கழியுமூணினன்கள்விலைபகர்பவன்கதத்தா
லழிவிலந்தணர்க்கோறல்செய்யறிவிலாதவனும். (௬௯)

வேறு.

வேதியர்தமக்குப்பொன்னீவேனெனவிளம்பிப்பின்ன
ரோதிலைபோதிரொன்றுவிசைக்குமேசெய்துவோனுந்
தீதகல்குருவைக்கண்டுவணங்கிடாச்சிதடன்றானுங்
காதுவெங்கோபமேன்மேற்கொண்டிடுங்கசடன்றானும். (௧௦௦)

அப்புனைசையினடையுமானினங்களையகற்றுந்
துப்பிலாதவனெனுமிவர்ச்சூழ்பவத்தொகைக
ளொப்பிலாதவம்பாநதிதோய்தரினுடனே
யப்புறத்தகன்றோடுதற்கையமின்றன்றே. (௧௦௧)

தினமுமங்கியிற்செய்கடன்செய்கிலாத்திய
பனவன்றன்குலப்பான்மைபோக்கியமகாபதகன்
வினையிறேவரூண்வேசையூணுண்பவன்வெறியுண்
வனிதைதன்மணவாளன்மட்டுண்டிடுமட்டி. (௧௦௨)

கந்தநற்கனிகாய்துகில்பாகெழில்கமழுஞ்
சந்துகத்தூரிபாளிதந்தாமிரங்கஞ்சஞ்
சந்திரந்ததிபாநெய்கண்டிகையிவைததிபார்த்
தெந்தவாற்றினிலேனுங்கைக்கொளுந்திருட்டிழைப்போர். (௧௦௩)

தோற்றினாருடன்றோற்றியமங்கையர்தன்மேன்
மாற்றிலாதநட்புடையவன்மனைமகன்மனையா
ளேற்றமும்மிழிபும்மியையேழையர்பூப்பின்
மாற்றுமங்கையர்மற்றவன்றன்மனையாட்டி. (௧0௪)

இவர்கள்கொவ்வைவாயிதழுணாமறிவகலினர்
நிவருநல்லறஞ்செய்பவர்க்கின்னல்செய்நீச
ரிவருமம்பிகாநதியிடைப்படிதரிலெய்தப்
பவமெலாம்பொடிபட்டுக்கெட்டோடிடும்பயந்தே. (௧0௫)

செல்வம்வேண்டினுந்தந்திடுந்தேவரம்பையரைப்
புல்லவேண்டினும்பொருத்திடும்பலர்புகழ்கல்வி
நல்கவேண்டினுநல்குமம்பாநதிநண்ணி
மல்குதீர்த்ததினாடுமாதவமருவினர்க்கே. (௧0௬)

தீங்குநீங்கிடச்செய்துநல்வினைமிகச்செழிப்புற்
றோங்குமாறுசெய்துள்ளம்வேட்டனநனியுதவுந்
தேங்குதெண்டிரைசேருமம்பாநதித்தீர்த்தத்
தாங்கணாற்றுநன்றாடிடுமறிவுடையார்க்கே. (௧0௭)

எச்சம்பற்பலவாற்றல்பன்னதியின்மூழ்கிடுத
லச்சமற்றநோன்பாற்றல்யோகம்பலவாற்றற்
கிச்சைசெய்வதென்னதிற்பலனென்மடங்கெய்து
முச்சகம்புகழாம்பிராவதிநதிமூழ்கில் (௧0௮)

இந்திரன்னெழினாட்டைமேகத்தியலிராமச்
சந்திரன்பதிதன்னைத்தாதாநகர்தன்னைக்
கந்தன்றந்தைமாபதத்தினைக்கருதுகாதலர்கள்
சந்தமிக்கவம்பாநதியாடிற்றந்திடுமால். (௧0௯)

செல்வமுஞ்சிறப்பும்புகழுந்திருமறைதேர்
கல்வியுந்திறலாயுளுங்கலைமனுக்கணமும்
புல்லுமாபுரியும்பொருவற்றபொற்புடைய
நல்லவாம்பிராவதிநதிபடிதனண்ணினர்க்கே. (௧௧0)

ஆசையுற்றிதினாடினுமன்றியாடிடினு
மாசம்பாவமுமிம்மையுமம்மையுமருவா
தேசுசேர்வறுமைப்பிணிதான்பயந்தேகுந்
தேசுசேருமம்பாநதியாடுசித்தியர்க்கே. (௧௧௧)

தண்சுடர்ப்புதுமாமதிதன்றகைத்தாயு
மொண்கடற்படுமாமணிக்கணங்களுமொப்ப
வெண்கணிப்பிலாத்தருமங்கடழைத்திடுமிசைதன்
கண்படைத்தவம்பாநதியாடுகெண்ணியர்க்கே. (கக௨)

தேவரான்றருவோடுசிந்தாமணிதன்பான்
மேவுவோரவாவெவையவைமேவவீவனபோ
லாவலாயெவரியாவைவேண்டினுமவையளிக்கு
மாவெலாமுறுமாம்பிராவதிநதிமாதோ. (ககங)

உரைத்தவித்திருத்தீர்த்தத்துக்கொப்புரைதீர்த்தந்
தரைத்தலத்திலைச்சக்கரன்வச்சிரந்தடக்கை
தரித்தவிந்திரன்வேதனிங்கிவர்சதாசார்ந்தே
யிருத்தல்செய்துதோத்திரம்புரிவார்களெஞ்ஞான்றும் (ககச)

சித்தர்சாரணர்கின்னரர்சிவகணநாதா
வித்தியாதரர்கருடர்கந்தருவர்விண்மாதர்
சத்தகன்னியராம்பிராவதிநதிசார்ந்தே
நித்தலுந்துதித்தாடிநீங்காமனேர்வாரால். (கக௫)

கங்கைகாளிந்திகாவிரிகம்பைகண்ணியமே
தங்குசந்திரபாகைகோதாவிரிசரயு
துங்கமாநருமதைசரசுவதிதோய்ந்துவகை
தங்கவாம்பிராநதிதொழுதிருகரைசாரவார். (ககசா)

வண்ணமேவுமம்பாநதிநாமந்தன்மனத்தி
லெண்ணிலெண்ணிருகோடிபாவங்கள்போமியம்பி
னண்ணுமாங்கதினிரட்டிபாவங்கள்போநயந்து
கண்ணிற்காணுறிலதற்கிரட்டிப்பவங்கழியும். (ககஎ)

இட்டினுங்கதற்கிரட்டிபாவங்கெடுங்காற்றுப்
பட்டசீகரமெய்யிடைப்பட்டிடிற்பகரோ
ரெட்டெட்டாயிரங்கோடிபாவங்கள்கெட்டிடுங்கை
தொட்டிட்டாலதற்கிரட்டிவெம்பவத்தொகைதொலையும். (ககஅ)

தெண்டிரைத்திருத்தீர்த்தத்தைத்தன்னிருசெங்கை
மொண்டுகொண்டிடிலதற்கிரட்டியபவமுடியு
முண்டல்செய்வரேலதற்கிரட்டியபவமோடுங்
கண்டுமூழ்குறிற்பவக்கடற்கரையினேறுவரால். (ககக)

வேறு.

இருபொழுதாடினோரிந்திரனுலகினிதுசேர்வர்
மரபின்முப்போதுமூழ்குவார்மரைமலரின்வாழும்
பிரமனூரடைவர்நாற்போதாடியபெருமைபெற்றோர்
கரியமாலுலகத்தெய்திக்களிப்பின்வாழ்ந்திடுவர்மாதோ. (௧௨௦)

ஐந்துநாளாடினோர்களரனுலகடைவரோரீ
ரைந்துநாளாடினோர்களரனருகடைவரோர்நா
லைந்துநாளாடினோர்களரனுருவடைவரோரெண்
ணைந்துநாளாடினோர்களழிவில்வீடடைவரன்றே. (௧௨௧)

அளவில்வெம்பவஞ்செய்தோரம்பாநதியமலதீர்த்த
வளமலிதிவலைதன்மெய்மருவிற்பொன்மானமூர்ந்தே
யுளமகிழ்கொளவெண்ணில்லாவும்பர்கொண்டாடப்பொன்னாட்
டுளையுளவரம்பைமாதரொடுகலந்துறைவரன்றே. (௧௨௨)

திருவெலாநிறையுந்தாராபுரச்செழுநகர்ப்பாற்சேரு
மருநிலாவியசீரம்பாநதியிடைமருவியாடிற்
பெருவலியலகைபூதமுயலகன்பெருமைசேர்மந்
திரமணிமருந்தாற்றீராப்பிணிகளக்கணத்திற்றீரும். (௧௨௩)

வேதங்கள்விளம்பும்பற்பல்வேள்விகள்விரும்பிச்செய்யா
தேதமில்துலாதானத்தோடியம்புபல்தானமீயா
தாதரவாரவானத்தரம்பையரம்பொற்கொங்கை
மேதகுமின்பமாம்பிராவதியாடின்மேவும். (௧௨௪)

வேறு.

அட்டசித்திகள்வேண்டினோருருவரைமுழையுட
பட்டுவாயுவுஞ்சருகுமேயயின்றுபற்பலநாட்
கட்டப்பட்டிடாதாம்பிராவதியின்மூழ்கிற்கைக்
கெட்டப்பட்டிடுமென்னில்யாமென்னினியிசைப்பாம். (௧௨௫)

செல்வம்வேண்டினோர்க்காங்கவைசேர்த்திடுஞ்சிறந்த
கல்விவேண்டினோர்க்காங்கவைகண்ணுறுங்காமன்
புல்லுபேரெழில்வேண்டினோர்க்கன்னவைபொருத்து
மல்குமாம்பிராவதிநதியாடிடின்மாதோ. (௧௨௬)

புதல்வர்வேண்டுறிற்பூமலராளெனப்பொற்புப்
புதல்விவேண்டுறிற்பொன்னுலகாண்டுறும்புகழே
யுதவவேண்டுறிற்காசினியாளுகையுவந்தெற்
றுதவவேண்டுமென்றாடினம்பாநதியுதவும். (௧௨௭)

விரல்களிற்றற்றுவீழுநோய்குட்டநோய்விழியின்
மருவுநோய்கள்பல்லுதிருநோய்வயிற்றுநோய்வலிநோய்
பெருமகோதரநோய்சயரோகநோய்பெருகா
தருகிநீங்குமம்பாநதியாடிடினன்றே. (௧௨௮)

தரித்திரந்தெறத்தத்தளித்துத்தமொழி
வருத்துவெம்பசியுற்றுடன்மாநடுக்குற்றுப்
பெருத்தவெந்துயர்ப்பிணியரம்பாநதியெனும்பேர்
தரித்தமாநதியாடிடிற்றனதசம்பனராம். (௧௨௯)

அலரியம்புலிவாரத்திலமரபக்கத்தி
லிலகுமட்டமியின்மகாநவமியிலின்பிற்
பொலியுமாம்பிராவதிவிதிமுறைபுகழ்ந்தாடி
லலகிலாவெழிலமரர்நாட்டமரராயமர்வார் (௧௩௦)

பொருந்துபூரணைகுருவெனுமித்தினம்பொற்புற்
றிருந்தவாம்பிராநதிபடிந்தியைகடனியற்றித்
திருந்துதானங்கள்செய்தவர்செம்பொனாட்டிற்சேர்ந்
இருந்துதேவர்கொண்டாடிடுமிசையிசைவாரால் (௧௩௧)

பங்குனித்திருத்திங்களிலுத்திரம்பயினாட்
டுங்கமிக்கவம்பாநதிதோய்ந்துபொன்சுரபி
யெங்குமிக்கநன்னிலமறையோர்களுக்கீவோ
ரங்கண்முத்தியிலடைகுவர்சரதமீதறவீர். (௧௩௨)

மேடமைப்பசிமாதவுற்பத்தியின்மிளிரு
மாடகப்பொடியாருமம்பாநதியாடித்
தேடுதற்கரிதாமுமைதோத்திரஞ்செய்வோர்
வீடிலாவயனற்பதமேவிவீற்றிருப்பார். (௧௩௩)

கும்பமாதத்திலாம்பிராவதிநதிகுடைந்தெந்
தம்பிரான்மனையாகியிவ்வுலகெலாந்தந்த
வம்பிகாதிருவடிபணிந்தன்பினிற்றுதிப்போ
ரும்பருர்வசிபோகமுண்டுவைகையினுறைவார். (௧௩௪)

மகரமாதவுற்பத்திநாளாம்பிராவதியா
நிகரிறீர்த்தத்தின்மூழ்கியேயுமைநிருமலத்தா
ளுகளபூசனையுஞற்றினோரும்பர்களுவந்தே
புகழுவானநாட்டாளுகைபொற்புறப்புரிவார்; (௧௩௫)

இந்துசூரியர்ப்பாந்தள்கவ்விடுமெழுநாளிற்
சந்தமிக்கவம்பாநதியாடித்தர்ப்பணஞ்செய்
தந்தமில்லகாயத்திரிமனுவறையறிஞர்
கந்தமாமலர்க்கடவுடன்பதவியிற்கலப்பார். (௧௩௬)

தனுநன்மாதத்திற்சார்திருவாதிரைதன்னிற்
புனிதவாம்பிராவதிவிதிமுறைபுகுந்தாடி
யினிதினம்பிகையிருபதவாரிசமிறைஞ்சில்
வினையெலாமறப்பவக்கடற்கரையின்மேவுவரால். (௧௩௭)

நண்பகற்பொழுதுதயமாம்போதுநன்னிலத்தின்
பண்புயம்புமம்பாநதிபடிந்துபார்பதித
ஞெண்பதம்பணிந்துவகையிற்றுதிப்பவருயர்முக்
கண்படைத்தசங்காதரன்கதியிற்கண்ணுவரால். (௧௩௮)

ஒப்பிலாவளமுற்றவம்பாநதியுற்றவ்
வப்பிஞுடியந்தணர்க்கறுசுவையமையமுதந்
தப்பிலாவகையூட்டிடிலவிழொன்றுதனக்கோர்
கற்பஞ்சர்ப்பகங்கணத்தான்கயிலைவீற்றிருப்பார். (௧௩௯)

கடிகுலாவுமம்பாநதியாடியக்கரைக்கண்
மடிவிடாதுபால்வடிசுரபியைமறையவர்
ளடிபராவியீபவரொருரோமத்திற்கயுத
மடிவில்கற்பம்வெள்விடையவன்வாழ்பதம்வாழ்வார். (௧௪0)

கன்னிகாமணிக்கௌரியம்பாநதிக்கரைக்கண்
மின்னுமாமணிப்பூணிலம்வெள்ளிபொன்னுடை
கன்னிதானங்கள்செய்பவர்கடவுளர்போற்ற
மன்னிவானநாடாளுகைசெய்துவாழ்வாரால். (௧௪௧)

மருமலர்ப்பொழின்மன்னுமம்பாநதிமருங்கி
னிருமலற்கெழுபூசுரருவகைமேனிமிரப்
பொருவிலுண்டிகண்டிகைசிவலிங்கமீபுனிதர்
மருவிமுத்திவீடடைகுவராலிதுவாய்மை. (௧௪௨)

ஆறெனும்வடிவம்பிகையாநதியாடி
நீறணிந்துபஞ்சாக்கரநெறிமுறைசெபிக்கும்
வீறுசேர்பவரேறுசேர்கொடியுடைவிமல
னீறிலாப்பதமெய்திவீற்றிருப்பரென்றுான்றும். (௧௪௩)

### வேறு.

இந்தரன்னிலத்தொடெந்தநிலமுமீடேற
வந்தவாம்பிராவதிக்கரைமன்னுமாவேள்வி
சிந்தையின்மகிழ்ந்தியற்றுவொரியற்றிடச்செய்வோ
ரெந்தைவாழ்சிவபதமடைந்தின்பமெய்துவரால். (௧௪௪)

செய்யவாம்பிராவதிகுடைந்தாடித்தென்புலத்தோ
ருய்யநூன்முறையிற்கடனுஞற்றிஞெண்பிதிர்க்கள்
வெய்யபாவமற்றம்பிகாபதிபதமேவி
வெய்யவன்னுளநாளின்பமெய்தவாழ்வாரால். (௧௪௫)

அளவினுள்வரைகாசிநற்றலத்தினிலமர்ந்து
மளவின்மாதவம்வேள்விகள்செய்துமாங்கடையு
மளவின்மாபயனும்பிராவதியகநினைத்த
வளவினெய்துமென்றுலிதன்மகிமையாரறைவார். (௧௪௬)

அம்பாநதிப்படல முற்றிற்று.

---

## வஞ்சிவனப்படலம்.

கஞ்சனுங்கஞ்சப்பூநேர்கண்ணனுங்காணொணாது
செஞ்சுடர்க்கொழுந்தாய்நின்றசிவபிரானமருஞ்செவ்வி
விஞ்சிவிண்மேவுமேகசாலங்கண்மிடையவீறும்
வஞ்சிமாவனத்தின்மன்னும்வளஞ்சிலவகுத்துச்சொல்வாம். (௧)

வளமுளமழைகடாங்குமாறுவிண்ணீண்டுவார்ந்த
இளையளவிலாதவாகிப்பாசடைகெழுமிக்கேழ்சே
ரொளியுளவாகித்தண்ணென்றுறுநிழலுற்றுங்குற்றோர்
களிகொளக்கணையுங்கண்ணுநுழைகில்காட்சியதக்கானம். (௨)

புரவியோரேழுபூண்டபொற்றடந்தேர்கடாவி
யுருவியைகரங்களோராயிரமொருங்கொருங்குவீசி
வருமிரவியின்றேசானுமாற்றரும்வன்மைத்தாகிப்
பெரிதுவல்லிருட்குழாம்வாழ்வுற்றதப்பிறங்குகானம். (௩)

மதிதலைமிலைதலானும்வளர்சடைவயங்கலானு
மிதழியினணியினானுமெழின்மறியியைதலானுங்
குதுகலங்கொள்ளுமஞ்சுமுகமெழில்கூடலானுஞ்
சுதைகொணீறணியுமீசன்போன்றுதோன்றினதொல்கானம். (௪)

தண்ணெனுந்தன்மைத்தாலுமுயல்பலசார்தலாலுங்
கண்ணுறுகலைகளாலுங்கட்செவிகருதலாலு
மொண்பலமுதவலாலும்பரவையினுறுதலாலும்
விண்பொலிகிரணக்கற்றைவெண்மதிபோலமேவும். (ரு)

வன்றிறலாலகாலவிடமிடைவாய்ப்பைநாக
மொன்றியசசமானொப்பினுயருகிர்ப்புண்டரீகந்
துன்றழற்செங்கணோடுதோற்றலாற்சொலுமக்கான
மன்றுதாருகவனத்தின்முனிவர்செய்யாகம்போலும். (சு)

மேவருந்தருவாற்கிட்டாவிழுக்கனியமுதால்வெம்மை
யோவருங்கதிராலிந்தங்குலவலாலொப்பிலாத
தேவர்வந்தாவலோடுதிகழ்தலாலரம்பைமாத
ரேவருந்திரிதலாலக்கானம்பொன்னாட்டையேய்ந்த. (எ)

வனமலிதளிர்கள்செக்கர்வானத்தின்வயங்கவாசந்
துனுமலர்முல்லைதாராகணமெனத்துலங்கித்தோற்ற
மனுமெழிற்சம்புமொய்க்குங்கனியிருட்கணத்தின்மல்க
வினனுறுபோதிராப்போதெனப்பெரிதிசையுமன்னோ. (அ)

படவிடவரவங்கான்றபன்மணியணிகளாலு
மிடைதிடவேங்கைதீக்கண்மிக்கொளிமேவலாலு
மிடையறவலகில்கச்சோதத்தொளியெய்தலாலு
மடையிருள்பகற்போதாகுமலரியாலாவதென்னே. (கூ)

மாகமேன்மருவும்வஞ்சிவனத்தின்மாமதமேற்கொண்டு
போகமும்புணர்வும்பூண்டுபுளகங்கொள்பூட்கையாவு
மாகமுங்குரலுங்கோடுமசைதரவடைதலியாண்டு
மேகமுமிடியுமின்னுமெனநனிமிளிருமாதோ. (க0)

ஏற்பொலிவேல்கடாவியெழின்மணிமகுடமெய்தும்
மற்படுபுயவெஞ்சூரனுடல்பிளந்திடவாங்கெய்தும்
பொற்புறுமயின்மீதேறிப்புங்கவர்புகழ்ந்துபோற்றச்
சிற்பரகுருவாஞ்செவ்வேடிருவிளையாடலோர்பால் (கக)

கொற்றவையலகைபூதகணங்குழுக்கொண்டுசூழ
வெற்றிகொள்கலைமீதேறிமிளிர்விளையாடலோர்பா
லெற்றலைவேலைவிண்மண்ணெவையுமுண்டுமிழ்ந்துமெய்ப்பில்
கற்றையந்துளபமாலைக்காகுத்தனாடலோர்பார் (கஉ)

வன்றிறற்றவளவீரவாரணமுதுகின்வைகிக்
குன்றிறகரிந்தோன்றேவர்குழுவொடுங்குலாவலோர்பா
லொன்றுபன்முகிலாலென்றுமுலகெலாமுய்யுமாறு
நன்றிசெய்வருணவேந்தனண்ணுநன்கமைவதோர்பால். (சரு)

வேறு.

கின்னகிலமளவிடமேவுபுன்னைக
ளென்னணிலவாய்நிறைந்தரும்புமின்னெழில்
வன்னவெண்ணித்திலமாலைமார்டணி
கன்னனின்றனவெனக்கவினுங்காட்சிய (கச)

பொற்புறுபாசடைபொதுளும்புன்னைக
ளிற்படுசினையெலாமிலங்கப்பூத்தன
பற்பலதாரகைபயிலப்பண்புறு
மிற்குலமேகங்கள்விளங்கிற்றென்னவே. (கரு)

மேகமண்டலந்தொடும்வியன்மென்பாடலத்
தேகமாயலர்மலரொய்துவண்டினம்
வாகையினூதிடவசந்தமாங்கொல்ல
னோகையிற்செய்சிறுசின்னமொத்தவே. (கசு)

அண்டமுற்றிடுமதியலரிதாரகை
கண்டிடத்தன்னெழில்கணக்கில்கண்ணடி
மண்டலமகள்வரிசையின்வைத்தாலெனக்
கொண்டலையண்டுயர்கோங்கலர்ந்தவே. (சஎ)

தேமலரிதழியுந்திகழும்பூவையுந்
தாமிருபக்கமுஞ்சாரச்செய்யமா
தாமுறன்மாலயனடுவிற்சங்கரன்
றேமறத்தோற்றியதோற்றமொத்ததே. (கஅ)

சூரியன்மீதுபோய்த்தோயிலாங்கலி
யேருறுபற்பலபாளையீன்றன
பாருறுபாவையரணியப்பண்பொடு
நேரிலாரத்தொடைநீட்டலொத்ததே. (கசு)

வயிரமாமேனியவரைவிலாதன
வுயரியபூகவொண்பாளையுற்றன
செயிரில்பூஞ்சோலையாந்தெரிவைவெப்பறப்
பெயர்வுறுஞ்சாமரைபிடித்தபெற்றித்தே. (உ0)

தோற்றுறுசெங்கரவீரத்தின்றொகை
யேற்றதங்கிளையலர்மலரிலங்குவ
வேற்றுவார்கொடியுடையீசற்கிம்பரா
ரேற்றுபன்மணிவிளக்கெரிவதென்னவே. (௨௧)

அற்பொழுதன்றியேயலர்கொண்மாலதிப்
பொற்கொடிதருவெனும்புருடர்ப்புல்லுத
லெற்பொழுதியைவவோவெனநகைப்பபோற்
பற்பலமுல்லைகண்மலர்ந்தயாங்கெலாம். (௨௨)

தண்ணுறுதடமலாசாரசெங்காவிக
ளெண்ணறுபாசடையிடைவிராவுவ
விண்ணுறுதருநிழற்றிருவின்மேவிய
வண்ணலிந்திரன்விழியழகமைந்தன. (௨௩)

முன்னையமுறைகெடவுதகமொய்த்துமேல்
வன்னிகளிடையிடையெரிந்தவாமெனச்
செந்நிறவல்லிசெவ்வாம்பல்செவ்விதிற்
றுன்னுறுமிடங்கெலாமலர்ந்துதோன்றிற்றே. (௨௪)

கௌவையம்புனற்கயங்கலந்தபாசடைக்
கெவ்வமற்றிடையிடையலரிராசிவத்
தொவ்வுதேனுண்டடவுற்றதேனினம்
வெவ்வனல்புகையொடுமிடைந்ததென்னவே. (௨௫)

வண்ணநன்மரங்களுங்கொடியுமற்றவற்
றெண்ணருமலர்களுமரும்பரீட்டமு
மெண்ணுறின்மாலையினெய்துசெக்கரு
மொண்ணிறவுடுக்களும்விராயதொக்குமால். (௨௬)

இத்தகைவஞ்சிவன்வனத்திலெம்பிரா
னுத்தமியாம்பிராவதியினுற்றதா
னித்தியம்பிரிவுறுதிருப்பநேருறுஞ்
சித்தருங்கணங்களுஞ்சேரச்சேர்ந்தனன். (௨௭)

விண்புகழவ்வனம்வீதியாகவெக்
கண்ணுங்கண்ணியமரந்தூணிற்காண்டர
வண்ணவன்கொடிமிடைவனவிதானமாப்
புண்ணியக்கோயிலவ்வஞ்சிப்பொங்கரா. (௨௮)

பேரிகையொலிபுலிப்பிளிறுபெற்றிடப்
பூரியிற்போதகக்குரல்கள்பொங்குறத்
தாரியிலெண்கொலிசங்கநாதமாச்
சீரியதுளையொலிசிறைவண்டார்ப்பவா. (உகூ)

மங்கையர்நடனமாமயிலுலாவலாப்
பொங்குமுக்கத்திற்புட்சிறைகள்பொற்புற
வங்கதிஞெலிமறையொலியினார்த்திடத்
தங்கியமணிவிளக்கொளியிற்சார்தர. (௩0)

மஞ்சுகுதுளிதிருமஞ்சனம்மதா
வெஞ்சலிறளிர்குளிர்தேய்வையேய்தர
விஞ்சலர்பொற்பரிவட்டமேவுற
நஞ்சுகுமரவமாபரணமாய்நண (௩க)

அடவியான்மடிமடைப்பள்ளியாகிடக்
கடன்முறையமைப்பவர்கன்றினங்களாட்
புடவிவீழ்தாரைபாலமுதப்பொங்கலா
விடர்படுகற்பரிகலத்தின்மேவுற. (௩உ)

எங்கணும்வலியனும்பறவையீட்டத்தி
னிங்கிதவொலிமறையொலியினெய்துற
வங்கிவ்வைபவமுறுமமுதபூசைபெற்
றெங்கணுயகன்மகிழ்ந்திருக்குநாளினே. (௩௩)

மலயமாதவன்வடகயிலேயின்வயி
னிலகுமீசனேத்தொழற்கருத்தியெய்தியே
தலமிசையிலகுதாரர்புர்த்தலத்
தலகறுமுவகையோடடைந்திட்டானரோ. (௩ச)

வந்தமாமுனிமலேமாதுமாநதிச்
சந்தமுற்றடைதல்கண்டடியிற்றாழ்ந்தெழீஇக்
கந்தமுற்றியவஞ்சிக்கானங்கண்ணிற்கண்
டந்தமில்வியப்பொடுள்ளடைவதாயினன். (௩ரு)

## வேறு.

மதகரிக்குலக்கன்றினம்வயப்போத்தின்மடிவழிபான்மகிழ்வேர்டுண்
டிதமுறவதன்குட்டிகளொடுவிளையாடித்திரிதருமெழிற்றேன்க
சதனநன்னிழலிற்சர்ப்பசாலங்கடான்றுயின்றிடுந்தாக்குரோமர்
தனையுடலுரசிச்சாரங்கவினங்கடன்றினவறமகிழ்தமுவும். (௩௬)

வனந்திரிசுரபிமடிமிடைபாலையப்புலிக்குட்டிகண்மகிழ்விற்
றினந்தினமூட்டிச்சிறியகன்றுகளின்றிரளொடுசிநேகமாய்த்திரியுங்
கனமுறுகாகோதரப்படவகல்வாய்வலையெனக்காரெலிகருதி
யினமொடுநுழைந்துதுயின்றெழுந்தெங்குமேகியேதிரிதருமென்றும். (௩௭)

ஜநகநாற்காலகல்குளைவாய்நீண்டறவலைவாற்சுணங்கிணங்க
மொய்பெறநிமிர்காதெழிற்குறுங்கழுத்துமுயலதன்முதுகிடைமுடுகி
யொய்யெனத்தாவிமுன்குதித்தெதிரினுற்றுவாய்நக்கவுள்ளுருகி
யைதுறமகிழ்கொண்டடிக்கடிவிளையாட்டயர்ந்துயாவனத்தினிதமரும். (௩௮)

ஏனலொண்கதிர்வாற்கொழுநுனியெனநீளின்முகநகுலத்தினினங்கள்
கானணிநுகாவாய்வலையுடற்பாந்தட்கணத்தொடுங்குணத்துடன்கலந்தே
கானிஞனினங்கள்கன்றுளிப்பொழிந்தபாற்குழிக்கற்களிற்கண்டு
தானினிதுண்டோர்வலையினிற்குடிகொண்டுறையுமாற்பெரும்பகைதவிர்ந்தே.

திரள்சிறுநெடுவான்மென்மயிர்முட்பற்கூனுடல்வெள்ளெலித்திரள்க
ளிரவிடைத்தெரிகட்புலியுடற்பூனையின்சிறுபூமுலையின்பா
லுருகியுட்குறுகுறெனவொலிசெயவேயுண்டதன்குட்டிகளுடனே
பெருகியமகிழ்வுகொடுவிளையாடிப்பிரிவறவாழ்வனபெரிதே. (௪௦)

மரகதவடிவவுருவமைமயூரவினமனமகிழ்வொடுமருவி
யரியமாதவராற்றனகமாயாகத்தழற்கொழுந்தார்ந்தெரிதரத்தம்
விரியிருசிறகுகொண்டுமென்மேலும்வீசியாங்கவருக்கவ்வேலைச்
சிரமமதொருவவெருவறவினிதுசெய்வனதினந்தொறுஞ்சிறப்ப. (௪௧)

நெட்டுடற்கொடுவானெட்டுறுதாழைமுற்றியநெற்றுறுகனியுந்
தட்டெனநீள்பச்சிலைசெறியரம்பைத்தண்மதுரத்தனிக்கனியு
மட்டில்வானரங்கள்கைக்கொடுவந்தம்மாதவர்சாலையின்முன்வைத்
திட்டடிதாழ்ந்துமகிழ்வுடன்மருமலியற்றுமாற்றினந்தொறுமிசைந்தே. (௪௨)

பசியபொற்சிறைச்செம்பவளவாய்க்கிளிகளருந்தவர்க்குதவிசெய்பரிவின்
விசைகொடுதிசைபோய்ச்செந்நெலொண்கதிருமென்றினைக்கதிர்களும்விளங்கு
குசையுநற்சமித்துமடிக்கடிகொடுவந்தன்னவர்முன்றிலிற்குவித்து [ங்
நசையொடுமெடியில்விழுமெழுமோடுங்கொடுவருநாடொறுமாதோ. (௪௩)

இவ்வகைமகிமையியைவஞ்சிவனத்தினெழிற்குறுமுனிவரனிருகட்
கவ்வுறக்கண்டுகளித்துமைநதியாவரப்பிரிவுறுதுகங்காளன்
செவ்வியிவ்வனத்தின்வைகலாலித்தச்சிறப்பமைந்தனவெனவேதேர்ந்
தவ்வயிற்பன்னசாலையொன்றியற்றியருந்தவம்புரிந்தினிதமர்ந்தான். (௪௪)

ஒப்பறுவிராடனரசிருக்கையினல்விராடமாபுரமெனவொருபேர்
செப்பிடப்பெற்றுவஞ்சிமாவனத்தாற்றிகழ்வஞ்சிபுரமெனத்திருப்பே
ரொப்பிடவுற்றுப்பின்றிருத்தாராபுரமெனவுயர்பெயருற்ற
விப்பெருந்தலத்துக்கெத்தலநிகராமெனவெடுத்தியாமிசைத்திடுவாம். (௨௫)

வஞ்சிவனப்படல முற்றிற்று.

---

## அகத்தீசுவரப்படலம்.

ஆம்பிராவதியழகியகரையருகமரர்
தாம்பராவகத்தீசுரர்தமைப்பிரதிட்டை
யெம்பலோடகத்தியமுனியெண்டிசைகமழும்
பூம்பராகநேர்வஞ்சியிற்புரிந்ததுபுகல்வாம். (க)

ஆயுள்வேதந்தந்துலகெலாங்காத்தருளார்ந்த
சேயதென்மலைமுனிவரன்சிவப்பிரதிட்டை
தூயவஞ்சியின்வனத்திடைத்துலக்குறச்செய்வான்
மேயவன்பினன்முனிவரர்க்கிவைவிளம்புவனல். (உ)

இமயவல்லியம்பாநதியாகவெய்திடப்பொற்
சிமயவில்லியத்திருவஞ்சிவனத்தினிற்சேர்ந்தே
யமையவெல்லியுமிரவும்வைகினனடர்பவங்கள்
குமையவொல்லையிற்பிரதிட்டைசெயவுளங்கொண்டாம். (௩)

என்றகத்தியனியம்பமாமுனிவரரெழுந்தே
துன்றுகைக்கமலங்குவித்திணையடிதொழுது
நின்றியாங்களுமுலகமுஞ்செய்தவநேர்ந்த
தென்றுனைத்திடநன்றுநன்றிருமினென்றியம்பி. (௪)

புலவர்தச்சனைப்போந்திடவெண்ணலும்போந்து
கலசமாமுனிகழறெழுவாசிகள்கழறி
யுலகநாயகன்பிரதிட்டைசெயவவற்குவகை
பொலிதிருச்சினகரம்புரிவாயெனப்புகல. (௫)

சிற்பநூல்வழிசெம்பொனின்மணியினற்றிசையும்
விற்குலாவிடச்சினகரந்திருமதில்வேண
பொற்புலாவிடப்புரிந்தருள்விடையெனப்போற்றி
யெற்குலாவுபொன்னாட்டினுக்கேகினனிப்பால். (௬)

அளவின்மாதவவகத்தியனரனருட்குறியை
வளமுலாவுறநிறுத்துவான்மனத்திடைமகிழ்வு
கிளரவாரிசமாமலரின்முகங்கெழுமு
தளநிலாவுறத்தவத்தினர்திரளொடுமெழுந்தான் (எ)

வேறு.

இரவிமாமிதுனமேவப்பூருவபக்கமெய்தும்
பொருவறுசோமவாரத்தத்தமுந்தசமிபொங்க
வருதிருவிதிபாதத்தின்மகிழ்தசயோகந்தன்னிற்
கரநிறையிந்துகன்னிகண்ணிடக்கடுவினீற்றல். (அ)

ஈசுரனூர்திநாமத்தெய்தெழிற்பவனந்தன்னிற்
றேசுருமாம்பிராவதித்திருத்தீர்த்தமாடிப்
பூசிவெண்ணீறுகண்டிபுனைந்துநித்தியகன்மங்க
ளாசறவாற்றித்தன்கைக்கங்கணமமையவார்த்து. (கூ)

கன்னலொண்கமுகுவாழைதாற்றொடுகவினநாட்டிப்
பன்னுபன்மலரின்றொங்கற்பாளைகள்பலவுநாற்றிச்
சொன்னநற்கும்பம்பற்பலிடந்தொறுந்துலங்கச்சோதி
மின்னுபைந்தோரணங்கோயிலின்முனர்மிளிர்ந்துமேவ. (க0)

துன்றுபன்முளைகண்மேவும்பாலிகைத்தொகையுந்தூய
மன்றலார்மலருந்தொங்கலீட்டமுமலயச்சாந்துங்
குன்றுறுத்தூபதீபப்பொருள்களுநடுநாக்கொண்ட
வென்றிசேர்மணியுநந்தாவிளக்குங்கண்ணடியும்விஞ்ச. (கக)

சூதநல்லிலையுங்கூர்ச்சச்சும்மையுஞ்சமித்துந்துன்ன
வேதமிலரம்பைதெங்கினிணையிலாக்கனியுமாவின்
மேதகுபாலுநெய்யும்விரீயரிக்குவையும்வேண்டி
யோதுபல்பொருளும்வெற்புக்கொப்புறக்குவித்தாரன்றே. (கஉ)

அதுபொழுதுயர்முகூர்த்தமடைதலுமகத்தியன்ற
னெதிரில்வாலுகத்தாலீசனெழிலுருவியையவாற்றி
முதுமறைமுறையிற்செய்யுங்கிரியைகண்முற்றுமுற்றக்
குதுகலங்கொடுசெய்வித்துக்குழகனற்குறிகைக்கொண்டு. (கங)

அதிர்தருகங்கைத்தோயத்தழகுறவெழுந்தவேணி
முதிரொளிப்பவளக்குச்சமுளைசுதைமுகிழமென்னக்
கதிரிளநிலவுகாணச்சர்ப்பநற்கயிற்றிற்கட்டுஞ்
சிதைவகல்கரோடிசெந்தாமரைசெறிவாசம்வீச, (கச)

அடரெழின் முகங்களைந் தினம்புலியனலியான்ற
சுடரெனச்சொல்லுந் தூயமுக்கணுந் துலங்கத்தோன்றி
விடுசுடர்மணிப்பைநாகவியன் குழைமேவுகாதுங்
கடுமிடைகளமுங்கண்டோர்கௌவைகள்கலங்கியோட. (௧௫)

ஐந்திருதடந்தோள்வெற்பிலரவகங்கணங்களாரச்
சந்தநற்கரங்கண்மேருவின் முதற்படைகள்சாரச்
செந்தழன்மார்பிற்கேழற்கொம்புயாரஞ்சேரக்
கந்தமார்கடுக்கைவில்வத்தொடையணிகவினைக்காட்ட. (௧௬)

விடமுமிழ்பகுவாய்ப்பாந்தட்கச்சுநன்காகவீக்கு
மிடையினிற்கொடுவரித்தோலிலங்கெழிலாடையெய்த
நடுவனையுதைத்தபாதத்தொடுமடியவர்க்குநண்ணு
மிடரெலாந்துடைத்துக்காக்குமெழிற்பதமிலங்கிக்காட்ட. (௧௭)

எழுமகத்தன்பிற்பாவித்தகத்தியணிதயநின்றுஞ்
சுழிமுனைவழியேபோகித்துவாதசாந்தத்திற்சொக்கி
வழுவின்மந்திரத்தாற்பிராணப்பிரதிட்டைவந்துவாய்ப்ப
வெழிலமைகரத்திற்றங்கியின்பமென்மேலுமெய்த. (௧௮)

வடமணியிணைமென்கொங்கைமலைமகளாமெம்மன்னை
யிடமகலாதகாட்சியிலிங்கமாமீசன்றன்னை
நெடுந்திரைக்கௌரியாற்றின்மேற்கரைநிமிர்ந்துவானந்
தொடுஞ்சினகரத்திற்றாபித்திட்டனன்றுலங்கமாதோ. (௧௯)

ஈசனுக்கபிடேகிப்பானெழிற்றிருத்தண்டுதன்னுண்
மாசகதீர்த்தமொன்றுவகுத்தனனந்தத்தீர்த்தம்
பேசறுபிரமகத்திமுதற்பெரும்பாவம்பேர்த்துத்
தேசுறுசெல்வமாயுள்சிறப்பெலாஞ்சேர்க்குமாதோ. (௨௦)

திகழுமானைந்துசெந்தேன்செவ்விளநீரியாரும் *
புகழெழுமிச்சையாதிபொருந்துசீரபிடேகங்க
ணிகழ்மறைமுறையினாற்றிநேரிலாக்கூவனேர்நீர்
சகசிரத்தெட்டுக்கும்பந்தாணுவுக்காட்டினானால். (௨௧)

செய்யவொற்றாடைசேர்த்திச்செம்பொனினறுவைசாத்தி
மையறுமலரிற்றேய்நீரருக்கியமுதலவாற்றித்
துய்யநற்கலவைச்சந்தக்குழம்பினாற்றுலங்கவாட்டி
யையனின்சென்னிமன்னவாதனமகுடஞ்சூட்டி. (௨௨)

களமலிகளத்திற்சோதிக்கவின்மணியாரம்பூட்டி
வளமலிகொன்றைவில்வமருமலர்மாலைசூட்டி
யுளமகிழ்வுடனொராறுசுவையினோதனநீரூட்டி
யளவறுசுகந்ததீபதூபமுமமைவிற்காட்டி- (உங)

வேறு.

சந்தவீரெட்டுபசாரந்தவறுதினிதுதானியற்றி
முந்தைமறையினறைமுறையினியற்றுங்கருமமெலாமுடித்தோ
ரைந்தக்கரத்தினொருநூற்றெட்டுருச்செய்தகமுமுகமுமலர்ந்
தெந்தைபிரதிட்டைப்பலனையினிதினவருக்கேயீந்தான் (உச)

வேறு.

இருகையுங்குவித்துமுக்காலெழின்மலரிறைத்திறைஞ்சி
விரிமறைமனுவாற்போற்றிமும்முறைவலமாய்மேவி
யருகினினடனமாடியகத்தியனிற்பவையன்
வரைமகளுடனிலிங்கத்துண்ணின்றுவெளியில்வந்தான். (உரு)

வந்தருளிறைவன்மிக்கமகிழ்வொடுவேதநோக்கிச்
செந்தமிழ்முனிவநின்பேர்சேருமிவ்விலிங்கங்கண்டோர்
சிந்தையினினைத்தசேரச்செய்வமென்றருளிச்செய்து
சொந்தமாமிலிங்கத்துட்புக்கிருந்தனன்சுயமாஞ்சோதி. (உசு)

காலனையுதைத்துச்சேர்மார்க்கண்டனைக்காத்தாய்போற்றி
வேலனைப்பெற்றாய்போற்றிவிமலநாயகனேபோற்றி
யாலகாலத்தையுண்டாண்டமரரையளித்தாய்போற்றி
பாலலோசனனேபஞ்சாக்கரப்பரம்பொருளேபோற்றி. (உஎ)

என்றுதோத்திரஞ்செய்தப்பாலெழின்முனிவரர்கட்கெல்லா
நன்றுபசாரமாற்றிவஞ்சிநந்தனத்திற்கேற்ப
ஞன்றுநற்றவம்பன்னாட்செய்துறைந்தனனொப்பிலாத்தென்
குன்றில்வாழ்கருணைக்குன்றுங்குறுமுனிக்குரிசின்மாதோ. (உஅ)

அகத்தியன்றுபனஞ்செய்யகத்தியேசுரனையார்வ
மிகத்தொழுதருச்சிப்போர்கண்மேவுமேலானபேற்றைச்
சகத்திரத்திரட்டிநாவாலனந்தனுந்தனதுணாம்
புகப்புகலாமற்றூவுட்போயின்யாம்புகலற்பாற்றோ. (உகூ)

ஆயினுமறிந்தமட்டிற்சிற்சிலவறைவலான்ற
தூயமாதவத்திரன்புதுன்னுறக்கேண்மினென்று
சேயசெந்தழன்மாமேனிச்சிரகத்தீசர்செவ்வி
மேயதாட்டுணையைப்போற்றின்வீட்டின்பமேவுவாரால், (௩0)

புகல்கிரேதத்திற்பத்துவருடத்திற்பொருந்துபுண்ய
மிகுதிரேதாயுகத்தோராண்டினின்மேவும்விஞ்சித்
திகழ்துவாபரயுகத்தோர்திங்களிற்சேருஞ்செப்பத்
தகுகலியுகத்தோர்வாரந்தனிற்சித்திசாருமாதோ. (௬௧)

கலியுகந்தனிலோர்நாளிற்கைப்புகுந்தருமந்தன்னிற்
பொலிவுறுங்கோடிபங்குபோதுறுங்சோதிலாம
னலிவகறருமந்தானோர்கணத்தினினனாநாநாவாற்
சொலவரிதாமகத்தீசுரனடிதொழுதாயோர்க்கே. (௬௨)

அலகரும்பிதிருந்தாமுமனகவீட்டின்பமார்வ
ருலகெலாமுய்யவம்பாநதிக்கரையுற்றொப்பில்லா
திலககத்தீசர்நாமமிதயத்தொன்றிரண்டுவாரஞ்
சொலினினைத்திடிற்கைகூப்பித்தொழுதிடிற்றோமற்றன்றே. (௬௩)

ஏவரகத்தீசர்நாமநினைத்தறோத்திரித்தலெய்தி
னவர்நமன்கடுங்கோபங்கொண்டார்த்தெதிரடர்த்துத்தூண்டுங்
கவையடிச்செங்கட்காரான்கனையொலிகாதிற்கேளா
துவகையினுயிர்போங்காலத்தொப்பின்ஞானம்பெற்றுய்வார் (௬௪)

அகத்தியனகத்தினார்வமாரவாராதித்திட்ட
புகழ்ப்புகுமிலிங்கநாதன்பொன்னடிப்பூசைசெய்வா
ரிகத்தின்மானிடரொன்றானுமெம்பிரானுருவமெய்திச்
சுகந்தபேரின்பவீட்டிற்றுன்னித்தன்பற்றுவாழ்வார். (௬௫)

இவ்விலிங்கத்தைப்போற்றுதிருதயத்தெண்ணுதெல்லணில்
திவ்வியதருமந்தானந்திகழ்தவமகஞ்செய்தாலுஞ்
செவ்வியமேருவொத்தபலன்றிலந்தனினுஞ்சிங்கி
வெவ்வினைவீயாதாகிவிழுமமேவிடுவன்மாதோ. (௬௬)

விடவரவாம்பாசத்தைமந்தரவரையின்வீக்கிக்*
கடல்கடைகாலைவந்தகாளத்தைக்களத்தின்வைத்தோ
னடியவரடியைப்போற்றுமடியவரடையாவொன்று
நடுவனீணகரும்வெம்மைநண்ணுமாநரகுமன்றே. (௬௭)

உவமையற்றுயகத்தீசுரதெரிசனத்தையுற்றோர்
பவமுறுபிரமகத்தியாயிரநிமிடம்பாறு
மவமுறச்சென்மமோராறாயிரமருந்தவார்ந்த
நவையுறுகள்ளுண்டோடநாடிடாதோமென்றே. (௬௮)

புகழகத்தீசர் தம்மைநேரிற்கண்பொருந்தக்கண்டோர்
திகழயன்மாலைக்கண்டுசேவைசெய்செல்வப்பேற்றிற்
ககல்பிரயாகைகங்கையாடியபேற்றிற்காருந்
தொகைமிகுகோடிபேறங்கதிகந்துன்னிடவாழ்வாரால். (௩௯)

முன்னுறுதொடர்ச்சிதன்னான்மனமுறுமுயற்சிதன்னா
லின்னலான்மகிழ்வான்மற்றுமெவ்விதத்தேனுமீசன்
பொன்னடிக்கமலந்தாழ்ந்தோர்புகழ்ந்துளோர்பூசைசெய்தோ
ரின்னவரிகபரத்தின்பெய்தியெஞ்ஞான்றும்வாழ்வார். (௪0)

என்வகையுருவாய்நின்றவகத்தீசாக்கியற்றுந்தொண்டு
மெண்விதமாகுமெம்மாலியம்பருமிலிங்கத்தின்பா
லெண்மிதவன்புற்றோர்மாட்டளவினன்பிணைதலோடு
மொண்ணுபசாரப்பூசையிடத்துப்பேராசையெய்தல். (௪௧)

இத்தகையிலிங்கத்தர்ச்சித்திடலெழிலெய்தவேண்டுங்
கைத்தொழிலெம்மானின்பக்கதையிற்காதல்கண்ணால்
சுத்தமார்தோத்திரச்சொற்குழறிடத்துலங்குகண்ணீர்
மெத்தமார்பகநனைத்தல்புளகமென்மேலுமேவல். (௪௨)

உயருமவ்விலிங்கந்தன்னையுற்றுநோக்கிடலொப்பில்லாச்
செயிரறுசேவைசெய்துசிவபாலனம்பின்செய்த
லயர்விலாவடிமைத்தன்மையாகவெட்டாகுமன்பால்
மயர்வெலாமாற்றியாற்றுமாதவவளமைவாய்த்தீர். (௪௩)

அறிவிலானிடத்திவ்வெட்டுமடையினுமவன்யாவர்க்கும்
பெறவரிதானமுத்திப்பேற்றினைப்பெறுவன்பின்னு
முறுதிரவன்புதன்னாற்பிரமவுண்மையினையூங்கி
னறிவுறுகாட்சிதன்னாலடையுமாலழகார்முத்தி. (௪௪)

சொல்லருமுத்திவேதநூலறிதூய்மையாலே
வல்லையினீத்தோர்க்கெய்துமறையுறைஞானம்வாய
தெல்லையிற்றுறவுபூணுதிலங்குமாச்சிரமத்தெய்தா
தொல்லைநால்வருணத்தோர்க்குமுலகவாச்சிரமத்தோர்க்கும். (௪௫)

திருந்தகத்தீசர்செவ்விசேரடிச்சேவைசெய்யிற்
பொருந்துறுபிறப்பின்மீண்டும்புக்கிடார்பொருவின்முத்தி
வருந்திருத்தலத்தின்வாழும்பிப்பிலங்கிடமன்னி
யிருந்தவரெவருந்தேவரேற்றமுமிழிபுமின்றே. (௪௬)

தாயகத்தீசர் தூயதாட்டுணை தரிசித்தாரேன்
மேயதீவினை செய்தோம்யாமென வெருவுறுதல்வேண்டாந்
தூயசெங்கதிரோனல்லைத்தூரத்துவதன் றித்தூயர்
தீயரொன்றவர்க்குவேறுசெயல்செயாதனபோற்றோர்மின். (சஎ)

திறலகத்தீசர்மாசில்சீரடிதெரிசித்தோனுக்
கறைமறைநாலும்வல்லவையனுமொவ்வானன்னத்
திறைபராவியவித்தொல்லையிருந்தலத்தெய்தினோர்கள்
மறுவறுமியோகவாணர்சேர்கதிமருவிவாழ்வார். (சஅ)

இதழியஞ்சடையகத்தீசுரனெழிற்கமலபாத
முதயகாலத்திற்போற்றுமுயர்தவமுற்றுளோரைத்
துதிபுரிவோர்கள்கண்டோர்தொழுதுளோரர்தம்மைச்சூழு
மதிகமாபவமெலாமோரணைக்கணத்தறவாழ்வாரால். (சகூ)

எண்ணகத்தீசர்செந்தாமரையடியேத்துகில்லா
ணன்னலார்மறைகற்றுமுமருங்கொடைக்கருகனல்லன்
றண்ணுலாங்கங்கைசூடுஞ்சடையற்கன்புடைமைசாரின்
மண்ணெலாம்புகழுமாசற்பாத்திரமவனுமாதோ. (௫0)

அத்திருத்தலத்தின்வாழ்வோரைாந்துவத்திரமுமான்ற
கைத்தலத்தழுலுமானுங்கமழ்திரைக்கங்கைதன்னை
வைத்தசெஞ்சடையிற்றிங்கண்மவுலியுமிடையில்வாய்த்த
சித்திரத்தோலும்வல்லவாட்டுச்சிந்தூரத்தோலும். (௫க)

கண்டிகைக்களமுந்தெய்வநீற்றொளிகளுலுமேனி
கொண்டதோரொழிலும்வெள்ளைவிடைநெடுங்கொடியுங்கோதி
றிண்டிரற்றேருளுங்கொன்றைத்திங்தொடைதானுஞ்சேர
வண்டர்போற்றிடுமெம்மீசனருளுருவடைவரம்மா. (௫உ)

குடமுனிபோற்றுமீசன்கோனகர்குறுகுவோர்கட்
கடியொன்றற்கசுவமேதயாகநற்பலனுண்டாகுஞ்
சுடர்மலர்தோயந்தூயகனிதருவோர்சார்துன்பற்
றிடமிடலெய்தமேலாமரசராயிலங்குவாரால் (௫ங)

அறிவினர்வணங்ககத்தீசுரர்திருவடிக்கணன்பு
நிறைமறையோருக்காறுசுவைசெறிநேரிலன்னங்
குறைவறக்கொடுத்தோரீசன்றோழனுங்குபேரன்கோதி
லுறையினுக்கிடையாமேலாம்பொருளெலாமடையவாழ்வார். (௫ச)

நாவகத்தீசர்நாமந்துதிப்பவர்நறுமணங்கொள்
பூவிற்பொற்புறவர்ச்சிப்போர்பொன்னடிபோற்றுவோர்க
டேவர்கடேவனுமென்றறிவுறுஞ்செவ்விசேர்ந்தோ
ரேவருமிம்மையம்மையின்பமுற்றினிதுவாழ்வார். (௫௫)

கருங்களக்கருணைக்குன்றாமகத்தியன்கவினப்போற்றுந்
திருந்தகத்தீசர்செவ்விசேரடிச்சேவையோர்க்குப்
பொருந்துறுஞ்செல்வமின்பம்புத்திரப்பேறும்போற்றா
திருந்திடுமூடரேக்குற்றிடச்செறியிசையுமாதோ. (௫௬)

செயற்கருமகஞ்செய்பேற்றிற்றவஞ்செயச்சேரும்பேற்றின்
வியப்புறுமனேகதீர்த்தமாடிடமேவும்பேற்றிற்
செயத்தகத்தீசர்ப்போற்றிற்கோடிபங்கதிகஞ்சேரப்
பயக்குவதலாற்கைலாயப்பதமும்பாலிக்குமன்றே. (௫௭)

கன்னகோரிரண்டகத்தீசுரர்கழற்கமலப்போதை
யுன்னுவோன்றன்மூவெட்டினொருமூறுபோகவுற்ற
தன்பெருங்குலத்துற்றோர்கடம்மைமேலாக்கித்தானு
மின்னலற்றுமைபாகன்பொற்பதத்தினிதெய்துவானால். (௫௮)

ஒருபொழுதுயரகத்தீசுரரருட்டாளையுன்னி
லரியவப்பவத்தந்தத்திலரனுருவடைதலாவ
னிரவிசேர்காலைகோலவிலிங்கத்தையிதயத்தெண்ணி
யுருகுவோன்சிவசொரூபமுறுவனவ்வுடம்பிற்றானே. (௫௯)

கண்டவர்பவமாமேருவணுவும்பின்கண்ணிற்காணு
தொண்டழன்மழுவகத்தீசுரர்திருவடியாமொப்பின்
முண்டகம்போற்றுவோர்க்குமுற்றாக்கருமமூசு
தெண்டிரைக்கடல்சூழ்வையத்தில்லையாற்செப்பின்மாதோ (௬0)

சூரியோதயத்தகத்தீசுரவெனமுக்காற்சொல்லி
யேர்தரவெழுவோன்முன்னாளியற்றுமாபாவமென்னும்
பேரிரும்பனியைப்பேர்த்துப்பெரிதுபுண்ணியமாஞ்சோதி
சேர்தரச்செயுமச்சொல்லாமலரியின்செயலீதாமால். (௬௧)

உயிரகல்போதகத்தீசுரவேனவோதுவோன்பின்
செயிருறுசெனனவேலையிடைசிறிதேனுஞ்சேரா
துயர்விடையூறுமீசனுருவடைந்தொப்பிலாத
கயிலைமாபதவிமேவிவாழ்வனாற்களிப்பின்மன்றோ (௬௨)

மெய்யர்காடேகமென்னும்வெஞ்சிறைதன்னின்மேவா
துய்யுமாறகத்தீசாசம்போவுமையொளிர்மணாள
வையமாணிக்கச்சோதியமலவற்புதவானந்த
மெய்யனேயென்போர்வெய்யமாயைவீட்டுவாரால். (௬௩)

கங்கைசேர்சடையகத்திசுரசதாசிவகாமறகாய்
துங்கமுக்கண்ணசோமசுந்தரதுலங்குவெண்ணீற்
றங்கமால்விடைமீதேறுமரவெனவன்பின்பாரத்
துங்கணுவாற்சொல்வோர்பாவந்தழற்சார்பஞ்சாமால். (௬௪)

திருவகத்தீசாவாழ்பொழ்புறுசினகரத்தைச்செவ்வித்
தருவினிற்புரிவோன்சுற்றத்தாரகண்முக்கோடிதானு
மருவிவான்சுவாக்கம்வாழ்வாரிட்டிகைக்கல்லின்வாய்ப்பப்
புரிகுவோன்றிருமணாளன்பதம்பொருந்துறவாழ்வானால். (௬௫)

இலங்குகற்கற்கிசெய்தோன்பிரமனூரினிதுவாழ்வ
னலங்கொளிப்பளிங்கிற்சேதிமம்புரியருந்தவத்தோன்
பொலன்செறிவிமானமேறிச்சிவபுரம்புகுவன்பொன்னாற்
றலம்புகழ்சிகிரிசெய்தோன்சங்கரன்சமீபஞ்சார்வான். (௬௬)

தாரத்தால்விமானஞ்செய்தோனசம்புவின்சொரூபஞ்சார
வாரத்தன்பவமெலாமற்றளவறுமகிழ்ச்சியார்வன்
வாரத்தான்மாடைத்தூவிசெய்தவங்கைவந்துற்றோ
னீரத்தார்மதியஞ்சூடுமிறைவன்வேறிவன்வேறின்றால். (௬௭)

திருந்தகத்தீசர்மேவச்செல்வனூற்சிறப்பச்செய்த
பொருந்துபொற்கோயிலுக்குந்தரித்திரனன்புபொங்கப்
புரிந்தமட்கோயிலுக்கும்பொருந்துறுபலன்பொற்பாரத்
தருஞ்சரியுதவிகொண்டோர்தம்பெருந்தகைமைதன்னால். (௬௮)

எதிரிலாவபிடேகப்போதினிடைமிடுதல்பாடன்
முதிருமாபேரியாரவாரங்கண்மூன்றுகாலத்
ததிருமாறும்றுவிப்போனடைமகாபவங்களஞ்சி
யுதிரவேறுவமையில்லாச்சிவபதத்துறைவன்மன்னோ. (௬௯)

புகழகத்தீசர்க்காற்றும்பொருவறுமபிடேகப்போ
தகமகிழ்ந்துருத்திரத்தையனகமார்சமகந்தன்னைப்
புகாறும்பவமானத்தைப்புகல்பஞ்சசாந்தியென்னும்
இகழுமந்திரஞ்செபிப்போர்நரகவேதனைசேராரால். (௭0)

ஆறணிசடையகத்தீசுரர்க்கபிடேகமாற்றப்
பாறயிரெண்ணெய்தேன்பற்பலபொருட்கொடுபண்பார
வீறுறச்செய்வோரீவோர்மேவுமேலானபேற்றைக்
கூறுவன்சிறிதுகேண்மினென்றறவோர்க்குக்கூறும். (௭௧)

இலககத்தீசர்தேசாரெழின்முடிதன்னிலின்பா
னலமலியாவின்பாலாலாட்டுவோனவின்மூவேழு
தலைமுறைச்சுற்றத்தோடுஞ்சார்ந்துசந்தோடஞ்சாரப்
புலவர்போற்றிடுமெம்மீசன்பொற்பதம்பொருந்திவாழ்வான். (௭௨)

வேறு.

தயிராலபிடேகம்புரிபவன்றமரைக்கண்ணன்
பதமேவுவன்மதிசேர்முடியிடையிற்பரிவாலே
புதிதாநறுநெய்யாட்டுறுபுனிதன்றொருகற்பத்
தநிபாவமொர்நொடியிற்பொடியாய்வாழ்வடைவானால். (௭௩)

தேனாலபிடேகிப்பவன்பிரமப்பதஞ்சேர்வன்
கானார்திலநெய்யாட்டிடிலளகைப்பதிகண்ணா
மானாதுயர்கழைப்பாறனிநாட்டின்மதிபதியா
மானார்கரத்தகத்தீசுரர்மணிமாமுடிமிசையே. (௭௪)

எழிலாரிலிகுசநற்கனியின்சாறிசைமுடிமேல்
வழியாமுழுகுறவாட்டிடுவார்தென்புலத்தார்வாழ்
செழுமாபதவியின்மேவுவரிளநீர்கொடுதிகழ
வழுவாவகையினிதாட்டுறின்மறையோர்கொலைமருவா. (௭௫)

வரம்பற்பலவடியார்க்கருளிறைமாமணிமுடிமீ
தரம்பைக்கனிதனிசாத்துறுமவர்வாயுவினழகார்
தரம்பெற்றிடுபதமேவுவர்துகிலால்வடிதருநீர்
நிரம்பத்திருமுடியாட்டுறின்வருணப்பதநேரும். (௭௬)

கந்தத்தொளிர்சந்தக்குழம்பினிலாட்டுறல்கண்ணிற்
சொந்தத்தொடுகந்தர்வர்களுலகாளுறுமளிசூழ்
கந்தக்கமலப்பூநிறைகமலத்தினிதாட்டி
னெந்தைக்கமரேசன்பதமெய்திப்பொலிவெய்தும். (௭௭)

புனைபாதிரிகழுநீரலரியின்மாமலர்பொதுளி
நனைமாகயநறுநீர்கொடுநனியாட்டுதல்செய்வோன்
வினைபோமலர்தருபன்மலர்கலவுங்குளிர்வியனீர்
தனியாட்டுறினெனையாட்கொளுமரனற்பதஞ்சாரும். (௭௮)

ஏலத்திகழ்தக்கோலநலியற்சிரகமெழிலே
சாலுங்கற்பூரங்கலவுந்தண்ணமுதத்தா
லாலம்பொலிகளத்தெம்மிறையவற்காட்டுறுமவரன்
பாலங்கியினுலகிற்பலபலநாளுறைவாரால். (எக)

மண்ணிற்புரிகும்பங்கொடுநதிவாவியின்மருவுந்
தண்ணீர்முகந்தகத்தீசரர்தலைமீதபிடேகம்
பண்ணும்படிசெய்வோனொருநூறுண்டுபேல்வளமு
மண்ணும்படிமண்ணின்மிசைவாழ்வான்மகிழ்மனவே. (அ0)

செம்பிற்குடமீந்தோன்சதமகனூருறுந்திகழ்வென்
ணம்பொற்குடமீந்தோனயனழகார்நகரடைவான்
செம்பொற்குடமீந்தோனரனகர்சேருறுமணிசே
ரம்பொற்குடமீந்தோனரனருகேயமர்வானால். (அக)

புவிபோற்றகத்தீசர்க்கபிடேகப்பொருட்டேனு
மவிர்நீற்களத்தன்னொனிவேதனமாற்றுதற்கேனு
நிவர்பாற்பசுவீவோன்பரிமேதப்பலனேர
வெவரும்பெறற்கருசாருபமெய்தித்திகழ்வெய்தும். (அஉ)

அமுதாலபிடேகம்புரிபவனூர்பயனதனைக்
கமையோருரைசெயயார்வலரகத்தீசுரகளிசே
ருமைநாயகவெனவென்னதியுறினுஞ்சுரநதியி
னமைவேகுடைதருமாபயனடைவாரவனியினே. (அங)

சிவமேதருமகத்தீசுரர்சிகரத்திருக்கோயி
லவமாம்வகைதிருத்திக்கருத்தினின்மாமகிழ்நன்னு
மூவனூந்திருமுன்னன்னிலமொளிரும்படியுருற்று
பவனுந்தவப்பலனிற்பதின்மடங்காம்பலனடைவார். (அச)

சின்னம்படுமிடமுன்பினிற்சிறப்பத்திருத்திடுவோன்
றன்னும்மறையோர்கத்தியொரயுதந்தொலைக்குவன்சூழ்
வன்னம்படுசுடர்வைத்திடுவோன்மாமயன்மாறி
மன்னும்பெருமிதஞானமெனும்வைபமாதோ. (அரு)

அயிர்சாலியினரியெண்ணெய்நெய்யழகார்பருப்பிவைதாஞ்
செயிர்தீர்தருவனவீபவர்தேவர்க்கரசாவ
ருயர்பூசனைசெயிற்காண்குறிநூருவக்கையிற்றீண்டிற்
பயின்மாவினையெவையும்பொடிபட்டோடிடுமென்றே. (அசு)

நாடும்புகழகத்தீசுரர்நயமயபாமசபையின்க
ணாடும்பதந்துதித்தன்பிற்கண்ணடிகண்டைநலாடை
கூடும்படிதருவோன்சதுரங்கங்கொளுமரசாய்
வாடும்மிடையுமைநாயகனடிநீழலில்வாழ்வான். (௮௭)

பேரோசைசெய்முரசம்பெருமிதபேரிகைமுழவஞ்
சீரேறிடக்கையினோடுடுக்கைசெவ்வியதிமிலை
காரேர்களத்தகத்தீசுரர்களிப்பானளிப்பானிப்
பாரோர்புகழ்வளமீதுறப்பலிப்பச்சொலிப்பானால். (௮௮)

இன்பாலகத்தீசர்க்கருள்பொருளெள்ளளவெனினும்
தன்பான்மகமேரொப்பனவாநற்பயன்சாரு
மன்பாலரன்றிருமுன்னரினமர்வாரடாபவம்போய்ப்
பின்பாரிடைபிறவாநெறிபெறுவார்பெரிதன்றே. (௮௯)

வாழ்நாள்கழிதருமெவ்வனநிலையாமனைமக்கள்
கேழ்சேர்பொருளிவைதன்னொடுவருகின்றிலகெழுமு
மேழ்பார்புகழகத்தீசுரரிணைத்தாடுணையெனவே
தாழ்வாரறிவுடையாரவர்நிகரார்தரணியினே. (௯0)

அடியாரிடர்பொடியாம்வகையாக்கும்மகத்தீசர்
வடிவார்திருவடிநாடொறுமனத்தேதுதிப்பனவே
கிடையாதடைதருவாழ்வெனவேசேர்பவர்கிளரும்
பொடிபூசியவரனார்பதம்புக்கின்பொடுபொலிவார். (௯௧)

குடைநற்கொடிசாந்தற்றிசந்தங்குக்குல்கொடுப்போர்
கடல்சூழ்புடவியையாளுறுமரசெய்துவர்கமழுந்
தொடைசூடுறநறுமாமலர்தருவோர்துகளகலை
நடைசேர்புரவியின்மேதமகப்பேறுநணுவரால். (௯௨)

பெரியோர்துதியகத்தீசுரர்பிறங்குந்தெரிசனந்தான்
வருமேலெழிற்றீர்த்தந்தவமகஞ்செய்வனவேண்டா
மருமேவுகத்தூரிகுங்குமங்கோட்டம்மகிழ்வோடுந்
தருவாரளவிலவாம்விபவங்கைவரல்சார்வார். (௯௩)

திரைநேர்தருபெருவாரிதிசேருந்தரளஞ்செய்
நிரையாரமளித்தோன்றனதன்னேர்பொருணேரு
நரைசேர்விடையகத்தீசுரர்க்கம்பாநதிநண்ணுந்
திருநீரபிடேகித்திடிற்செல்வந்தனைச்சேரும். (௯௪)

நரையுந்திரையுஞ்சேர்முனநல்லிந்தியங்கெடுமு
னுரைமாறிடுமுன்சிந்தனையொழியாமுனமுயருந்
திரைபொங்கியகங்காநதிசேருஞ்சடையகத்தீ
சுரர்தந்திருவடிமாமுடிதொடவேதொழுமின்னே. (௬௫)

அகத்தீசுவரப்படலமுற்றிற்று.

## உபதேசப்படலம்.

பொன்னினம்பலத்துமுன்புராரிகாட்டிய
நன்னராந்திருநடமுளத்துநாடொறு
முன்னியமாதுமைநங்கைமுன்னத்து
னுன்னருமையமொன்றுதித்ததென்பவே. (௧)

எவ்வமற்றிடுநடமினிதுகண்டிடுஞ்
செவ்வித்துருமவாய்க்கிள்ளைத்தேமொழி
நவ்வியொவ்வியவிழிநங்கைபார்ப்பதி
யவ்வுளையமலனைவினவன்பார்ந்தனள். (௨)

தேவர்கடொழுமகத்தீசர்செவ்விதி
னார்வமுற்றமர்தருமமையத்தற்புதத்
தேவிகண்டுவகையிற்சென்றுசீருறு
மாவலிற்பணிந்தெழுந்தறைவதாயினாள். (௩)

சூதந்தரமுதலநிற்காக்கித்தோமறு
பதந்தொழுவார்க்கருள்பரமதாண்டவம்
பதஞ்சலிவியாக்கிரபாதர்பாற்புரி
விதமடியாட்கருளென்றுவேண்டினாள். (௪)

சந்தனத்தனமலைத்தரளத்தண்ணகைச்
சுந்தரவம்பிகைதனக்குத்தோமறு
மிந்துவைச்சடையில்வைத்திதழிமாலைவேய்
கந்தரச்சுந்தரக்கடவுள்சாற்றுமால். (௫)

வேறு.

புலிகாலனுமாபதஞ்சலியும்புகலற்கருசெஞ்சடைமுடியு
முலகோர்புகழ்வெண்ணீற்றொளியுமுருத்திராக்கத்துயரணியு
மிலகாதரவார்தரவணிந்திவ்விலிங்கத்தெழிலார்கூவிளத்தாற்
பலநாளுபசாரத்தொடுபூசித்துப்பணிந்தார்பரிவுற்றே. (௬)

பொன்னம்பலத்தினடனமிடுபொற்பாதத்துமிலிங்கத்து
மன்னுஞ்சிறப்போடருச்சித்துமகிழ்விற்பன்னாள்வணங்கினதாற்
கன்னற்குதலைக்கயலெழிற்கட்கௌரியவர்கண்ணகங்களிப்பப்
பன்னற்கரியதிருநடமாடினமென்றுரைத்தான்பராபரனே. (௭)

திங்கட்கொழுந்துசூடுசடைச்சிவன்செப்பியசொற்செவிகேளா
வங்கற்புதத்தோடகமகிழ்வுற்றழலார்சடைகண்மணிநீறு
மங்கத்தணிந்துகூவிளங்கொண்டருச்சித்தானொன்றருள்செய்த்
ரிங்கற்பொடுமப்பொருட்பெருமையெனக்கிங்கருளுகெனப்பணிந்தாள். ()

அரவபடப்பொற்பாரல்குலம்மைக்கவனியனைத்துமுயப்
பொருவில்சடிலப்பெருமையுருத்திராக்கப்பெருமைபுனிதநீற்
றருமைப்பெருமைகூவிளத்தின்பெருமையனகவுபசாரப்
பெருமையிவற்றைப்பிறைமதிக்கீற்றணிந்தபெருமான்பேசுவரால். (௯)

பொற்புற்றிறுகிப்பூரித்துப்பூவின்மெலிந்துபூணணிந்து
வெற்பிற்றிரண்டுவிளங்குமுலைவிமலாய்நமதுமிளிருறுப்பிற்
சொற்பெற்றுயர்ந்தமின்னலொளிதுளங்குசடைநந்தாமுடிமே
லற்புற்றமரர்வியப்பவகமகிழ்வுற்றணிந்தேமாதலால். (௧௦)

மன்னரணியுமணியணிவோர்தம்மைக்காணின்மகிதலமாள்
மன்னனெனக்கண்டுபசாரமகிழ்வினாற்றுமாபோலப்
பொன்னையனைசடையுடையோர்தமைநாமெனவேபோற்றுவா
ருன்னியமரரோடுமுலகுறவாழ்வுறுநல்லுரவோரே. (௧௧)

நீண்டசடிலமொரோவொன்றுநிகழ்த்துமிலிங்கமொரோவொன்று
மாண்டசடிலமுடியுடையானவற்காயிரமுன்வழிமுறையிற்
பூண்டபவச்சுற்றத்தாருமவற்காயிரம்பிற்பொருந்துமுறை
நீண்டபவச்சுற்றத்தாருமெமதுபதத்தினேர்வாரால். (௧௨)

சோதிச்சடிலமுடையானைக்கண்டுவணங்கான்றாத்தவமப்
போதிற்பொடியாய்வணங்கினோன்புகன்மாபாவியாயிடினு
மோதற்கருமாவிபவமெலாமுறுமாங்கவற்கேயுயர்வேங்கைப்
போதிற்பொன்னிற்பொலிந்திலங்குசுணங்கார்தனத்துப்பூங்கொடியே.()

துலங்குஞ்சடைதோய்தூயபுனலொருவனுடலந்தனைத்தெறிப்பின்
வலந்தங்கியபூதங்குணுங்குமாதுட்டத்தெய்வதமனது
கலங்கும்பிணியும்பாவமுமக்கணத்திற்கழியுமாதலினா
னலந்தங்கியவச்சடையவற்குநமக்கும்பேதநவிலரிதே. (௧௪)

புகழ்பொற்சடிலமுடிதரித்தோர்புனிதகுலத்திற்போந்தோருந்
திகழும்பிரமனுறுகற்பமொருநூறினிதுசிவலோக
மகிழ்வினிருந்துவாழ்வரொளிர்வேணியணிந்தோர்மகிமைதனை
யிகழ்விலரவகடிதடத்தாயியம்பவெவர்க்குமியையாவே. (௧௫)

வேறு.

இலங்குவைதிகநீறென்றுமிலௌகிகவிபூதியென்றும்
பலந்தருநீறிரண்டாம்பகர்ந்தவைதிகவெண்ணீறு
நலந்திகழோமகுண்டத்துறுவலௌகிகநன்னீறு
வலந்தருதூயவாவின்மயத்தினுளவாமாதே. (௧௬)

சயபுராதனியேயென்றுஞ்சத்தியோசாதையென்று
மியையும்வைதிகவெண்ணீறீரிரண்டதாயிசைப்பர்மேலோ
ரயனியற்றியாககுண்டத்தமைதரவாவதொன்று
முயர்மறையோர்செய்யாகத்தழலினுண்டாவதொன்றும். (௧௭)

இலங்கிலௌகிகவெண்ணீறுமிரண்டதாயிசைப்பரொன்று
நலங்கிளர்தீக்கைபெற்றோர்நயக்குநற்சைவமென்றும்
பொலங்கொளுந்தீக்கையில்லோர்பொருந்துறுமசைவமென்றுந்
தலங்கிளர்தரவெஞ்ஞான்றுஞ்சாற்றுவராற்றக்கோரே. (௧௮)

செப்புறுகற்பமென்றுமனுகற்பமென்றுஞ்சீர்சேர்
தொப்புகற்பமென்றுமுயர்சைவரணியொண்ணீறு
தப்பறவொருமூன்றுமதன்மைநாஞ்சாற்றக்கேளாய்
துப்பிதழ்முத்தமூரற்சுடர்மதிமுகத்துத்தோகாய். (௧௯)

கன்றையீன்றிடாதவாநாகீன்றதற்காலக்கற்ற
கன்றுவீயுற்றதேனுக்கன்றிலாமலடுகோமர்க்
கன்றிரண்டீன்றபெற்றங்கருவயிற்றிடையிற்கண்ணிக்
கன்றுதன்றுறநாளுளும்வளரெழிற்கபிலைமன்றே. (௨0)

வேறு.

காதுநீடுவால்கோடிவையிடையினிற்கழியா
சாதுசற்றுமுற்றிடாததாஞ்சுரபிநோய்தழுவக்
கோதுசேர்பசுவென்பனபோக்கிநற்குணங்கொண்
மேதகுங்கறவைத்திரட்பாலெழின்மேவ. (௨௧)

பங்குனிதிங்கணெல்லரிபணைக்கணற்றுண்மேய்
துங்கநற்பசுவின்மயமட்டமிசொலீரேழ்
தங்குபத்தைந்திற்சத்தியோசாதத்தைச்சாற்றி
யிங்குமண்விழாமன்மனையிலையினிலேற்று. (௨௨)

வழும்பகற்றிவர்மம்மனுவோதிமாகவியம்
பொழிந்தகோரமந்திரமுறைபுகன்றுறப்பிசைந்து
செழுந்திருப்புருடம்புகன்றுருண்டைசெய்தோமக்
கொழுந்தழன்மடுத்தெடுக்கவீசானனங்கூறி. (௨௩)

## வேறு.

புதுமெல்லியவத்திரம்வடித்துப்புதுப்பூங்குடத்திற்புகப்பெய்து
கதிசெய்காயத்திரிமுறையிற்கழறிநிலங்காசறத்திருத்தி
மதுசேர்நறுமாமலர்சாத்திவளநற்றுகிலால்வாய்பெய்தல்
விதிநற்றழலினிடாதுலர்த்திவிளைவித்திடலும்விதியாமால். (௨௪)

எழில்சேரியல்வாசனைக்குழலாய்கற்பமிசைத்தாமனுகற்ப'
வழுவாவனத்திற்காயுமயமயமாதத்திற்கொணர்ந்துபொடித
திழியாதுயர்கோமயவயங்கொண்டினிதிற்பிசைந்துதிரட்டியெடுத்
தழன்மீதிட்டுமுறையினெடுத்திடலாமுபகற்பமுமறைவாம். (௨௫)

வனத்தியியல்பான்மடுத்துண்டவனத்தார்பொடிகோமயத்தாலே
நனைத்தேதிரட்டியெடுத்தனலிட்டெடுக்குமுறையானண்ணுவதா
மினத்தார்பிணிதந்திடுநீலமெழிலாயுளைப்போக்கிடுஞ்செம்பு
தனத்தாரிசைபோக்கிடுஞ்சிவப்புப்பீதந்தருந்தாரித்திரமே. (௨௬)

வெண்ணீறெண்ணில்புண்ணியத்தைமேவவிளைக்குமிவைதரிப்போர்க்
கெண்ணேருடையதுயர்புலித்தோலிலங்குமான்றோலெனுமிவற்றாற்
பண்ணேர்தருபன்னிருவிரலினுயரத்திருநால்விரற்பரப்பில்
விண்ணோர்புகழ்பையியற்றியதிற்செறிப்பார்படிசேர்விற்பனரோ. (௨௭)

அணிசேர்விரறர்ச்சனிகனிட்டையகன்மூவிரல்களாமவற்று
லணியுமுறைமையனுமிகைமத்திமையால்வாமமடுத்தீர்த்துத்
தணியாவலந்தொட்டினிதிடையேதருமங்குட்டத்தெதிரீர்த்த
றிணிசேர்வலத்தோட்கெதிராகச்சிறப்பத்தரித்தன்முறைதெரியே. ()

நடுமூவிரலினெழுங்குறனேரிடலுமரபாநறுஞ்சிரமார்
பிடைசேர்நாபிக்கண்ணீசானர்தற்புருடமகோரமெழி
னடைசேர்வாமஞ்செபித்தணிவர்நவில்சத்தியோசாதம்முழந்தாண்
மிடைதோண்முழங்கைமுன்கைகளம்வெரிந்காதணிவர்விளம்புற்றே. ()

ஒன்றேடொன்றுங்குறநெருங்கலகறதிருகலிடையொடித
லென்றுங்கிவைபோக்குகவணிவோரிசைக்குமளவுறுதலுரந்தோட்
குன்றுங்கணியங்குலமாறுக்கொளமற்றுறப்புக்கொவ்வொன்று
மின்றுமிடையாய்கிரிகுலத்தெழிலிலணிதலியல்பாமால். (௩௦)

அணியுத்தூளம்புரிந்தன் றியணியார் திரிபுண்டரஞ்சந்திக்
கணினற்புனறெய்ந்தணிவரலாக்காலேதனியேகளித்தணிவர்
துணைமென் மூலேயாய்சைவரணிமுறைமைசொற்றுந் துகளின்மறை
யுணர்வைதிகர்நீறணிமுறைமையுரைப்பாமுணர்தியாலுமையே. (௱௧)

அரியமறையோர்தலேறுதன்மார்படர்தோளணிவரகிலமெலா
முரியவரசர்தோடுடைநான்குவப்பினணிவரோனேயோர்
திரளுமுழங்கைமுன்கைமுழந்தாள்வெங்செவிகண்சேர்த்தணிவர்
வளைசெயிருதோடுடைகூட்டிமறையோரணிகிற்பவுமாமால். (௱௨)

திகழுமகரமிருக்கிராசதசீர்க்குணஞ்செப்புறுமான்மா
வுகளும்பொறியாதிகள்கிரியாசத்தியுயருமாதேவ
ரிகழ்தீர்தருகாருகபத்தியமென்னுமிவற்றின்மயமெய்து
மகிழ்சேர்தருபுண்டரத்துமுதலாகப்புகல்புண்டரமாதோ. (௱௩)

செப்புமுகரமெசுர்வேதந்திகழ்சாத்துவிகமகமென்னு
மொப்பற்றுயரான்மாவிச்சாசத்திமகேசரொளியையுமிழ்
தப்பிறக்கணுக்கினியென்றிவற்றின்மயமேசாருமா
லிப்பார்மிசைத்துன்பறுத்தின்பமிசைக்குமிரண்டாம்புண்டரமே. (௱௪)

சாற்றுமகரஞ்சாமமுணாதருதாமதமாங்குணமலங்கண்
மாற்றும்பரமான்மாமகிமைமருவுஞானசத்திமதி
யேற்றுஞ்சிவனுகவனீயமென்னுமிவற்றின்மயமெய்து
மாற்றண்மதிநேர்வதனவுமைமாதேமூன்றும்புண்டரமே (௱௫)

உரைசெய்மறையோர்முதன்மூவர்க்கொப்பமுன்செப்புற்றபடி
புரிவைதிகவெண்பொடியாகுமசைவர்க்குரைத்தபொடியுடனே
வரைசெய்கோயின்மடைப்பள்ளிப்பொடியுமடியார்மடத்தெரிசெய்
யரியமடைப்பள்ளிப்பொடியுமடவிப்பொடியுமவர்க்காமால். (௱௬)

செயிர்தீர்தீக்கைசெய்யாச்சூத்திரர்க்குச்சிறப்பாமடைப்பள்ளி
யிலையும்பொடிகான்வெந்தபொடியேற்றதாகுஞ்சங்கரருக்
குயருமறையோர்குரவரிவரொளிர்சந்நிதிமுன்றூய்மையுரு
வியுலமிழிஞர்மேவிடத்துமணிதலிழிபாமெல்லியலே (௱௭)

இருகையேற்காப்பொடிவிதியினியற்றுப்பொடிவிற்றிடுபூதி
யரியதீக்கைபெறார்கொடுவெந்தளித்தபூதியிவையாகா
தரையின்வீழ்த்தல்வாய்திறத்தறலேயைநடுக்கல்கவிழ்தலென
வுரைசெயிவைநீத்திடல்வேண்டுமுமையேநீறுதரித்துறுங்கால். (௱௮)

உரைசெய்மறையோருத்தூளமுருவமுழுதாபியின்மே
லாசர்வசியர்பட்டம்போலணிவர்சூத்திரரொழுத்தனைத்தா
விரன்மூன்றினுந்தோன்றுறவணிவர்வெண்ணீறணியாதறமுதல
புரிதல்கரிசாமிமயவரையுதித்தபொன்னம்பூங்கொடியே. (௩௯)

நீதுதீர்க்குந்திருநீற்றின்செவ்விதெரிந்துதிகழவணி
யாதாரரியமறைநெறியைவயகன்றபதிதராய்விடுவர்
மாதேபூதியணியாதார்வதனமயானவனங்கண்டோர்
தீதுதீரநூறுதரஞ்செபிப்பார்பஞ்சாக்கரந்தெரியே. (௪0)

பூதிதரியார்தவமுதலாய்ப்புகலுமுவர்மண்புதைவித்தி
னேதுபயனுற்றிடாதணிவோரொன்றுமுஞற்றுதுறைந்திடினும்
தீதிறவஞ்செய்வோர்சேர்பேறடைவர்காண்டிதென்புலத்தோர்க்
கோதுதினநீறிடுவோர்ப்பூசிப்போரனந்தபலமுறுவார். (௪௧)

நீடும்பெரியவினையனைத்துநீற்றிவிடலானீறென்றுங்
கேடில்பொருள்சேர்த்திடுவதாற்பூதியென்றுங்கிளருயிர்கள்
கூடுதிடமாசறக்கழுவுகுணத்தாற்சாரமென்றுமட
மோடஞானச்சோதிதரலுறலாற்பசிதமெனவுரைப்பார். (௪௨)

பூதமலகைவேதாளம்புகன்மந்திரத்தாற்றுன்புபுரி
தீதார்தெய்வம்பயம்பழிபாவங்கண்மடமையெனச்செப்பற்
கேதாங்கலதியிவைநீக்கிக்காப்புக்கொளலாலெழிற்காப்பென்
றோதாநிற்பரிதன்பெருமையுரைக்கவொண்ணாதுயருமையே. (௪௩)

## வேறு.

திரிபுரத்தவரடர்த்தலினமார்கடிகைத்தே
யரியமாதவமாற்றினரங்கியாமனுகிப்
பரிவினுவிமையாதுபார்த்தனமந்தப்பதத்தி
னுரியமுக்கணும்வார்புனறுளித்துளியுதிர்ந்த. (௪௪)

பாரின்வீழ்வலக்கட்புனற்பன்னிருமாமு
னேரிலாவிடக்கட்புனலேழிருநீண்ட
தாருமக்கினிக்கட்புனறசவிருக்கமுமாய்ப்
பேருருத்திராக்கம்மெனப்பேசுவர்பெரியோர். (௪௫)

வெண்ணிறந்திகழ்பொன்னிறம்வெண்மைபொன்மிளிரும்
வண்ணிறங்கருமைநிறமென்னுநால்வருணங்
கண்ணுறும்முருத்திராக்கங்கள்கழறியமுறையே
வண்ணமாமறையோர்முதனல்வர்க்குமாமால். (௪௬)

### வேறு.

ஒருமுகஞ்சிவசொரூபமுயர்பிரமகத்தியோட்டு
மிருமுகமீசன்சத்திவொழில்வடிவமெய்தும்
பெருகுகோகத்திபேர்க்குமும்முகமழற்பிறங்கு
முருவமங்கனைமார்கத்தியோட்டுமென்றுணர்திமாதோ. (சஎ)

நான்முகம்பிரமரூபநரர்கொலைகலியுநண்ணுந்
தேன்முகத்தொடைசேர்கூந்தற்சேயிழைதிகழுமைந்தாம்
வான்முகமுளதுகாலங்கியினெழிலுருவமன்னு
மான்மிகுமுணவினுற்றகுற்றமுற்றறவேமாற்றும். (சஅ)

அறுமுகம்வெற்றிவேற்கையறுமுகனுருவமாகு
முறுவலக்கையின்கட்சூடின்மறையவர்கொலையானுற்ற
திறலுருத்தெறுதிர்க்குமேழ்முகஞ்சுடருஞ்சேட
னுருவுருவாக்கொல்பாவர்தமனியக்களவுமோட்டும். (சகூ)

எண்முகங்கணேசரூபமிசைக்குருமனைவியின்ப
நண்ணுபாதகத்தைநீக்குநற்பலதானமேற்பக்
கண்ணுபாதகமற்றோர்க்காமோதனங்கைக்கொண்டுண்ணு
மெண்ணில்பாதகமுந்தீமுன்னெதிர்ப்படுபஞ்சினேகும். (ருo)

### வேறு.

ஒன்பதாமுகக்கண்மணிவயிரவனுருவமுற்றிடுமோதும்
வன்பதாம்பொறிப்பையுடைவாளராமாசெலாமறமாற்றித்
துன்பமற்றபற்பலநலச்செல்வமென்மேலுந்தோன்றிடச்செய்வித்
தின்பமுற்றநல்முத்தியுஞ்சேர்தரவியற்றுமாலெளிதின்னே. (ருக)

ஒருபதொண்முகக்கண்மணிமாதவனுருவமொன்பதுகோள்கன்
மருவுநாள்பலபூதங்களலகைகண்மட்டில்துட்டத்தெய்வம்
பிரமராக்கதமுதலிவையால்வருபீழைபேதறலெல்லா
மொருகணத்தினிற்பரிதிமுன்னெதிர்த்திடுமிமத்திணோட்டிடுமாதோ. (ருஉ)

ஐந்திரண்டொடொன்றுமுகமமையுருத்திராக்கமஞ்ஞானத்தொல்
பந்தமற்றபன்னோருருத்திரருருப்படிவமாம்பரிமேத
முந்துமாயிரமோரிலக்கம்பசுவொண்ணிறியுடனைப்பத்
தந்தமாபயன்றந்திடுமிலங்கிதழ்த்தரளவாணகைத்தையால். (ருங)

ஆறிரட்டியமுகமுறுகண்மணியாதிருகதிராரும்
வீறுசேர்தருரூபமாங்கொய்யுளைமேதமேவிடுபேறு
மேறுசோதிசேர்மேருதானத்தினிலெய்திடுமெழிற்பேறு
மூறுமையணிவேணிகர்த்தோடரியுற்றகண்ணுமைமாதே. (ருச)

கந்தன்றன்னுருவாந்திரயோதசக்கண்மணியணிவோர்கள்
சிந்தைவேட்டவுஞ்செம்பொனினீட்டமுஞ்சேவகத்திறஞ்சேருந்
தந்தைதாய்மனைதனயர்கடுணைவர்களகட்டிளங்கருத்தன்னைச்
சிந்துவெங்கொலைப்பவநிரைசிந்துயற்றிடச்செயுமாற்றேரே. (௫௫)

ஏழிரண்டுமாமுகநமதுருவுநின்னுருவுமாமிவைபூண்டோர்க்
கேழிருங்கடல்சூழுலகிற்சுரரிருடிகளுயர்வேய்ந்தோர்
சூழுநல்வசியம்வரப்புரிதருஞ்சொலற்கரிதாந்தூய
வாழிநஞ்சிவபுரமெனும்வரைப்பிடைவாழ்வின்வைத்திடுமாதோ. (௫௬)

அன்னவேழிருமாமுகங்கிடைப்பரிதரிததுகிடைத்தக்கான்
மன்னுகந்தரத்தணிபவர்செபிக்குமாமந்திரம்வழுவாம
னன்னர்சித்தியாய்நற்பயனல்கிடுநால்வகைப்படைநாப்பட்
டுன்னுமேவலர்வலியழித்திடுமெழிற்சுடர்மதிமுகத்தோகாய். (௫௭)

சந்திசெய்திடின்மந்திரஞ்செபித்திடிற்றவம்புரிந்திடிற்றக்க
வெந்தநல்வினையியற்றினுங்கண்மணியணிந்தியற்றிடுவோர்கட்
கந்தநல்வினையொன்றனந்தம்பயனளித்திடுமணியாதோ
ரெந்தநல்வினையியற்றினுமவ்வினைப்பயன்சிறுத்திடுமாதோ. (௫௮)

இழிஞராயினுமறிவிலராகினுமேந்திழையாரேனுங்
கழிகளுண்முதலுண்பவரென்னினுங்காட்சிசான்மேலோர்கண்
மொழியுமவ்வழியுருத்திராக்கம்மணிமுடியிற்சூடிடுவாரே
லழியுநீள்வினையிறுதியினமதுருவடைவராலறிமாதே. (௫௯)

வேறு.

குடுமியொருமணிமுடியிருமூகழுத்தென்ணூன்கொளிகொண்மார்பின்
வடிவுபெறைம்பதுவத்தத்திரெட்டுமணிபந்தமதிலீராறாய் [ள்வா
முடிவின்முகத்தொடுமுகஞ்சேர்த்திடைமுடிந்துமேரமைத்திம்முறையிற்கொ
ரடியர்செபவடமூற்றெட்டதிற்பாதியதிற்பாதியாய்ச்செய்வாரால். (௬௦)

வடமனுமிகைநடத்திடுநய்பாறுமத்திமைசத்துருக்கண்மாள்வர்
திடமொடுதர்ச்சனிநடத்திற்பரபோகவீடுதருந்திகழ்வேற்கண்ணாய்
சடம்வெறுத்தோர்மேற்செறிப்பர்போகம்வேட்டோர்கிழாய்த்தள்ளுவார்கள்
கடவுண்மணிகலியாமற்பிறர்கணிற்காணுதவகைகணிப்பர்காணே. (௬௧)

சீர்பெறுமேருவைத்தொடுத்துச்செபித்திடுங்கான்மேருவந்துசேருமாயி
னொருமேருவைக்கடவாதிசைவடத்தைத்திருப்பன்முறையிதுவாநன்மை
சாரும்வடந்தவறிநிலந்தனின்வீழ்தன்முதற்குற்றந்தழுவுமாயி
னேரினமதுருவினுக்குச்செயுங்கழுவாயினிற்பாதிநெறியிற்செய்வார். (௬௨)

அங்குலியினிறைநிறைபுத்திரசீவஞ்சங்குபளிங் [illegible] ாரத்
துங்கமணிசுவணமணிகுசையின்முடிகண்மணியாமெனச்சொல்தூய்மை
தங்குமிவைமனுக்கணிப்பத்தக்கதொன்றற்கொன்றுபயனதிகஞ்சாரு
மங்குனிகர்வண்குழலாய்கண்மணிமேலாக்கொள்வாமதிவல்லோரே. (௬௩)

இல்லிலியற்றிடற்கதிகம்பசுக்கோட்டத்தொருபதெய்துநதியினூறு
நல்லதிருவாலயத்தாயிரம்வனத்தோரிலக்கம்வரைநண்ணுங்கோடி
முல்லைமலர்மூரலாய்நமதுதிருமுனரியற்றின்மொழியவொண்ணு
வல்லசெபவடமெடுத்துநூன்முறைமந்திரஞ்செபிப்போர்மருவும்பேறே. (௬௪)

சுத்தவிட்டுக்கிருபத்தைந்துமணிமூவொன்பான்சுபத்துக்காகு
மெத்துபொருட்காறைந்துவிசாரஞானந்தனக்குமிளிர்பன்னைந்தா
மித்தகைவெவ்வேறுசெபவடமியற்றுவாரதிந்தோரிரண்டுகூரம்
பொத்தவிழிமுத்தநகையுபயமலைநிகருமுலையுமையாமாதே. (௬௫)

எழிலுறுகண்மணிகணிற்கண்டிடிலிலக்கம்பயன்வருங்கையெடுத்தாற்கோடி
யழிவின்மணியணிந்திடிலாயிரங்கோடிசெபித்திடிலாங்களவிலாத
வெழிலுறுபல்பயன்பெறுவரெமதுருவமியைவர்பகைக்கென்றுந்தோலார்
வழுவிலதன்பெருமையுரைப்பரிதுமழைக்குழற்பவளவாய்வாய்மாதே. (௬௬)

## வேறு.

அலைதவழ்பாற்கடலமரரியாவரு
மிலகுறக்கடைந்தபோதெழுந்தவில்வமு
மிலையுறுதுளவமுமிலகவெய்தலா
லுலகினிலெமக்கவையுவப்புண்டாக்குவ. (௬௭)

செழியநற்றுளவினிற்சிறந்தகூவிளந்
தழையறமுதிர்ந்துலர்சருகிற்சாரினு
மழகுறவொன்றிரண்டணிவராயினுங்
குழைகிழிநெடுங்கணுய்மகிழ்வுகொள்வமால். (௬௮)

உலகுறுமுயிர்க்கெலாம்வளமையுற்றிட
விலகலர்மகட்கதிகாரமீதலி
னலமலியிமவரைநங்கைநாடொறு
மலகறுமகிழ்ச்சியினமர்வளாங்கதின். (௬௯)

பிணியறவேண்டினும்பெருமைவேண்டினு
மணிமுடியரசராய்வாழவேண்டினுந்
தணிவறுசுவர்க்கமுந்தக்கமுத்தியு
மெணினவர்க்கெனும்வகையீயும்வில்வமே. (௭0)

எட்டுபின்னிட்ட ... ம்பதாம்பெய
ரொட்டியுமாயிரம்பெயர்களோதியு
மிட்டடிதொழுபவரெய் தகற்பயன்
மட்டவிழ்கூந்தலாய்பகுக்கவல்லமோ. (எ௧)

வேறு.

எத்தனை தாளமைப்பூசையிழைத்திடினுமிவ்வுலகி
லத்தனையுமுபசாரமாமதனுக்களவில்லை
தத்தைமொழிமுத்தநகைத்தார்குழலாயுபசாரஞ்
சித்தமுறவடியவர்கள்செயும்வகையிற்சிறிதிசைப்பாம். (எ௨)

வைகறையிற்கடன்முடித்துமருமலர்மாசறக்கொணர்ந்து
செய்முறையிற்புனறோய்த்துத்திகழ்சீந்திசெய்தபினர்
வையமலமறச்சுத்திவகுத்துதயனிடத்துநமை
யையமறவகத்தின்பன்பார்தரவாராதித்து. (எ௩)

ஐந்துவகைச்சுத்திமுறையமைத்திலிங்கமமர்பீடந்
தந்துமூர்த்தியுமூர்த்திமானுமெந்தமையுநினைத்
தந்தமுறுமலரருச்சித்தருக்கியமன்பாலியற்றி
யெந்தமைக்காத்திடவிங்ஙனெழுந்தருளுகெனவேண்டி. (எ௪)

திருமஞ்சனச்சாலைசேரவடிப்பாதுகையா
விருமஞ்சுமலரருச்சித்தினியநறும்புகையீய்ந்து
பரிமளச்செஞ்சுடர்சுழற்றிப்பாத்தியந்தந்தாசமனந்
தெரிதரச்செய்தருக்கியமுந்திகழமகிழ்வொடுசெய்து (எ௫)

வேறு.

தரைபுகழெண்ணெய்நெல்லிதகையரிசனநற்கௌயஞ்
சுரைதருததிபானெய்தேன்றாயவைந்தமுதங்கன்ன
லுரைபெறைந்தமுதம்வாழையொண்கனியிளநீரொப்ப
வரைதருவில்வமாரமருக்கியமபிடேகித்து. (எ௬)

ஈரமொற்றுடைபோக்கிக்கோவணம்பட்டாலேற்றி
யாரமன்பாகவப்பியணிமணிக்கலன்களார்த்தி
நேரறுதொடையல்சூட்டிநிகழறுசுவைநாலுண்டி
யாரமுதூட்டிவாசமமைபுனலமைவிற்காட்டி (எஎ)

அருக்கியமுதலநீட்டியணிபஞ்சவாசங்காட்டித்
திருத்தகுவதனவேர்வைதீரநற்றூசுசேர்த்தி
யுருக்கொள்பற்பலதீபங்களொருங்குவட்டித்துநீறு
தரித்துக்கண்ணடிமுன்காட்டித்தண்குடைதலைகவித்து. (எஅ)

வெண்டிருக்கவரிதன்னுன்மென்மெலமருங்குவீசி
மண்டுவாசச்சாந்தாற்றிகாறருமாறுமாதிப்
பண்டைமாமறைசொல்பஞ்சாக்கரம்பயின்றங்கமத்த
மண்டர்நாயகனுக்காவியனைத்துந்தந்தன்பிற்போற்றல். (எ

சொல்லுமீதுபசாரத்தின்முறைமையாந்துகளிலானெய்
நல்லொளியேற்றலைந்தாநறும்புகைகமழநல்க
லொல்லைசாய்பணிதிருத்திப்புதுக்கல்பாவத்தையோட்டு
மல்லல்சால்விழாவெடுத்தன்மாவுபசாரமாதே. (அ0

இன்னவாமுபசாரங்களியற்றினோர்க்கிடர்வந்தெய்தா
தன்னவரடைகிலாதபொருளவனிக்கணில்லை
மன்னுநற்பதவிவைகிமாசுகவாரிமூழ்கிப்
பின்னர்கைவலியஞ்சேர்வர்பெய்வளைக்கைப்பெம்மாட்டி. (அக)

சொன்னவைமுற்றுந்தீக்கைபெற்றிடார்தொழுதுதூய
பொன்னளவிலதந்தாலுமறிஞர்கள்புகறல்செய்யார்
கன்னிகாணென்னச்சூலக்கையினர்கழறக்காத
றுன்னப்பொன்னடியின்வீழ்ந்துதொழுதெழுந்துவகைசூழ்ந்தாள். (அஉ)

என்றகத்தீசரன்றங்கெம்பெருமாட்டிக்கின்பா
னன்றறைவேணியாதிமகிமைமகணவின்றருகுதன்
றுன்றியவேணிசூடுமுனிவர்களுவகைதன்ன
வென்றிசெய்விசேடபூசைசெய்முறைவிளம்பலுற்றும். (அங)

உபதேசப்படல முற்றிற்று.

---

## விசேடபூசைப்படலம்.

சித்திரைப்பௌர்ணமியறுவைச்செவ்விநா
ளொத்தநற்றினத்தகத்தீசர்க்கொப்பிலா
வுத்தமநெய்முதலாட்டியோங்கணி
பத்தியினணிந்தடிபணிந்துபண்பினே. (க)

அறுசுவையன்னமுமமைசிற்றுண்டியு
முறுசுவைக்கனிகளுமூவப்பினூட்டுவோ
ருறுமறுவினையெலாமோடவோதுறு
நறுவினைப்பலனெலாநாளுநண்ணுவார். (உ)

## வேறு.

இடபமதிப்பௌர்ணமித்திதியினெய்தும்விசாகத்தெழினாளிற்
கடிமிக்குயர்வாழைப்பழமாங்கனியாசினித்தீங்கனியாட்டி
வடிவுற்றிடுமொன்பாலட்டமாங்காயூட்டிமரைமலர்ச்செவ்
வடிபொற்பொடுபோற்றிடுவோரெம்மமலனுலகத்தமர்வாரால். (௩)

நறுநீர்நாற்பக்கமுநிறுத்திநாற்கான்மணிமண்டபநடுவி
னுறுமன்பாற்பற்பலசிறப்புமுனாற்றியரனையுறவிருத்திப்
பெறுநீர்மையினால்வேனில்விழாப்பெரிதுபுரிவார்பெருவினைக
ளிறுநேரில்லாப்பேரின்பமெய்திவாழ்வரெஞ்ஞான்றும் (௪)

மிதுனமாதப்பௌர்ணமியின்மேவுங்கேட்டைவியனாளிற்
புதிதாம்பொன்மண்டபம்வட்டமாகப்புரிந்துபொலிமுக்கட்
பதியைநிறுவிப்பலமதுரக்கனிபண்பாட்டிப்பூசிப்போர்
மதிசேர்சடிலமுடிக்கடவுளுலகின்மகிழ்வின்வாழ்வாரால். (௫)

ஆனித்திங்களடைதருமுத்திரநாளகத்தீசுரனாரைத்
தானுத்தமவெட்டயிலமுதலபிடேகங்கடகவாற்றி
யேனித்திலம்பொன்னாபரணமியல்பினணிந்தாராதிப்போர்
வானத்தமரரடிபணிபெம்மானாருருவமருவுவரால். (௬)

ஆடிமாதமதிற்பூரமடைநாளகத்தீசுரரடிக்கட்
டோடுவிரிநன்மலர்தூவித்தொழுதுதுதிக்குந்தூயோர்கள்
பீடுபெருகும்பெருஞ்செல்வம்பெற்றுப்பெருநாள்வாழ்ந்துபினர்ச்
சேடுசெறியுமரனுலகுசேர்ந்துமகிழ்வுதிளைப்பாரால். (௭)

சிங்கத்திங்கண்மூலத்திற்செயிர்தீரகத்தின்மகிழ்செறியக்
கங்கைச்சடைச்செஞ்சோதிமயக்கயிலைநாதன்கழல்பூசித்
திங்கற்பொடுநற்பிட்டேட்டுகின்றோபவத்தினமெல்லா
மங்கிக்கட்பஞ்செனவகலவழிவிலின்பமனுபவிப்பார். (௮)

கன்னித்திங்களிமயவரைக்கன்னிகளிப்பக்காதன்மிகத்
துன்னவராத்திரிபூசைமுறையிற்புரியுந்தூயோர்கண்
மன்னுமுலகமேவல்செயமகாவைபவச்செல்வம்மருவி
மின்னும்பதவிமேவிமகிழ்மேன்மேன்மேவமேவுவரால். (௯)

துலாமாதத்துப்பௌர்ணமியிற்சுதையோதனந்தன்னுறுநீற்று
நிலாவைத்திடுசெஞ்சடையுடையநிமலற்கபிடேகித்திடினேர்
சுலாவுமவிழோரொன்றனக்கோர்கற்பமளவில்சுகப்பதவி
குலாவியமரர்கொண்டாடக்கோதில்வாழ்வுகூடுவரால். (௧௦)

தேண்மாதத்திற்கார்த்திகைகாட்டிகழுமலர்தூவிப்பூசித்
தேண்சேர்புரங்களெரியநகைத்திட்டோற்கவிரேர்சுடரிடுவோர்
மாண்சேர்தருவாசனைகமழுமமலவடிவுமகிழமரீஇக்
காண்டேவர்கள்கொண்டாடவுயர்கதிசேர்ந்துவகைக்கடற்படிவார். (கக)

தனுமாதத்தின்வைகறையிற்சதாபூசனைதான்றகச்செய்வோர்
துனுமாமலமற்றுயருமருட்டுறையிற்படிவர்சொன்மதியின்
மனுமாதிரைநாணெய்யாட்டிமருவார்கலவைமகிழ்ந்தணிவோர்
பனகாபரணப்பரமனருட்பௌவம்படிவர்பவமற்றே. (கஉ)

மகரத்திங்கண்மாவூர்ந்தெம்மான்வந்திடக்கைமலர்குவிப்போர்
புகரற்றுயர்மாவூர்க்துகதிபுக்குப்போகம்புதிதுண்பார்
பகரம்மதிபூசம்வருநாட்பரமர்பதத்தாமரைபணிவோர்
ரிகரற்றுயர்சொர்க்கத்தின்பநேர்ந்துநீடுவீடடைவா (கங)

மாகமகத்திற்சிவனிரவின்மதிசேர்சடையோன்மலரடியை
யோகையுடன்பூசித்தோர்வேண்டுறுபோகஞ்சேர்வாருமைய ்ள்
பாகன்றனைப்பங்குனிவருமுத்திரநாட்பயிலுற்சவம்பார்த்தே
வாகையுடன்போற்றிடுவோர்நேரில்லாமுத்திமருவுவரால். (கச)

வருடம்வருநாண்மதிவருநாள்வழுத்துமயனமோரிரண்டே
கருதுகுருவேபன்ஞன்கேகாசில்பன்மூன்றிருநான்கே
பொருவிறிங்கட்டினமென்னப்புகலின்ஞளிற்பூசிப்போ
ரிருமாவினையுமற்றின்பமெய்திவாழ்வரெஞ்ஞான்றும். (க௫)

செப்புநாள்கடனிற்பூசைசெய்யாரேனுஞ்செய்தபய
னொப்பும்புனிதருலாப்போம்பங்குனியுத்திரச்சாறுறநோக்கிக்
கப்புமகிழ்வாற்கைதொழுவோர்கனமார்பாவக்கட்டையறுத்
தொப்பற்றுயரும்பதவியைப்பெற்றுவகைக்கடலினுட்குளிப்பார். (கசு)

தொன்றுபொதியமலைமுனிவனியற்றும்பூசைத்துறைமுறையே
யன்றின்றின்றளவுமேற்புகறுளன்பினமலனடியிணையை
நன்றுபுரிந்தாராதித்துநவைகடீர்த்துநன்முத்தி
துன்றினவர்கடொகையையெடுத்துரைப்பாராரித்தொல்லுலகில். (கஎ)

வேறு.

அருமறைமுடியின்வைகுமகத்தீசர்மா. ்யத்தைப்
பெரிதுரைபுராணந்தன்னைப்பெட்பொடேடிப்போர்கேட்போ
ருரியநற்பொருளுரைப்போருவகையிற்பூசிப்போர்கள்
கரிசெலாங்கரியக்கங்காதரன்பதங்கலந்துவ ாழ்வார். (கஅ)

அன்னவாகனன்காணுச்சீரடியகத்தீசர்மேன்மை
பன்னுமிப்புராணந்தன்னைப்படிப்பவர்மகிழப்பண்பா
ரன்னநற்சொன்னமாடையணிகுடைசிவிகையென்று
மின்னனகொடுப்போரீசனெழிற்பதத்தினிதுவாழ்வார். (௧௯)

ஒப்பிலாவகத்தீசர்க்காமுளமகிழ்சிறப்புச்செய்வோர்க்
கெப்பெரும்பேறுண்டாமோவப்பெரும்பேறீண்டெய்து
மிப்பெரும்புராணத்திற்காமெழிற்சிறப்பியற்றுவோர்கட்
கப்பணிசடையெம்பீசனாருள்தனான்மாதோ. (௨௦)

அணிகொள்தாராபுரத்திலமர்ந்தடியேனையீர்த்தங்
இணையிலாத்தன்னையென்றுமெய்துபுன்சொல்லாற்பாடத்
துணிவளித்தருளகத்தீசுரருயாசோதியாய
மணமலரடிகளென்னெஞ்செனுமரைமலரின்வாழ்க. (௨௧)

வேதியர்தொழில்வாழ்கமாதமும்மாரிமிக்குத்
தீதறப்பொழிகசைவச்செந்நெறிசெழிக்கவேந்த
ரோதுசெல்வத்தோடோங்கவானினமுயர்கவும்பா
நாதனல்லடியார்நாளுநாளுநன்கடைகமாதோ. (௨௨)

சிந்துவெண்டிரைசூழ்ஞாலமுழுவதுஞ்செல்வஞ்சேர்க
வைந்தெழுத்துயாகநீறிவ்வகலிடமுற்றுமாகச்
செந்திருசெழிக்கவேதமாகமம்வளர்கசெவ்விக்
கந்தனுமயிலும்வேலுங்கமலநேர்கழலும்வாழ்க. (௨௩)

உலகெலாம்வாழிதேவரோதகத்தீசர்வாழி
யிலகெழிலகிலாண்டேசுவரியிணையடிகள்வாழி
குலவுதாராபுரப்போக்கோநகர்வாழியவ்வூர்ப்
பலசனசமூகம்பற்பல்பல்லாண்டுவாழிவாழி.

ஆ திருவிருத்தம் - எசாங.

தாராபுரதலப்புராணம் முற்றிற்று.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திரு |
|---|---|---|---|---|
| ௩ | ௧௪ | ௨ | கௌவுமார | கௌ |
| ௧௪ | ௩0 | ௨ | சிறி | சிவி |
| ௧௮ | ௯0 | ௩ | விற்விற் | விற் |
| ௨0 | ௭௯ | ௪ | யெறு | பெரு |
| ௨௯ | ௨௨ | ௧ | நோக்சி | நோ |
| ௩௮ | ௨0 | ௪ | போதோ | போ |
| ௪௧ | ௪௩ | ௧ | வபப்ற | வப்ப |
| ௪௨ | ௪௯ | ௨ | ஞான | ஞால |
| ௫௨ | ௪௯ | ௩ | கலைக் | கலைச் |
| ௯௩ | ௧௩௯ | ௧ | மெழுகா | மெழி |
| ௭௭ | ௫௮ | ௧ | கன்னகோ | கன |
| ௭௮ | ௯௪ | ௪ | மாயை | மாலை |